www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்


கோப்பு : 14 திபி. 2031 : விடை
மடல் : 5 கி.பி. 2000 : மே விலை ரூ.5.00





## ஈழ விடுதலையை இந்தியா எதிர்ப்பது ஏன்?

படிப்பகம்

www.padippakam.com




## நவீனத்துவப் பிற்போக்கு

'தமிழர் கண்ணோட்டம்' மார்ச் -ஏப்ரல் 2000 இதழில், மயிலாடுதுறை க. செல்வராசு அவர்களின் "பின் நவீனத்துவம் என்பதைச் சுருக்கமாக விளக்க முடியுமா?" என்கிற வினாவிற்குரிய நிகரனின் விடையில் எனக்கு உடன்பாடில்லை.

ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மேலைத் தேவ பாஷைகளின்புதுப்புது 'வேத' ங்களைத் தமிழ் போன்ற 'நீச்ச' பாஷைகளில் எழுதியருளி வரும் பேரறிஞர்கள், அத் தேவ பாஷைகளின் இயல்பு குன்றாமல், **Post** பின் **Modernism** நவீனத்துவம் எனச் சொல்லுக்குச் சொல் தமிழ்ப் படுத்தித் தந்துள்ளார்கள் தமிழ்த் தொடரமைப்பில் இது மாறாக் விளங்கிக் கொள்ளப்படலாம். **Postgraduate** என்பதைப் பட்ட மேற்படிப்பு எனத் தமிழாக்கியிருப்பதைப் போல, நவீனத்துவத்திற்குப் பின்னைய போக்காகிய போஸ்ட் மாடனிசத்தை நவீனத்துவப் பிற்போக்கு எனலாம் என எளியேனுக்கு தோன்றுகிறது. இது சொல்லாக்கம் பற்றிய பிரச்சினை. கருத்து அல்லது கருத்தியல் என்ன என்கிறீர்களா? ஒரு வினாவிற்கு ஒரே விடை என்கிற ஒற்றைமை மனப்பான்மையை விட்டு விட்டு மற்றைமை பேணுவீர்களாயின் புரியும். புரியாது. புரிந்து புரியாது. புரியாமல் புரியும்.

மொழி- அதிலும் தமிழ் - ஓர் ஒடுக்குமுறைக் கருவி. ஆனால் ஒடுக்கு முறைக் கருவி மட்டும் அல்ல கட்டுடைக்கவும் செய்யலாம். தமிழைத் தமிழால் கட்டுடைக்கும் போது கிடைக்கும் புதுத்தமிழும் ஒடுக்குமுறைக் கருவியாகலாம். அதையும் அதனால் கட்டுடைத்துப் புத்தம் புதுத் தமிழ்... புத்தம் புத்தம் புது... புத்தம் புத்தம புத்தம புது... தமிழைத் தமிழ்களாக்க வேண்டும்.

என 'கள்' 'பெயர்கள்' மதிவாணன்கள் உங்கள் பெயர் செல்வராசு அவர்கள் 'கள்' 'பெயர்கள்' ...

பா. மதிவாணன்
தஞ்சாவூர் - 613 009.

## பெண் கவிஞர்க்குப் பாராட்டு

அ. சுபாஷினி அவர்கள் புதியதோர் உலகம் செய்வோம் என பெண்களை மட்டும் அழைக்கிறார். பெண்ணின் நிறம் மட்டும் மாறி இருக்கிறது நிலையல்ல என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மற்ற பெண் கவிஞர்களிடம் இருந்து மாறுபட்டவர். பெண்களின் வளர்ச்சியைப் பகுத்தறிவோடு பார்க்கச் சொன்ன கவிஞருக்குப் பாராட்டுகள்.

- கு. பாலன்
திருநின்றவூர்.

## தாரா பாரதியின் கவிதை வரிகள் சாவதில்லை

கவிஞர் தாராபாரதி காலமானார் என்று 14.5.2000 அன்று வானொலி அறிவித்தபோது நம்ப முடியவில்லை. அதிர்ச்சியும் சோகவும் மனதை வாட்டின.

அண்மைக் காலமாக உடல் நலக் குறைவுடன் இருந்தாலும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு வந்து விடுவார். பாரதி தமிழ்த் தேசிய இலக்கும் இடது சாரிச் சிந்தனையும் ஒரு சேர அமையப் பெற்ற கவிஞர்.

"வெறுங்கை என்பது மூடத்தனம் உன் விரல்கள் பத்தும் மூலதனம்" என்ற வரிகள் தந்த கவிஞர் தாராபாரதி என்றென்றும் தமிழர் நெஞ்சில் குடியிருப்பார்

கவிஞர் தாரா பாரதிக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்

-ஆசிரியர்


# தமிழர் கண்ணோட்டம்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ.5.00 |
| ஆண்டுக் கட்டணம் | : | ரூ.60.00 |
| வாழ்நாள் கட்டணம் | : | ரூ.600.00 |

கிடைக்குமிடம்:
*53(அ) சமீன்தார் குடியிருப்பு,*
*புது ஆற்றுச் சாலை,*
*தஞ்சாவூர் - 613 001.*
*தொலைபேசி : 32994*


படிப்பகம்

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்
மே 2000

தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை
கொடுப்போம்
தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம்
படைப்போம்

# இறையாண்மைப் புனிதம் எதுவரை?

இலங்கையில் நடக்கும் போர் ஒரு தனித்த நிகழ்வல்ல. உலகப் போக்கின் ஒரு பகுதி அது. தேசிய இன விழிப்புணர்ச்சியும் தேசிய இன விடுதலைப் போருமே இன்று வரலாற்றுச் சக்கரத்தை சுழற்றி விடுகின்றன.

தேசிய இன விடுதலைப் போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் விரிவான வடிவம் தவிர வேறல்ல. ஏகாதிபத்தியங்களிடமிருந்து விடுதலை பெற காலனி நாடுகள் நடத்திய போராட்டத்தின் இன்னொரு வடிவம் தான் தேசிய இன விடுதலைப் போராட்டம். அயர்லாந்து விடுதலையை மார்க்ஸ் ஆதரித்ததும் ஸ்வீடனிலிருந்து நார்வே பிரிந்ததை லெனின் ஆதரித்ததும் இவை வர்க்கப் போராட்டத்தின் விரிவான வடிவம் என்ற கருத்தில் தான். இந்திய தேசிய வெறிக்குப் பலியாகி விட்ட பூர்வீகக் கம்யூனிஸ்ட்டுகள் இந்த வடிவிலான வர்க்கப் போராட்டத்தை எதிர்க்கிறார்கள். தங்களது, மனம், நிரந்தரமாக வரித்துக் கொண்ட சிலவகை வர்க்கப் போராட்டங்கள் குறித்த கனவுலகில் அவர்கள் வாழ்கிறார்கள்.

முதலாம் உலகப் போரில், காலனியாதிக்க நோக்கம் கொண்ட தங்களது நாட்டு அரசுகளுடன் சேர்ந்து கொண்ட இரண்டாவது அகிலக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் போல் இன்றைய இந்திய தேசியவாத கம்யூனிஸ்ட்டுகள்,பாரதிய ஜனதாக் கட்சியுடனும் காங்கிரஸ் கட்சியுடனும் கைகோத்துக் கொண்டு தேசிய விடுதலை இயக்கங்களை எதிர்க்கிறார்கள். இப்படியாக அரசை நடத்துவோரும் அரசை எதிர்க்கும் 'புரட்சி'யாளர்களும் நிரந்தரமாக ஓரணியில் நிற்கிறார்கள்.

இந்திய ஆளும் வர்க்கமும் அதனை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு அதன் நிழலில் இளைப்பாறும் பூர்வீகக் கம்யூனிஸ்ட்டுகளும் ஈழவிடுதலைப் போரை ஏற்க மறுப்பதற்குக் கூறும் காரணம் "இலங்கையின் இறையாண்மையை மதிக்க வேண்டும்; ஒன்றுபட்ட இலங்கைக்குள் தான் தமிழர் குறைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்" என்பதாகும்.

"ஒரு நாட்டின் இறையாண்மை புனிதமானதில்லையா" என்று அவர்கள் கேட்கிறார்கள். இறையாண்மை புனிதமானதுதான்! ஆனால் எந்தப் புனிதமும் எல்லையற்றதல்ல.

காலனி நாடுகளைப் பங்கு போட்டுக் கொள்வதற்குப் போர் நடத்திய இங்கிலாந்தும் பிரான்சும் இறையாண்மைப் புனிதத்தின் பேரில்தான் அமைதி உடன்பாடு கண்டன. அது அது பிடித்த நாடுகள் அதனதன் வசம் இருப்பதை ஏற்க வேண்டும் என்பதே அந்தக் கால இறையாண்மை. அந்த ஏகாதிபத்தியங்களிடமிருந்து விடுதலைப் பெற்று, புதிய நாடுகளை உருவாக்கிக் கொள்வதே புதிய இறையாண்மை என்ற வளர்ச்சி பின்னர் வந்தது.

திருமண உறவு நிரந்தரமானது. புனிதமானதுதான். ஆனால் திருமண உறவு நீடிப்பது, பாம்பொடு வாழ்வது போல் ஆகிவிட்ட குடும்பங்களில் மணமுறிவு தான் புனிதமானது. அதுபோல், பெருந்தேசிய இன வெறியர்களால்

அனைத்துத் தொடர்புகளுக்கும்
பெ. மணியரசன்
ஆசிரியர்,
53(அ) சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001.
தொ.பே. : 32994

அச்சிட்டோர்
நீட் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 003.

வடிவமைப்பு
காவிரி கணிப்பொறி அச்சு,
தஞ்சாவூர் - 613 001.
தொலைபேசி: 70018

❖❖❖



படிப்பகம்

www.padippakam.com

ஒடுக்கப்படும் சிறு தேசிய இனம் விடுதலை கோருவது புனிதமானது.

பெருந்தேசிய வெறியர்களால் ஒடுக்கப்படும் சிறு தேசிய மக்கள் தங்கள் அடையாளம், அரசியல் உரிமை, பொருளியல் உரிமை, பண்பாட்டு உரிமை போன்றவற்றை இழந்து துன்புறும்போது சம வாய்ப்புகளுக்கு எவ்வளவோ முயற்சி செய்து பார்த்து விட்டு, வஞ்சிக்கப்பட்ட நிலையில் விடுதலை கோருகிறார்கள். அந்த நிலையில் ஒடுக்கும் தேசிய இனமும் ஒடுக்கப்பட்ட தேசிய இனமும் ஒன்றாக இருக்கும் நாட்டின் இறையாண்மையின் நிரந்தரத் தன்மை பற்றி யார் பேசினாலும் அவர்கள் ஒடுக்குபவர்களின் அணிவகுப்பில் நிற்கிறார்கள் என்பது தவிர வேறல்ல.

இலங்கையின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று பேசுகின்றவர்கள், சிங்களர்களின் மேலாதிக்கம் நீடிக்க வேண்டும் என்று பேசுவோர் ஆவர். இந்த வஞ்சகத்தை -பாரபட்சத்தை மூடி மறைக்க அவர்கள் "இறையாண்மை" என்ற ராஜதந்திர முகமூடி அணிந்து கொள்கிறார்கள்.

**திருமண உறவு நிரந்தரமானது. புனிதமானதுதான். ஆனால் திருமண உறவு நீடிப்பது, பாம்பொடு வாழ்வது போல் ஆகிவிட்ட குடும்பங்களில் மணமுறிவு தான் புனிதமானது. அதுபோல், பெருந்தேசிய இன வெறியர்களால் ஒடுக்கப்படும் சிறு தேசிய இனம் விடுதலை கோருவது புனிதமானது.**

வண்டியில் பூட்டி வசமாக அடித்தாலும் மாடு, எஜமானன் வீட்டுக் கட்டுத்தறிக்கு வர வேண்டும் என்பது போல, சாட்டையடியும் சாணிப்பாலும் கொடுத்தாலும் பண்ணையாள் நிலக்கிழாரின் நிழலில் கிடக்க வேண்டும் என்பது போல இந்த இறையாண்மை இன்று பயன்படுத்தப்படுகிறது. என்னதான் ஒடுக்கினாலும் பெருந்தேசிய இனத்தின் கீழ் சிறு தேசிய இனம் சிக்குண்டு கிடப்பதே இறையாண்மையின் புனிதம் என்கிறார்கள்.

இலங்கையின் இறையாண்மையை இரண்டாகப் பிரித்து, இலங்கை இறையாண்மை ஈழ இறையாண்மை என்று மாற்றிவிட்டால் இறையாண்மைக் கோட்பாட்டுக்குத் தீங்கு வந்திடாது.

கிழக்குத் திமோர் விடுதலைப் போர், கொசாவா விடுதலைப்போர் போன்றவற்றில் இந்தோனேஷிய, யுகோஸ்லேவிய நாடுகளின் இறையாண்மையை உலகம் ஏற்கவில்லை. வங்காள தேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இறையாண்மையை இந்தியா ஏற்கவில்லை. 1975 -ல் சிக்கிம் என்ற நாட்டை இந்தியாவுடன் இணைத்துக் கொண்ட போது அந்நாட்டின் இறையாண்மைக்குப் புனிதம் இல்லாமல் போயிற்று!

இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு இலங்கை ஒன்றாக இருப்பதுதான் நல்லது என்கிறார்கள். ஈழம் அமைவது எந்த வகையில் இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு எதிராகப் போகும்? இதை யாரும் விளக்குவதில்லை.

ஈழம் அமெரிக்காவின் கைப்பாவையாகி, அமெரிக்கக் கப்பற்படைத்தளத்தை தன் அருகே அமைக்க அனுமதிக்கும் என்பது போன்ற ஊகங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஐயத்திற்குரிய பாத்திரம் வகிக்கும் நாடுகள் இலங்கையும் இந்தியாவுமே தவிர ஈழம் அல்ல. தமிழீழ தேசியத் தலைமை எந்த வல்லரசுக்கும் கைப்பாவையாக மாறாது. அதன் நோக்கங்களையும் நடைமுறைகளையும் அறிந்தோர் இதையும் அறிவர்.

இலங்கை அரசுக்குப் பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகள் ஆயுதம் கொடுக்க அனுமதித்தால், இந்த வட்டாரத்தில் அந்த நாடுகளின் செல்வாக்கு மேலோங்கும். அந்த நிலை உருவாவது இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு உகந்ததல்ல என்று ஒரு கருத்து வைக்கப்படுகிறது.

அது பற்றி கவலை கொண்டால், இந்திய அரசு பகிரங்கமாக, இலங்கை உள்நாட்டு விஷயத்தில் தலையிடும் வகையில் வெளிநாடு எதுவும் இலங்கைக்கு ஆயுதம் விற்கக் கூடாது என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இப்படி அறிவித்தால் மற்ற நாடுகள் இலங்கைக்கு ஆயுதம் வழங்கத் தயங்கும். இது ஒரு வழி.

இன்னொரு வழி இருக்கிறது. வங்காள தேச விடுதலைப் போரை அங்கீகரித்தது போல், ஈழவிடுதலைப் போரை ராஜதந்திர மட்டத்தில் (இராணுவம் அனுப்பியல்ல) அங்கீகரித்து, ஈழம் பிறக்க உதவுவது. புதிய ஈழம் இந்தியாவின் நட்பு நாடாக இருக்கும் வகையில் நிலைமையைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வது.

வட்டார வல்லாதிக்கக் கனவுகளில் மிதக்காமல் புதிதாக உருவாகும் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு அதைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வது எப்படி என்று சிந்திப்பதே புதிய ராஜதந்திர உத்தி. தமிழ் ஈழத்தைத் தனக்கு நட்பு நாடாக ஆக்கிக் கொள்வதே இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு ஏற்ற செயல்.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்திற்குள் ஈழச்சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும் என்று வாஜ்பாயும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ரொம்பவும் கவலைப்படுகிறார்கள். இலங்கை அரசமைப்புச்சட்டத்தின் புனிதம் காப்பதில் இவர்கள் சந்திரிகாவையும் விஞ்சி நிற்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் மீது இவர்களுக்கு இவ்வளவு அக்கறை வந்ததற்குக் காரணம் இலங்கை இரண்டாகிப் போனால் இந்தியா துண்டாகிப் போகும் என்ற கவலைதான்!

இந்தியா ஒன்றாக இருப்பதும் பிரிந்து போவதும் இந்தியாவின் உள் முரண்பாட்டைச் சார்ந்த செய்தி. ஈழம் உருவானால் இந்தியாவில் பல தேசங்கள் உருவாகிவிடும் என்று கருதுவதும் ஈழம் உருவாகாவிட்டால் இந்தியா ஒன்றாகவே இருக்கும் என்று நம்புவதும் மூட நம்பிக்கை!

வடகிழக்கிந்தியாவின் ஆயுதந்தாங்கிய விடுதலைப் போராட்டங்கள் பிரபாகரனின் பள்ளிப் பருவத்துக்கு முன் எழுந்தவை. காஷ்மீர் விடுதலைப் போராட்டம் ஈழத்திற்காகக் காத்திருக்குமா?

இயக்கவியல் பொருள் முதல்வாதம் படித்து முரண்பாடுகளின் மோதல் பற்றி வகுப்பெடுக்கும் பூர்வீகக் கம்யூனிஸ்ட்டுகள், ஈழத்தின் பிறப்பைத் தடுப்பதன் மூலம் இந்திய தேசியத்தைக் காப்பாற்றி விட முடியும் என்று நம்புவது கையாலாகாத் தனமின்றி வேறல்ல.

இலங்கை அரசமைப்புச் சட்டம் மட்டுமல்ல, எந்த அரசமைப்புச் சட்டமும் நிரந்தரமானவை அல்ல! புதிய விதிகள் உருவாகும்போது பழைய விதிகள் மீறப்படுகின்றன.

**இந்தியா ஒன்றாக இருப்பதும் பிரிந்து போவதும் இந்தியாவின் உள் முரண்பாட்டைச் சார்ந்த செய்தி. ஈழம் உருவானால் இந்தியாவில் பல தேசங்கள் உருவாகிவிடும் என்று கருதுவதும் ஈழம் உருவாகாவிட்டால் இந்தியா ஒன்றாகவே இருக்கும் என்று நம்புவதும் மூட நம்பிக்கை!**

மத்திய அரசின் கைகளைக் கட்டிப்போட விரும்பவில்லை என்கிறார், இந்த மாஜி மாநில சுயாட்சி வீரர். மாநில முதல்வர் என்பவர் மத்திய அரசின் கட்டுத்தறியில் கட்டிக் கிடக்கும் பிராணி என்பதாகத்தான் அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. இவரோ; மத்திய அரசின் கையைக் கட்டுமளவிற்கு அதிகாரம் பெற்று விட்டது போல் பிதற்றுகிறார். மத்திய அரசின் கையைக் கட்டிப் போடவில்லை என்றால் என்ன பொருள்? தில்லி அரசு இலங்கைக்குப் படை அனுப்பி ஈழவிடுதலைப்புலிகளை அழித்தாலும் எனக்குச் சம்மதமே என்று கருணாநிதி கூறுவதாகத்தான் பொருள்!

ஈழத்தமிழர்களைப் பாதுகாப்பதற்காக தங்கள் இன்னுயிரை மடித்துக் கொள்ளும் விடுதலைப்புலிகள், வெல்லக்கட்டியைக் கடிப்பது போல் சயனைட் குப்பி கடித்து உயிர் துறக்கும் விடுதலைப் புலிகள், சாவுக்கும் நேரம் குறித்துக் கொண்டு, உடம்பெல்லாம் வெடி குண்டுகளைக் கட்டிக் கொண்டு சிங்களனின் படை முகாம்களிலும் கவசவாகனங்களிலும் மோதி அவர்களை அழித்துத் தாங்களும் அழிந்துபோகும் கரும்புலிகள், இளமைக்கனவுகளை மனதிலிருந்து எடுத்து எறிந்துவிட்டு, தமிழ் இனத்திற்கொரு நாடு அமைக்கப் போர்க்களத்தில் நிற்கும் இளம் ஆண்களும் பெண்களும் தமிழ் இனத்தை அழிப்பவர்களாம், மகன் மேயர், மருமகன் மத்திய மந்திரி என்று கணக்குப் போட்டு அரசியல் நடத்தும் கருணாநிதி அழியும் தமிழினத்திற்காக கண்ணீர் வடிக்கிறாராம்!

ஈழத்தமிழர்க்காதரவாக தமிழகம் ஒரே குரலில் பேசினால், பா.ஜ.க., காங்கிரஸ் போன்ற வலது சாரிகளும், சி.பி.எம். போன்ற போலி இடதுசாரிகளும் தங்களின். அசிங்கமான விருப்பங்களை அம்பலப்படுத்த அஞ்சுவார்கள். இங்கோ தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இனத்துரோகம் புரிவதில் போட்டி போடுகின்றன.

தமிழக சட்டப் பேரவையில் 4.5.2000 அன்று, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இந்திய அரசு இலங்கைக்கு படையையும் அனுப்பக்கூடாது, படைக் கருவிகளையும் அனுப்பக்கூடாது என்று முழங்கினார். மறு நாள் அவர் தில்லியில் வாஜ்பாயியைச் சந்தித்து விட்டு வரும்போது "நாட்டின் நலன் கருதி பொருத்தமான எந்த முடிவும் எடுப்பது மத்திய அரசின் உரிமை. அதில் தலையிட நாங்கள் விரும்பவில்லை. மத்திய அரசின் கைகளை நாங்கள் கட்டிப்போடவில்லை" என்று கூறிக் குட்டிக் கரணம் போட்டார்.

இதற்கும் மேல் 15.5.2000 அன்று சட்டப் பேரவையில், "தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களையே அழிக்கும் விடுதலைப்புலிகள் எவ்வாறு அந்த இனத்தைக் காப்பாற்ற முடியும்? விடுதலைப்புலிகளை எம்.ஜி.ஆர்.தான் ஆதரித்தார். தி.மு.க. டெலோவைத்தான் ஆதரித்தது" என்றார். கருணாநிதியின் இப்பேச்சு, துக்ளக்கில் சோ எழுதியது போல் இருக்கும்.

திராவிட நாட்டுக் கோரிக்கையை கூவத்தில் வீசிவிட்டு கோட்டைப்பதவிச் சுகத்தில் குதூகலிக்கும் இந்தக் கோழை தமிழினப் பாதுகாவலராம், வெங்களத்தில் நின்று விடுதலைப் போர் நடத்தும் புலிகள் தமிழ் இனத்தை அழிப்பவர்களாம், சிங்களனோடு சேர்ந்து கொண்டு விடுதலைப்புலிகளை அழிக்கத்திட்டமிட்ட அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம் போன்றவர்களை விடுதலைப்புலிகள் முந்திக் கொண்டு அழித்தார்கள். இல்லையேல் விடுதலைப்புலிகளை அவர்கள் அழித்திருப்பார்கள். விடுதலைப்புலிகளைக் கொன்ற டெலோவினரை விடுதலைப் புலிகள் கொன்றார்கள். பீடணனை அழித்திருந்தால் இராவணன் தோற்றிருக்கமாட்டான், அழிந்திருக்கமாட்டான்!



படிப்பகம்

www.padippakam.com

ஓட்டுப் பிச்சையெடுக்கும் இவர்கள் ரௌடிகளை அரசியல் தளபதிகளாக்கிக் கொண்டு அவர்கள் செய்யும் கொலைகளுக்கும் குற்றங்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கிறார்களே அது என்ன ஜனநாயகம்? ஆயுதந்தாங்கிய விடுதலைப்போரில் துரோகிகளை அழிப்பது உலகு தழுவிய உத்திதான்! தெரியவில்லை என்றால் பாலஸ்தீன விடுதலைப்போரின் வரலாற்றைக் கருணாநிதி ஆராய்ந்து பார்க்கட்டும்.

தமிழினத் தலைவர் என்று அவரது ஆதரவாளர்களால் வர்ணிக்கப்பட்ட கருணாநிதி எதிர்பரிணாம வளர்ச்சியடைந்து தமது கடைசிக் காலத்தில் இனத்துரோகி என்ற பட்டத்தை சுமந்து கொண்டுள்ளார்.

கன்னட நாட்டுக் காரிகைக்கு தமிழ்ப்பற்றும் தமிழ் இனப்பற்றும் ஏற்பட்டால் தான் நாம் வியப்படையவேண்டும். ஜெயலலிதா இயல்பாகவே தமிழ் இனத்திற்கு எதிரானவர். அந்த அம்மையார் "நான் என்றென்றும் விடுதலைப்புலிகளுக்கு எதிரி" என்கிறார். கருணாநிதிக்கு எதிராக ஓர் அரசியல் உத்தியாகக் கூட ஜெயலலிதா, இப்பொழுது ஈழத்தை ஆதரிக்கலாம். ஆனால் அந்த அம்மையார் தமிழன் விழிப்புணர்ச்சி பெற்று விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்.

இப்படிப்பட்ட சூழலில், தில்லிக்குப் பிறவிக் கண்காணிகளாகச் செயல்படும் தமிழகக் காங்கிரஸ் தலைவர்களான மூப்பனார், வாழப்பாடி போன்றோர் விடுதலைப் புலிகளை வீழ்த்த இந்தியா உதவி செய்ய வேண்டும் என்று கூச்சலிடுவதில் ஆச்சரியமில்லை. அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உமாநாத், இந்தியா படைக் கருவிகளை இலவசமாகக் கொடுக்க வேண்டும், இல்லையேல் விலைக்காவது விற்க வேண்டும் என்று கூறி அக்கட்சியின் தமிழ் இன விரோதப் போக்கை வெளிப்படுத்துகிறார்.

> மத்திய அரசின் கைகளைக் கட்டிப்போட விரும்பவில்லை என்கிறார் இந்த மாஜி மாநில சுயாட்சி வீரர். மாநில முதல்வர் என்பவர் மத்திய அரசின் கட்டுத்தறியில் கட்டிக் கிடக்கும் பிராணி என்பதாகத்தான் அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. இவரோ, மத்திய அரசின் கையைக் கட்டுமளவிற்கு அதிகாரம் பெற்று விட்டது போல் பிதற்றுகிறார். மத்திய அரசின் கையைக் கட்டிப் போடவில்லை என்றால் என்ன பொருள்? தில்லி அரசு இலங்கைக்குப் படை அனுப்பி ஈழவிடுதலைப்புலிகளை அழித்தாலும் எனக்குச் சம்மதமே என்று கருணாநிதி கூறுவதாகத்தான் பொருள்!

இரசிய, சீன, வியட்நாம் புரட்சிகளை சொல்லிச் சொல்லி இங்கு அரசியல் பிழைப்பு நடத்தும் இவர்கள் எதிரே ஈழத்தில் நடக்கும் விடுதலைப் புரட்சியைக் கண்டு நடு நடுங்குகிறார்கள். விலைக்காவது சிங்களனுக்கு ஆயுதம் கொடுக்கச் சொல்கிறார்களே எதற்காக! அந்த ஆயுதங்களைக் கொண்டு சிங்களர்கள் ஈழத்தமிழர்களையும் கொல்ல வேண்டும் என்பதற்குத்தான்! இந்திய தேசிய வெறியும் பார்ப்பனியச் சார்பும் கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் இனத்திற்கு எதிராக சிங்கள இனவெறியனுக்கு ஆதரவாக நிற்கத்தான் செய்யும்.

பார்ப்பனியத்தை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொள்ளும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தமிழ்நாடு தலைவர் காதர் மொய்தீன் "ஈழத்திலிருந்து தமிழ்நாட்டிற்குள் அகதிகளைக் கூட அனுமதிக்கக் கூடாது. அவர்களை செஞ்சிலுவைச் சங்கம் பார்த்துக் கொள்ளட்டும்" என்கிறார். விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் கட்சிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்கிறார். **(The Hindu 21.5.2000)**

தமிழ் வழிக் கல்விக்காக நாம் இயக்கம் நடத்தியபோது இதே மொய்தீன் தான் "தமிழ்த்துவாவைத் திணித்தால், தெருவில இறங்கிப் போராடுவோம்" என்று அறிக்கை வெளியிட்டார்.

தமிழ்பேசும் இஸ்லாமிய மக்கள் தமிழர்களே; அவர்களைத் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் எதிராக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திருப்பி விட நினைத்தால், தமிழ் முஸ்லீம்கள் அந்த சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு அவர்களுக்குப் பதிலடி கொடுக்க வேண்டும். காதர் மொயதீன் அணுகுமுறை கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களின் அணுகு முறைக்கு எதிராக, சிறுபான்மை மக்களை சிக்கலில் இழுத்துவிடும் அணுகுமுறையாக உள்ளதை இசுலாமிய மக்கள் அடையாளம் காண வேண்டும்.

தமிழகத்தில் கெடுநெஞ்சம் கொண்டோர்களால் உருவாக்கப்பட்டுள்ள கொடிய சூழலிலும் ம.தி.மு.க. தலைவர் வை.கோ., பா.ம.க. நிறுவனர் டாக்டர் இராமதாஸ் ஆகியோரின உறுதியான, ஈழ ஆதரவு பேருதவியாக உள்ளது. காயத்திற்கு மருந்து போடுவதாக உள்ளது. தில்லியில் வை.கோ. பிரதமா முதற்கொண்டு முக்கியமானோர் பலரைச் சந்தித்தும் மும்பை சென்று பால்தாக்கரேயைச் சந்தித்தும் நடத்தும தாழ்வாரப்பணி **(Lobby work)** பாராட்டிற்குரியது. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று பால்தாக்கரே அறிக்கை வெளியிட்டது பெரும் ஆறுதலாக இருந்தது.

புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி ஈழவிடுதலையை ஆதரித்தும் சிங்கள அரசைக கண்டித்தும் சென்னையில் (20.5.2000 ) இலங்கைத் துணைத் தூதரகம் முன் நடத்திய பெருந்திரள் ஆர்ப்பாட்டம் தாகத்திற்குக் கிடைத்த தண்ணீர்போல் தக்க நேரத்தில் தமிழினததிற்குத் தோள கொடுத்த செயலாகும்.

இந்திய அரசு இலங்கையின் உள்நாட்டுப



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினையில் தலையிடப் போவதில்லை என்றும் ஆனால் மனித நேய உதவிகள் செய்யும் என்றும் ஆட்சியாளர்கள் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். மனித நேய உதவி யாருக்கு?

பொருளாதாரத் தடைக்குள்ளாகி, மருந்துப் பொருட்களும், குழந்தை உணவும், உணவுப் பொருட்களும் மின்சாரமும் இல்லாமல் 1995 ஆம் ஆண்டிலிருந்து தவிக்கும் ஈழத் தமிழர்களுக்கு மனித நேய உதவிகள் ஏன் செய்யவில்லை. தமிழ் நாட்டில் சில அமைப்புகள் திரட்டிக் கொடுத்த மருந்துகளைக் கூட ஈழத் தமிழர்களுக்கு அனுமதிக்கவில்லை இந்திய அரசு. ஆனால் ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள ராணுவத்தினர்க்கு மனித நேய உதவி அளிக்கத் துடிக்கிறார்கள்.

தில்லி ஆட்சியாளர்களுக்கும் இந்து, ஃபிரண்ட்லைன், துக்ளக் போன்ற பார்ப்பனிய ஏடுகளுக்கும் தமிழர் அழிவில் எவ்வளவு மகிழ்ச்சி! சிங்களப் படையாட்கள் துயரத்தில் எவ்வளவு கவலை!

**இந்திய அரசு ஈழத்திற்குள் படையையோ, படைக் கருவிகளையோ அனுப்பினால், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்த கதையாக ஆகி விடும். ஈழம் பிறப்பதைத் தடுத்தால், அச்செயல் தமிழகத் தமிழர்களின் நெஞ்சில் சொருகப்படும் ஈட்டியாக இருக்கும். அக்காயம் என்றென்றும் ஆறாது.**

யாழ்குடா நாட்டில் சிங்களப் படையாட்கள் விடுதலைப் புலிகளிடம் சிக்கிக் கொண்டால் அவர்களைக் காப்பாற்ற மனித நேய உதவி செய்வார்களாம். எப்படி வெளியேற்றுவார்கள்? இந்தியப் படை விமானங்களையும், கப்பல்களையும் அனுப்பித்தானே சிக்கிக் கொண்ட சிங்களச் சிப்பாய்களை மீட்க வேண்டும். படை விமானமும் கப்பலும் சென்றாலே அது ஒரு இராணுவ நடவடிக்கை ஆகிவிடும். விடுதலை புலிகளோடு மோதுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொண்டு, முழுப்போரில் இந்தியா ஈடுபடக்கூடிய நிலை உருவாகும்.

யாழ்குடாவில் சிக்கியுள்ள சிங்களப் படையாட்கள் தப்பிச் செல்வதற்கு வசதியாகப் போர் நிறுத்தம் கோரினார் பிரபாகரன். ஆனால் சந்திரிகா அக்கோரிக்கையை நிராகரித்து விமானத்தாக்குதலில் இறங்கினார். தோல்வி மேல் தோல்வி கண்டு சிங்களப் படை இப்போது திக்குமுக்காடுகிறது.

அடுத்து, ஒரு வாரத்திற்குள் சரணடைந்தால், பெருந்தன்மையோடும் மதிப்போடும் நடத்தி சிங்களப் படையாட்களை 24 மணி நேரத்திற்குள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைப்போம் என்கிறார் பிரபாகரன், சிங்கள இளைஞர்கள் மீது சந்திரிகாவுக்கு அக்கறையிருந்தால், இந்தத் திட்டத்தை ஏற்க வேண்டும்.

இந்திய அரசு ஈழத்திற்குள் படையையோ, படைக் கருவிகளையோ அனுப்பினால், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்த கதையாக ஆகிவிடும். ஈழம் பிறப்பதைத் தடுத்தால், அச்செயல் தமிழகத் தமிழர்களின் நெஞ்சில் சொருகப்படும் ஈட்டியாக இருக்கும். அக்காயம் என்றென்றும் ஆறாது.

தமிழர்களை சந்தேகப் பட்டியலில் வைத்திருக்கும் தில்லியைத் தமிழர்கள் சந்தேகப் பட்டியலில் வைக்கத் தொடங்குவார்கள். அதனால் தமிழர்களுக்கு ஒன்றுக்கு இரண்டாகப் பலன் கிடைக்கும்.

சிங்களக் கொடியவர்களின் இனப்படுகொலையை நன்குணர்ந்த ஜார்ஜ் பெர்ணாண்டஸ் படை அமைச்சராக இருக்கிறார். சிங்களர்க்காதரவாகப் படை அல்லது படைக்கருவி அனுப்புவதை முடிந்த அளவு அவர் தடுப்பார் என்று தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்திய அரசு உடனடியாக ஈழத்தை அங்கீகரிக்காவிட்டாலும் இதையாவது செய்ய வேண்டும்.

1. இலங்கைக்குப் படை அல்லது படைக்கருவிகள் எதையும் அனுப்பக் கூடாது.
2. மனித நேய உதவி என்ற பெயரில் எதையும் இலங்கைக்கு அனுப்பக் கூடாது.
3. யாழ்குடாவில் சிக்கிக் கொண்ட சிங்களப் படையாட்களை வெளியேற்றுவதில் இந்தியா அக்கறை காட்டினால் விடுதலைப் புலிகளுடன் பேசி அவர்கள் ஒப்புதலுடன் அதற்கான திட்டம் செயல்வடிவம் பெற வேண்டும்.
4. நார்வே நாட்டினர் முயற்சியில் நடைபெறும் பேச்சு வார்த்தையில் இந்திய அரசு தலையிடக்கூடாது.

பக்கத்தில் நடக்கும் இவ்வளவு பெரிய சிக்கலில் இந்தியா தலையிடாமல் ஒதுங்கியிருப்பது சரியல்ல என்று கருதினால், அது விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி ஈழ தேசத்தை அங்கீகரித்து நட்பு நாடாக்கிக் கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# சாலினியார் மறைவு, தமிழர்களுக்குப் பேரிழப்பு!

தமிழ் அன்பர்களால் அம்மா என்றும், சாலினியார் என்றும் அன்போடும், மதிப்போடும் அழைக்கப்பெற்ற தமிழறிஞர் முனைவர் சாலினி இளந்திரையன் 28.4.2000 அன்று தில்லியில் சாலை நேர்ச்சியில் இறந்து போனார் என்ற அதிர்ச்சி செய்தி தமிழ் உணர்வாளர்களின் நெஞ்சில் ஈட்டியாய் பாய்ந்தது.



சென்னை தலை நகர் தமிழ்ச் சங்கம் தில்லியில் ஏற்பாடு செய்த தமிழ் இந்திய ஆட்சி மொழி மற்றும் செம்மொழி மாநாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்க முன் கூட்டியே சாலினியார் தில்லி சென்றிருந்தார். அம் மாநாட்டில் கலந்து கொள்ள தமிழ் நாட்டிலிருந்து வருவோரை வரவேற்க தில்லித் தொடர்வண்டி நிலையத்திற்கு சென்ற போது சாலை நேர்ச்சி(விபத்து) ஏற்பட்டு அம்மா அவர்கள் இறந்து போனார்கள்.

சென்னை மாநிலக்கல்லூரியில் தமிழ் முதுகலை படித்தபோது சாலையாருக்கும், சாலினியாருக்கும் காதல் அரும்பி, மணம் வீசி இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

சாலையாரும் சாலினியாரும் தமிழ்ப் பறவைகளாக தமிழ்நாட்டின் நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று தமிழ் வளர்த்தார்கள். தமிழ்த் தேசிய உணர்வை வளர்த்தார்கள்; சமத்துவ, பகுத்தறிவுக் கோட்பாடுகளை வளர்த்தார்கள்.

"வாழ்க்கை வரலாற்று இலக்கியம்", "பண்பாட்டின் சிகரங்கள்" முதலான நூல்களை எழுதிய சாலினியார் சாலையாரோடு இணைந்து பல நூல்களை உருவாக்கியுள்ளார்.

எழுத்து, பேச்சு மட்டுமின்றி தமிழுக்கும், தமிழர்க்குமான போராட்டங்களிலும் பங்கு கொண்டார்.

தஞ்சாவூரில் தமிழர் தேசிய இயக்கம் நடத்த இருந்த தமிழர் தன்னுரிமைப் பிரகடன மாநாடு அப்போதைய கருணாநிதி அரசால் தடைசெய்யப்பட்டது. அம்மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த சாலையார், சாலினியார் இருவரையும் கருணாநிதி அரசு கைது செய்து திருச்சி சிறையில் அடைத்தது.

குழந்தைச் செல்வம் இல்லாத சாலையாரும், சாலினியாரும் தமிழர் குழந்தைகள் அனைவரும் தங்கள் குழந்தைகள் எனக் கருதினர்.

சாலினியார் மறைவு தமிழுக்கும், தமிழர்க்கும் பேரிழப்பு ஆகும். சாலினியார் மறைவுக்குத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு

திருச்செந்தூரில் ஏப்ரல் முதல் நாள் ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு, பேரணி ஆகியவை எழுச்சியுடன் நடைபெற்றன.

பகத்சிங் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட பேரணிக்கு திரு மகாதேவன் (தமிழர் தேசிய இயக்கம்) தலைமை தாங்கினார். தோழர் காசிநாதன் (நகரச் செயலாளர்,த.தே.பொ.க.) பேரணியை துவக்கிவைத்தார். நகரில் பல்வேறு பகுதியின் வழியாகச் சென்ற பேரணி பெரியார் திடலில் முடிவடைந்தது. பெரியார் திடலில் நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சிக்கு தோழர் தமிழ்மாறன்(த.நா.மா.லெ.க.) தலைமை தாங்கினார்.

விடுதலை இராசேந்திரன் ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டை தொடங்கி வைத்தார். திருவாளர்கள் பழ.நெடுமாறன், பெ.மணியரசன், நா.அருணாசலம், தியாகு, புதுகை பாவாணன் உட்பட பலர் உரையாற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com



# இந்திய அரசியல் சட்ட மறுஆய்வு — மர்மம் என்ன?

இன்றைய இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 50 ஆண்டுகள் அனுபவத்தின் அடிப்படையில் இச்சட்டத்தினை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று டெல்லி அரசு (2.02.2000) முடிவு எடுத்துள்ளது. அதன் அடிப்படையில் "தேசிய அரசியல் சட்ட மறு ஆய்வுக்குழு" என்ற ஒன்றினை முன்னாள் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி எம்.என். வெங்கடாச்சலய்யாவின் தலைமையில் அமைத்துள்ளது. அவரைத் தவிர அக்குழுவில் 10 உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். இக்குழு செயல்படுவதற்கு ஏராளமான நிதியும் பிற வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இந்தக் குழுவும் இரண்டுமுறை கூடிவிட்டது. மேலும் அது தங்களுக்குத் துணை புரிய 10 துணைக்குழுக்களையும் உருவாக்கியுள்ளது. அந்த துணைக் குழுக்களில் நீதிபதி கிருஷ்ணய்யர் அவர்களும், சின்னப்ப ரெட்டி அவர்களும், தனியே சேர்க்கப்பட்டுள்ளனர். இந்து மறு ஆய்வுக்குழு ஒரு ஆண்டுக்கு மேல் செயல்படும் என்று தெரியவருகிறது. இந்தக்குழு அரசியல் சட்ட மறு ஆய்வு பற்றி பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர்களையும், தலைவர்களையும் சந்திக்கும். நாட்டு மக்களும் இக்குழுவோடு தொடர்பு கொள்ளலாம். நேரடியாகவும் சந்திக்கலாம். எழுத்து மூலமாகவும் கருத்து தெரிவிக்கலாம்.

இவ்வாறாக இக்குழுவானது தனது பணியினை முடித்து அதன் அறிக்கையினை பிரதமரிடம் அளிக்கும். பிரதமரும் அவரது அமைச்சரவையும் கூடி கலந்து பேசி அவர்களது முடிவுகளையும் குழுவின் அறிக்கையினையும் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வைப்பார்கள். நாடாளுமன்றம் அம் முடிவுகளை ஏற்றுக் கொள்வதும்- கொள்ளாததும் பிறகுதான் தெரியும். அநேகமாக இந்த நாடாளுமன்றத்தில் இவர்களது எந்த முடிவிற்கும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்க வழியில்லை. எனவே, இந்த மறு ஆய்வுக்குழு எந்த வகையிலும் பயன்பட போவதில்லை. நாட்டு மக்களின் வரிப்பணம் வீணாவதுதான் கண்ட பலன்.

இன்றைய அரசியல் சட்டத்தினை மறு ஆய்வு செய்யும் முயற்சி இன்றைய சூழலில் தேவைதானா என்பதற்கு விடைகாணும் முன்னர் இந்தச் சட்டம் எத்தன்மையது என்பது பற்றி ஓரளவாவது அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இந்திய அரசியல் சட்டம் வெங்கடாசலய்யா குழுவைப் போல மக்களுக்கு தொடர்பே இல்லாத யாரோ நான்கு பேர்களைக் கொண்ட ஒரு குழுவால் உருவாக்கப்பட்டதல்ல. அது, இன்றைய நாடாளுமன்றத்தின் தாயாகக் கருதப்படும் மையச் சட்ட மன்றம் எனப்படும் சென்ட்ரல் அசெம்பிளியால் உருவாக்கப்பட்டதாகும். ஆங்கிலேயர் இந்த நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு 10 மாதங்களுக்கு முன்னர்(1946) நாடு முழுவதும் ஒரு தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் முதலில் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் மத்திய சட்ட மன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். அதாவது, இன்றைய மாநில சட்டப் பேரவை உறுப்பினர்கள் மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது போல. அவ்வாறு மாநில சட்டமன்ற உறுப்பின்ர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மத்திய சட்டசபைக்கு இரண்டு வேலைகள் உண்டு. ஒரு வேலை, இன்றைய நாடாளுமன்றம் போல, அவ்வப்போது தேவைப்படும் சாதாரண சட்டங்களை இயற்றுவது மற்றொரு வேலை இந்த அரசியல் சட்டத்தை உருவாக்குவது. அந்த நேரத்தில் இந்த அவைக்கு அரசியல் நிர்ணய சபை என்று பெயர். அதாவது சாதாரண சட்டங்களை இயற்றும்போது மத்திய சட்டசபை; அரசியல் சாசனத்தை உருவாக்கும் போது அரசியல் நிர்ணய சபை என்று பெயர்.

இவ்வாறான அரசியல் நிர்ணயசபை 1946ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் 1949-ஆம் ஆண்டு நவம்பர் முடிய சுமார் மூன்று ஆண்டுகள் கூடி விவாதித்துத்தான் இந்த அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள 395 கூறுகளும் ஒவ்வொன்றாக அரசியல் நிர்ணய சபையின் முன் வைக்கப்பட்டு பிரிவு பிரிவாக அலசி எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டவையாகும். ஏறக்குறைய நான்காயிரம் திருத்தங்கள் முன்மொழியப்பட்டு, அவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளவும்பட்டிருக்கின்றன. இதில் நம்ப முடியாத ஒரு உண்மை, எந்த பிரிவும் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்ற

- தஞ்சை அ.இராமமூர்த்தி
(அனைத்திந்திய பார் கவுன்சில் உறுப்பினர்)



படிப்பகம்

www.padippakam.com

தேவையில்லாத நிலையில் ஒரு மனதாகவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதாகும்.

இந்த அவையின் தலைமைப்பொறுப்பினை மூன்று ஆண்டுகள் ஏற்று நடத்தி இறுதியாக 1949ம் ஆண்டு நவம்பர் 26ம் நாள் தனது கையொப்பத்தினை பதித்து, இச்சட்டம் 1950ம் ஆண்டு சனவரி, 26ம் நாள் முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவித்தவர் பாபு இராசேந்திர பிரசாத் ஆவார். இந்தச் சட்டத்தை உருவாக்கிய அமைப்பின் தலைவராக இருந்த அவர்தான், அதனை நடைமுறைப்படுத்தும் புதிய குடியரசின் தலைவரும் ஆனார். அவர் வெங்கடாசலய்யா குழுவில் உள்ள யாருக்கும் குறைவானவரல்லவே!

இந்தச் சட்டத்தின் அனைத்துக் கூறுகளையும் மற்றும் பட்டியல்களையும் எழுத்தெழுத்தாக எழுதிப்படித்து உருவம் கொடுத்து ஒவ்வொரு பிரிவையும் அவையில் முன்மொழிந்து, விவாதத்திற்கு பதிலளித்து நிறைவேற்றிய பெருமைக்குரியவர் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் ஆவார். இந்தச் சட்டத்தின் முகப்புரை, குறிக்கோள் போன்ற முக்கியமான அம்சங்களுக்கு முடிவாக உருவம் கொடுத்தவர் பண்டித ஜவஹர்லால் நேரு. குடியரசுத் தலைவரிலிருந்து மற்ற அனைத்துப் பொறுப்பிலும் உள்ளவர்களுக்கான அதிகாரங்களை வரையறை செய்து வழிவகுத்தவர் சர்தார் வல்லபாய்படேல் ஆவார். மற்றும் அரசியல் சட்டங்கள் பற்றிய அறிவினை அதிகப்படியாகவே பெற்றவர்கள் என்று புகழப்பட்ட அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், சர்தார் கே.எம்.முன்ஷி, பி.என்.ராவ் போன்றோரின் மூளையும் மையும் இச்சட்டத்தில் காணப்படாத இடமே இல்லை.

இவர்களில் யாரும் இன்றைய பிரதமரை விடவோ, அல்லது உள்துறை அமைச்சரை விடவோ இந்த நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் குறைவாக கவலைப்பட்டவர்கள் அல்லவே. அதே போல் அம்பேத்கரும் அல்லாடியும் வெங்கடாசலய்யா குழுவினரைவிட குறைவான அறிவுள்ளவர்களும் அல்லவே!

வேண்டுமானால் பழைய அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்கள் இன்றைய மக்களவை உறுப்பினர்களைப் போல் வயது வந்தோர் அனைவராலும் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல் என்று வாதிடலாம். வசதிபடைத்த வரிகட்டுவோர்க்கும், படித்தோர்க்கும் மட்டுமே வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்த அந்த நிலையில் அவர்கள் மொத்த வாக்காளர் தொகையில் சுமார் 13 சதவீதத்தினரால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்றும் கூறப்படுவதுண்டு. இந்த விமர்சனங்கள் உண்மையானவையே! ஆனாலும் அதைவிட வியப்பான ஒரு உண்மை என்னவெனில் அந்த அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் அனைவருமே(அநேகமாக) அடுத்து 1952ல் நடைபெற்ற, வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் நடந்த தேர்தலில் நின்று வெற்றி பெற்று சுதந்திர இந்தியாவின் முதல் நாடாளுமன்றத்தில் இடம் பெற்று விட்டனர். ஆகவே அந்த விமர்சனங்களில் அதிக வலு இருப்பதாக தோன்றவில்லை.

(தொடரும்)

## மே நாள் கொடியேற்று விழா

114-வது மே நாளை சிறப்பாககொண்டாடும் வகையில் த.தே.பொ.க., த.இ.மு. அமைப்புகள் சார்பில் கொடியேற்று விழாக் கூட்டங்கள் மிகச் சிறப்பாக எழுச்சியுடன் நடைபெற்றன.

### தஞ்சாவூர் நகரம்

டான்டெக்ஸ், த.தே.பொ.க. அலுவலகம், வலம்புரி, வடக்குவாசல், பழைய பேருந்து நிலையம், தங்கம் நகர், மருத்துவக்கல்லூரி, கலைஞர் நகர், புதிய பேருந்து நிலையம், முடியாண்டவர் காலனி,லாயம், அண்ணா நகர், புதுத்தெரு, தென்வெட்டுக்காரத்தெரு, கோரிகுளம் பகுதிகளில் தோழர்கள் பெ.மணியரசன், பழ.இராசேந்திரன், த.கா.பரமசிவம்,நா.வைகறை, ரெ.சிவராசு, இரா.சு.முனியாண்டி, ப.சந்திரசேகர்முத்துராசு இரா.பன்னீர்ச் செல்வம் கோ. மோகன் ஆகியோர் கொடியேற்றிச் சிறப்புரையாற்றினார்கள்.

### திருவையாறு ஒன்றியம்

நடுக்காவேரி குழிமாத்தூர், கடம்பங்குடி, கண்டமங்கலம், காமாராசநகர், மருவூர், மகாஇராசபுரம் பகுதிகளில் மே நாள் கொடியேற்றிவைத்து தோழர்கள் இராசேந்திரசோழன், சி.அன்பழகன், சக்திவேல் ஆகியோர் உரையாற்றினர்.

### பூதலூர் ஒன்றியம்

தோழர்கள் பா.கல்யாணி, குழ.பால்ராசு, ஆ.சண்முகம், ரெ.கருணாநிதி ஆகியோர் செங்கிப்பட்டி, சாணூரப்பட்டி, பாலையப்பட்டி, ஆச்சாம்பட்டி, வளம்பக்குடி, மனையேறிப்பட்டி, முத்து விரக்கண்டியன்பட்டி, ஆவாரம்பட்டி, பூதலூர், காமாட்சிபுரம், பழமார்நேரி, முல்லக்குடி, ஆர்க்காடு பகுதிகளில் மே நாள் கொடியேற்றிச் சிறப்புரையாற்றினர்.

### தஞ்சாவூர் ஒன்றியம்

வல்லம், வல்லம் புதூர், குருங்குளம், வாகரக்கோட்டை, பிளக்கன்சாவடி, உமையவள் ஆர்க்காடு, குருவாடிப்பட்டி, திருமலைச்சமுத்திரம், மொன்னையம்பட்டி பகுதிகளில் மே நாள் கொடியேற்றிவைத்து தோழர்கள் க.பழநிமாணிக்கம், பி.முருகையன், முனியமுத்து ஆகியோர் உரையாற்றினர். மொன்னயம்பட்டியில் பொதுக்கூட்டம் நடந்தது.

### சத்தியமங்கலம்

சத்தி த.தே.பொ.க. அலுவலகத்தில் தோழர் தமிழ் இனியன் தலைமையில் நடைபெற்ற மே நாள் விழாவில், தோழர் மணி கொடியேற்றினார். தோழர்கள் ச.அர. மணிபாரதி, நல், தமிழ் நாடன், செந்தமிழ் ஸ்டாலின், ஆகியோர் உரையாற்றினர்.

வெண் முகில் நன்றி கூறினார்.




படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசியத்தின் விழுதுகள்

கடந்த 25.07.1999 அன்று இரவு மயிலாடுதுறையில் மரண தண்டனை ஒழிப்பு மாநாட்டை நடத்தி முடித்துவிட்டு ஊர்தியில் நள்ளிரவில் திருக்கண்ணபுரம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். வண்டியில் திரு பழ நெடுமாறன், திரு நா.அருணாசலம் திரு பெ.மணியரசன் மற்றும் தோழர்கள் சிலரும் இருந்தனர்.

ஊரை நெருங்கி விட்டோம் ஊர்தி வெளிச்சத்தில் சாலை இரு ஓரங்களிலும் தென்னை மரங்கள் சல சலத்து வரவேற்றது தெரிந்தது. ஐயா அருணாசலம் சொன்னார், “இதுதான் எங்கள் ஊர், இந்தத் தென்னை மரங்கள் நான் வைத்தவை.”



ஊர் நன்மைக் கருதி தமது பணத்தைக் கொண்டு தென்னை மரங்களை நடச் செய்திருப்பார் என மற்றவர்கள் ஊகிக்கும் முன் அவர் சொன்னார் “நானே குழி தோண்டி நட்ட தென்னம் பிள்ளைகள் இவை. வருவாய்த் துறையில் வேலை கிடைப்பதற்கு முன் நான் கூலிவேலை செய்தேன். அப்பொழுது நட்டவை இவை.” என்றார் அருணாசலம்.

போலித்தனம் இல்லாமல் பளிச்சென்று பட்டவர்த்தனமாக பேசும் அவரது இயல்புக்கு இது போன்ற பல எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம். இன்று அவர் சுமார் 400 பேர்களுக்கு தமது நிறுவனங்கள் மூலம் வேலை கொடுத்து சம்பளம் வழங்கி வருகிறார். தாம் ஈட்டும் செல்வத்தில் ஒரு பகுதியை தமிழினத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும் செலவிடுகின்றார். ஆனால் வாழ்வின் தொடக்கத்தில் வறுமைப் புயலில் சிக்குண்டதை அவர் மறைக்கவில்லை.

**தமிழ்ச்சான்றோர் பேரவை நிறுவனர் நா.அருணாசலம்**

அடையாறு மாணவர் நகலகம் என்ற சிறு ஜெராக்ஸ் கடையை 1986-ல் அவர் தொடங்கிய போது அவ்வப்போது கடைக்குச் சென்று ரூ.50க்கும் 60க்கும் கொஞ்சம் கொஞ்சம் தாள் வாங்கி கடை நடத்திய அனுபவத்தை இன்றும் சுவையாக நினைவு கூர்கிறார்.

அந்த சிறு நிறுவனம்தான் இன்று சென்னையில் மட்டும் 20 கிளைகள் பரப்பி தொழில் துறை ஆலமரமாக விரிந்து பரந்து நிற்கிறது. இன்று அந்நிறுவனங்களுக்கான தாள்கள் சரக்குந்துகளில் வந்து இறங்குகின்றன.

அடையாறு மாணவர் நகலகம் ஜெராக்ஸ் நிறுவனம் மட்டுமல்ல, ஒளி அச்சு (Laser Printing), மறுதோன்றி அச்சு வரைகலை (CADD) என பல்வேறு துறைகள் கொண்டு கிளைப்பரப்பி நிற்கிறது. திருப்பதியிலும், மயிலாடுதுறையிலும் கிளைகள் இருக்கின்றன.

திகைக்க வைக்கும் இந்த வளர்ச்சி எவ்வாறு நடந்தது? வருவாய்த் துறையில் இளநிலை உதவியாளராக அடியெடுத்து வைத்த நா.அருணாசலம் 1992-ஆம் ஆண்டு விருப்ப ஓய்வு பெறும்பொழுது துணை வட்டாட்சியர் என்ற நிலைக்கு பதவி உயர்ந்து இருந்தார்.

அரசுப் பணியில் இருப்பது மாணவர் நகல வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லாததால் விருப்ப ஓய்வு பெற்றார்.

இவரது நிறுவன வளர்ச்சிக்கு முக்கியக் காரணங்கள் சில இருக்கின்றன. அதில் முதல் காரணமாக அவரது ஆளுமை விளங்குகிறது. தமக்குத் துணையாக தக்கவர்களைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளுதல், தொழிலாளர்களிடம் அனுசரணை போன்றவை அந்த முக்கிய காரணங்களில் சில. கண்டிப்பும் இருக்கிறது. கனிவும்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறது. இவாது நிறுவனங்களில் ஊழியர்களின் உழைப்பு போற்றத்தக்கது.

தந்தை பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட நா.அருணாசலம் இளமையிலிருந்து கருப்புச் சட்டைக்காரர். இப்பொழுது கருப்புச் சட்டை கொள்கைகள் நெஞ்சிலும் வெள்ளை உடுப்புகள் உடலிலும் என்ற தோற்றத்திற்குச் சொந்தக்காரர்.

பச்சை நாத்திகர், பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பாளர் என்றாலும் இவர் தமது சொந்த ஊரான திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள் கோயில் தீபமும் பூசையும் பாதிப்படையக் கூடாது என்பதற்காக மாதா மாதம் பணம் அனுப்பி வருகிறார். எங்கள் ஊரின் வரலாற்றோடு இணைந்து விட்ட கோயில் என்று காரணம் கூறுகிறார்.

தந்தை பெரியார் தமிழிசை மன்றம் என்ற அமைப்பைத் 1993 சனவரி 17-ல் தொடங்கி ஆண்டு தோறும் சனவரி மாதம் சென்னையில் ஒருவார காலத்திற்குத் தமிழிசை விழா கடந்த 6 ஆண்டுகளாக சொந்தச் செலவில் செய்து வருகிறார். பிரபலமான ஏ.கே.பழனிவேல், புஷ்பவனம் குப்புசாமி முதல் இனிமேல் தான் அறிமுகம் ஆக வேண்டும் என்ற நிலையில் உள்ள இளைஞர் வரை பலருக்கும் தமிழிசை விழாவில் வாய்ப்பளிக்கிறார்.

இளையராஜா, மாஸ்ட்ரோ விருது பெற்று வந்தபோது அவரைப் பாராட்டுவதற்குப், பெரியார் திடலில் நடந்த பெருவிழாவில் ஆசிரியர் கி.வீரமணி, பின்னணி பாடகர் ஜேசுதாஸ் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் போன்றோர்கள் விதந்து பேசினார்கள். அந்த விழா ஏற்பாட்டின் முதுகெலும்பாக நா.அருணாசலம் இருந்தார்.

தமிழர்களின் மொழி, பண்பாடு, அரசியல் ஆகிய உரிமைகளை மீட்கவும், இருப்பவற்றைப் பாதுகாக்கவும் கட்சி சார்பற்ற பொதுவான தமிழ் அமைப்பு ஒன்று தேவை என்று நா.அருணாசலம் சிந்தித்தார். அதன் விளைவு தமிழ்ச்சான்றோர் பேரவை! தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் அவர்களை அமைப்பாளராக்கி தமிழறிஞர்களையும், தமிழ் உணர்வாளர்களையும், பல்வேறு தமிழ் அமைப்புகளையும் இணைத்துத் தமிழ்ச்சான்றோர் பேரவையை நிறுவினார் நா.அருணாசலம். இது 1995 நவம்பர் 1-இல் நாடறியத் தொடக்க விழா கொண்டாடியது.

தமிழ்ச்சான்றோர் பேரவை பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தியிருந்தாலும், மொழிவாரி மாநில அமைப்பின்படி தமிழர்க்குத் தாயகமாக தமிழ்நாடு வரையறுக்கப்பட்ட நாளை (1956 நவ -1) தமிழகப் பெருவிழாவாக ஆண்டு தோறும் கொண்டாடுவது எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது.

1998 நவம்பர் முதல்நாள் சென்னையில் நடந்த தமிழகப் பெருவிழாவில் திருப்புமுனையாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் வழிக்கல்வியை செயல்படுத்தக் கோரி நூறு தமிழறிஞர்களும் தமிழ் உணர்வாளர்களும் சாகும்வரை பட்டினிப்போராட்டம் நடத்துவது என்பதே அத் தீர்மானம்.

தமிழகப் பெருவிழா செலவுகள் முழுவதையும் நா.அருணாசலம் ஏற்று வருகிறார். 1999 ஏப்ரல் 25ம் நாள் முனைவர் தமிழண்ணல் தலைமையில் தொடங்கிய 102 தமிழறிஞர்கள் தமிழ் உணர்வாளர்கள் பட்டினிப்போராட்டம் அதற்கு முன்னால் நடந்த பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட பெரும் பேரணி இவையெல்லாம் ஆங்கில ஆதிக்கத்தை வீழ்த்த மூன்றாவது மொழிப்போர் தொடங்குவதை கட்டியங்கூறி அறிவித்தது. தமிழகம் எங்கும் உள்ள தமிழறிஞர்கள் தமிழ் அன்பர்கள், இன உணர்வாளர்கள் ஆகியோரின் பங்கேற்பும் பங்களிப்பும் இந்நிகழ்ச்சிகள் சிறக்க அடிப்படைக் காரணம். எனினும் சாகும் வரையிலான பட்டினிப்போர் ஏற்பாடுகள் நா. அருணாசலம் என்ற அச்சாணியில் சுழன்றது என்பதை யாவரும் அறிவர்.

தமிழ்த்துறை அமைச்சர் தமிழ்க் குடிமகன் தமிழ் வழிக் கல்விக்கான உறுதிமொழி எழுதிக் கொடுத்த பின்னரே சாகும் வரை பட்டினிப்போர் நிறுத்திக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்வு தமிழ் உணர்வாளர்கள் இடையே பெரும் உற்சாகத்தை எழுப்பியது. தமிழ் வழிக் கல்விக்கான நிகழ்ச்சிகள் தமிழகம் எங்கும் நடக்கத் தொடங்கின.

நா.அருணாசலம் அவர்களை ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் பேரா.சுபவீரபாண்டியன் அவர்களைச் சிறப்பாசிரியராகவும் கொண்டு "நந்தன்" மாத இருமுறை இதழ் தொடங்கப்பட்டது. இது, தமிழ் உணர்வாளர்களுக்கு ஈழ விடுதலை ஆதரவாளர்களுக்கு இணைப்புக் கண்ணியாக விளங்குகிறது.

தமிழ் உணர்வாளர்கள், கலைஞர்கள், தமிழ் அமைப்புகள் ஈழத் தமிழர்கள் ஆகியோர்க்கு வெளியே தெரியாமல் நா. அருணாசலம் செய்யும் உதவிகள் அதிகம்.

பல்வேறு தொல்லைகள், அரசு அடக்குமுறைகள் ஆகியவற்றால் தமிழ்த் தேசியம் சாய்ந்து விடாமல் தாங்குகின்ற விழுதாக நா.அருணாசலம் போன்றோர்கள் விளங்குகிறார்கள். அவருக்கு 12.5.2000 அன்று அறுபது அகவை நிறைவடைகிறது. மணி விழா காண்கிறார்.

தமிழ்த் தேசிய விழுதான ஐயா அருணாசலம் அவர்களுக்கு எமது மணி விழா வாழ்த்துகள்.

தமிழ்ச்சான்றோர் பேரவை நடத்திய சாகும் வரை பட்டினிப்போர் காரணமாக தமிழ் வழிக் கல்விக்காக மோகன் குழு அமைக்கப்பட்டு, ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை தமிழ் அல்லது தாய்மொழி கட்டாயமொழிப்பாடமாகவும், பயிற்று மொழியாகவும் இருக்க வேண்டுமென தமிழக அரசு ஆணைப்பிறப்பித்தது. மெட்ரிகுலேசன் பள்ளி முதலாளிகள் அவ் ஆணையை எதிர்த்து தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் தமிழ் வழிக் கல்வி செல்லாது என்று தீர்ப்பு அளித்தது. ஆங்கில ஆதிக்கம் தொடர வாய்ப்பளித்தது.

மூன்றாவது மொழிப்போர் முழு வீச்சில் நடைபெற வேண்டிய தருணம் இது. இப்போரில் அருணாசலம் அவர்களின் பணி மிக முக்கியமானதாக இருக்கும்.

- த.க



படிப்பகம்

www.padippakam.com

# ஈழ விடுதலையை இந்தியா எதிர்ப்பது ஏன்?

- கி.வெங்கட்ராமன்


"இரு நூறு ஆண்டுகளுக்கு மேலாக அன்னிய ஆதிக்கத்தின் சின்னமாக இருந்த இந்தத் தளம், இங்கிருந்து தேவையானவற்றை அப்புறப்படுத்திய பிறகு, தகர்த்து தரைமட்டமாக்கப்படும். ஒரு சிறிய கட்டடம் மட்டும் நினைவுக்காக விட்டு வைக்கப்படும். இந்த வெற்றி நமது தாயகத்தை மீட்பதற்கான இறுதிப் போரில் முதல்படி"

ஆனையிறவுப் பெரும் சமரில் முக்கியப் பங்காற்றிய கிட்டு பீரங்கி படையணியின் தளபதி பானு ஆணையிறவில் புலிக் கொடியை - தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஏப்ரல் 23 அன்று காலை 9.55 மணிக்கு உரையாற்றியபோது மேற்கண்டவாறு கூறினார்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் நுட்பமான வழிகாட்டலில் ஆனையிறவு பெருஞ்சமர் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

"ஆனையிறவு வீழ்ந்தது" என்ற செய்தி உலகெங்கிலும் உள்ள தமிழர்களுக்குப் பெரிய இன்ப அதிர்ச்சியாக அமைந்தது. அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தமிழ் நாட்டில் உள்ள இன உணர்வாளர்கள் மகிழ்ச்சிக் கூத்தாடினர்.

அதே நேரத்தில் சிங்களப் பேரினவாதிகள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள 40,000 சிங்களப் படையினரைக் காப்பாற்றக் கோரி ஸ்ரீலங்கா அதிபர் சந்திரிகா அபாயக்கூக்குரல் எழுப்பினார். ஆனையிறவு வெற்றி தில்லியையும் அதிர வைத்தது.



ஆணையிறவில் புலிக்கொடியேற்றிய தளபதி பானு(வலது ஓரம்), பெண்புலிகள் தளபதி விதுஷா (இடது ஓரம்)

ஆனையிறவுப் படைத்தளம் என்பது இன்று நேற்றல்ல, கடந்த 240 ஆண்டுகளாக ஈழத் தமிழர்களை ஒடுக்குவதற்காக வென்றே நிலை கொண்டுள்ள இராணுவ முகாம் ஆகும். 1760-ல் ஒல்லாந்தர்களால் (டச்சுக்காரர்களால்) ஆனையிறவில் தளம் அமைக்கப்பட்டது. வன்னிப் பகுதியிலிருந்து விடுதலைப் போர் நடத்தும் தமிழர்கள் யாழ்குடாவை வென்று விடக்கூடாது என்பதற்காக நிறுவப்பட்டது இத்தளம். பின்னர் வந்த ஆங்கிலேயர்களும் இந்தத் தளத்தைப் பயன்படுத்தினர்; பலப்படுத்தினர்.

இலங்கை 'சுதந்திரம்' அடைந்தபோது, இது வனத்துறை மற்றும் சுங்கத்துறை அலுவலகமாக முதலில் பயன்பட்டது. ஈழத் தமிழர்கள் மீதான இன ஒடுக்குமுறையும், அதை எதிர்த்து ஈழத் தமிழர்களின் போராட்டமும் தீவிரப்படத் தொடங்கியவுடன் 1958 ஆம் ஆண்டு ஆனையிறவு, சிங்கள இராணுவமுகாமாக மாறியது. 1983 - ஜுலை படுகொலைக்குப் பிறகு தமிழீழ விடுதலைப் போர் தீவிரப்பட்டது. அப்போது இந்த இராணுவ முகாம், படைத்தளமாக விரிவுபடுத்தப்பட்டது. 'இந்திய அமைதிப்படை' ஈழத்தை ஆக்கிரமித்தபோது இத்தளம் மேலும் வலுப்பெற்றது.

யாழ்குடா நாட்டையும், வன்னித் தாயகத்தையும் பிரித்துக் குறுக்கே இரை விழுங்கிய மலைப் பாம்பு போல் கிடந்த இத்தளம், தமிழர்களின் போக்குவரத்தைத் தடைசெய்து, இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் இடையூறாக இருந்தது. இதனால், இப்படைத்தளம் எப்போதும் தாக்கப்படலாம் என அறிந்திருந்த சிங்கள அரசு இதனை மிகுந்த பாதுகாப்போடே வைத்திருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு படைத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கினர். அப்போது தமிழீழ விடுதலைப்புலிகள் பெரிதும் கொரில்லாப் போர் முறைகளையே கைக்கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட ஒரு மாத காலம் ஆனையிறவு தளம் புலிகளின் முற்றுகைக்குட்பட்டிருந்தது. ஆயினும் வெற்றிலைக்கேணி வழியாகக் கடல் வழியில் சிங்களப் படை தரையிறங்கி இத்தாக்குதலை முறியடித்தது. இச்சமரில் சிங்களப் படைக்கு பெருஞ்சேதத்தை ஏற்படுத்தியிருந்தாலும் புலிகள் தரப்பில் பல நூறு வீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

இதன் பிறகே கடற்புலிகள் பிரிவு தனியே வலுப்படுத்தப்பட்டது.

இதற்குப் பிறகு அடுக்கடுக்கான காவலரண்கள், துணை முகாம்கள், கடல் தளங்கள் ஆகியவற்றைக் கொண்ட மிகப்பெரும் தளமாக ஆனையிறவு வலுப்பெற்றது. 260 ச.கி.மீ. பரப்பில் பரவி நின்றது.

1991-94 வரையிலான சிங்களப் படைகளின் தாக்குதல்கள் மரபுப் போரின் அவசியத்தை உணர்த்தின.

இந்தப் பின்னணியிலேயே 1995 இடப் பெயர்வைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் அழைப்பை ஏற்று ஐந்து இலட்சம் ஈழத் தமிழர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்த வரலாற்று நிகழ்ச்சி 1995ல் நடைபெற்றது.

அப்போது சிங்களப் பேரினவாதிகள் கொக்கரித்தனர். இனி புலிகளால் தலை தூக்கமுடியாது என்று எக்காளமிட்டனர். ஈழச் சிக்கல் இத்தோடு முடிந்தது என்று உலகமும் கண்ணை மூடிக்கொண்டது.

உண்மையில், இனிதான் ஈழப்போரின் தன்மையே மாறப்போகிறது என்பதை இவர்கள் யாரும் உணரவில்லை. பிரபாகரனின் போரியல் நுட்பத்தை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

வடக்குப் பகுதியை விட்டு கிழக்கில் இடம் பெயர்ந்த பிறகு வலுவான மரபுப் படையணிகள் கட்டியெழுப்பப்பட்டன. தாயக விடுதலையில் இம்முயற்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட உலகெங்கும் சிதறி வாழும் ஈழத் தமிழர்கள் போர் நிதிக்கு வாரி வழங்கினர்.

தமிழீழ விடுதலைப் போருக்கான நீண்ட காலத் திட்டத்தை புலித்தலைமை உருவாக்கியது. 'ஓயாத அலைகள்' என்று இத் தொடர் சமருக்குப் பெயர் சூட்டினார் பிரபாகரன்.

"ஓயாத அலைகள் -1" ஜூலை 1996-ல் நடைபெற்றது. முல்லைத் தீவு மீட்கப்பட்டது. பெருந்தொகையான ஆயுதங்களை சிங்களப் படையிடமிருந்து புலிகள் கைப்பற்றினர். அடுத்து, 1998 செப்டம்பரில் நடந்த "ஓயாத அலைகள் -2" கிளிநொச்சியை மீட்டது. ஓயாத அலைகளின் வெற்றி தற்காலிகமானதாக இன்றி, நிலைத்த வெற்றியாக அமைந்தது. விடுதலை செய்யப்பட்ட பகுதிகளில் நிலையான ஆட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதே நேரத்தில் சிங்களத் தலைநகர் கொழும்பில் பல திடீர்த் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சிங்களப் படைக்கு பயிற்சி அளித்த அமெரிக்காவின் பச்சைத் தொப்பித் தளபதிகள் தங்கியிருந்த உலக வர்த்தக மையக் கட்டடம் தாக்கி நொறுக்கப்பட்டது. சிங்கள இராணுவத்திற்கு எரிபொருள் வழங்கிய எண்ணெய் வளாகமும் தீக்கிரையானது. இராணுவக் கூட்டுத் தலைமையகம் தாக்கப்பட்டது. கொழும்பு நகரமும் ஒரு போர் முனையானது.

இந்த வகையில் 2000 மார்ச் 13ல் கொழும்பு, தலைமைச் செயலகம் அருகில் பட்டப்பகலில் நடைபெற்ற அதிரடித் தாக்குதல் முக்கியமானது. "தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் வாளேந்திய சிங்கக் கொடியைப் பறக்க விட்டோம்" என்று இறுமாந்திருந்த சிங்களப் பேரின வாதிகள் கொழும்பிலேயே பத்திரமாக இருக்க முடியுமா என்று அஞ்சத் தொடங்கினர். கண்ணுக்குத் தெரியாத எதிரியை நினைத்து கதிகலங்கிப் போயினர்.

இந்தப் பின்னணியில் "ஓயாத அலைகள் 3" நவம்பர் 1999ல் தொடங்கியது. வன்னிப் பகுதி முழுதும் மீட்கப்பட்டதுடன் சற்று ஓய்ந்திருந்தது.

பிறகு டிசம்பர் 10 -ஆம் தேதியிலிருந்து புலிகளின் வடக்கு நோக்கிய நகர்வு திட்டமிட்ட வகையில் கொஞ்சம் கொஞ்சமாக நடந்தேறியது.

2000, மார்ச் 26 முதல் "ஓயாத அலைகள் - 3"ன் மூன்றாவது கட்ட நடவடிக்கைகள் தொடங்கின. யாழ் நோக்கிய நகர்வு உறுதியான முறையில் மேற்கொள்ளப்பட்டது. ஆனையிறவு படைத்தளத்தை முற்றுகையிடும் வகையில் புலிகளின் பாய்ச்சல் நடந்தது. ஆனையிறவின், தென் கிழக்கில் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, உடுதுறை, முல்லியன், நல்லதண்ணிதொடுவாய் முகாம்கள் அழிக்கப்பட்டு அப்பகுதிகள் மீட்கப்பட்டன. வடக்கில் புல்லாவெளி, மேற்கில் குறிஞ்சாத் தீவு ஆகியவை மீட்கப்பட்டன. இங்குள்ள சிங்களப் படை முகாம்கள் அழிக்கப்பட்டன. பல சிறிய முகாம்களை மூடிவிட்டு எதிரிகள் ஓடினர்.

பரந்தன், உமையாள்புரம் பகுதி பகைமுகாம்கள் வீழ்த்தப்பட்டதுடன் ஆனையிறவுக்கு நெருக்கடி தொடங்கியது. உமையாள் புரத்திலிருந்துதான் ஆனையிறவு தளத்தில் தங்கியிருந்த 15,000 படையினருக்குத் தண்ணீர் செல்ல வேண்டும். ஏனெனில் ஆனையிறவில் கிடைப்பது உப்புத்தண்ணீராகும்.

தெற்கிலிருந்து ஆனையிறவுக்கு உள்ள முக்கிய தொடர்பு வழி A9 நெடுஞ்சாலை என்று சொல்லப்படும் கண்டிவீதி நெடுஞ்சாலை. இதனை இரண்டு வெவ்வேறு இடங்களில் புலிப்படை ஊடறுத்து நின்றது. இந்தக் கண்டி வீதியைக் கைப்பற்ற சிங்கள இராணுவம் பலமுறை மோதிப்பார்த்தது;



படிப்பகம்

www.padippakam.com

முடியவில்லை. முந்தைய அனுபவத்தில் பாடம் கற்றிருந்த புலிகள் தாளையடி - செம்பியன்பற்று கடற்படை இராணுவக் கூட்டு முகாமை முன்னதாகவே கைப்பற்றியிருந்தனர்.

இந்த நிலையில் இயக்கச்சி ஆனையிறவு பெருந்தளம் முற்றிலும் புலிப்படையால் சூழப்பட்டிருந்தது.

அடுத்ததாக படுவேகமான தாக்குதல் ஒன்றின் மூலம் இயக்கச்சி தளத்தையும் பிடித்தனர். ஆனையிறவு பெருந்தளத்திலிருந்த 15000 சிங்களப் படையினர் வெறும் 4000 பேரே இருந்த புலிப்படையினரின் முற்றுகையில் சிக்கித் திணறினர். அவர்களது தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டது.

இரண்டு நாள் முற்றுகைக்குப் பிறகு சிங்களப் படை உளவியல் வழியிலும் மிரண்டு போயிருந்த சூழ்நிலையில் எல்லா பக்கங்களிலிருந்தும் புயல் வேகத்தில் புலிப்படை உள்ளே நுழைந்தது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர். ஆயுதங்களைப் போட்டுவிட்டு சந்திரிகா படையினர் சிதறிஓடினர். பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்கள், உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த ஆனையிறவு பெருஞ்சமரில் கிட்டு பீரங்கிப் படையணியினர் முக்கியப் பங்காற்றினர். விடுதலைப் புலிகளின் அதிரடிப்படைப் பிரிவினர், சிறுத்தையணியினர், விக்டர் கவச வாகனப் படை, சோதியா மகளிர் படையணி, சார்லஸ் அந்தோணி அதிர்டிப் படைப்பிரிவு ஆகியவை ஒருங்கிணைந்து பொருதனர்.



ஆனையிறவுச் சமரில் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சிங்களத் தளபதி (54-வது படைப்பிரிவு) பெர்சி பெர்னாண்டோ சவப்பெட்டி.

கடற்புலிகள் இப்பெருஞ்சமரில் பெருமளவில் துணை புரிந்தனர்.

வியட்நாம் விடுதலைப் போரில் 1953ல் நடத்தப்பட்ட தியன்-பியன்-பூ முற்றுகையை ஒத்த நிகழ்வாகும். அப்போது ஹோசி-மின் செம்படையிடம் 16,000 பிரெஞ்சு படையினர் சரண் அடைந்தனர். இப்போது ஆனையிறவில் பிரபாகரனின் புலிப்படையிடம் அடிவாங்கி 15,000 சிங்களப் படையினர் ஓடினர்.

ஏப்ரல் 22-ஆம் நாள் முழுதும் இச்சமர் முடித்து, நிலை கொண்ட பிறகு 23 -ஆம் நாள் காலை கிட்டு பீரங்கிப் படையின் தளபதி பானு ஆனையிறவு பெரும் தளத்தின் மையப்பகுதியில் கொடி ஏற்றினார். அதன் பிறகு உணர்ச்சி மயமான "நடை" நிகழ்ந்தது. வடக்கிலிருந்து பொதுமக்கள் சிலர் சுதந்திரமாக கைவீசி நடந்து தெற்கு நோக்கிச் சென்றனர். அதே போல் தெற்கிலிருந்து சிலர் வடக்கு நோக்கி நடந்தனர். கடந்த இரு நூற்றாண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக எந்த சோதனையிடலும், இழிவு படுத்தலும் இல்லாமல் மக்கள் சென்றனர். சுதந்திரக் காற்றை சுவாசித்தனர்.

இதையடுத்து விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். சாவகச்சேரி இராணுவ முகாம் தாக்கி, தகர்க்கப்பட்டது. கைத்தடி, குருநகர் பகுதிகள் இப்போது புலிகள் வசம். பலாலி விமானத்தளம் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. அது விழுந்து விடுமோ என்று சந்திரிகாவும் ரத்தவத்தேயும் நடுங்கிக் கொண்டுள்ளனர். கண்ணுக்கு எட்டும் தொலைவில் யாழ்ப்பாண வெற்றி உள்ளது.

தமிழீழ விடுதலைப் போர் இதுவரை என்றுமில்லாத அளவுக்கு உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவின் அணுகுமுறை என்ன என்பது ஆய்வுக்குரியது.

இந்திய ஆளுங் கூட்டணியில் உள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவை "தமிழீழமே தீர்வு" என்றும் "விடுதலைப் புலிகள் மீதுள்ள தடையை நீட்டிக்கக் கூடாது" என்றும் குரல் கொடுத்து வருகின்றன. சிவசேனை கட்சியும் இந்த நிலைப்பாட்டை ஆதரிக்கிறது. ஜார்ஜ் பெர்னாண்டசின், சமதாகட்சி மனித உரிமைச் சிக்கல் என்ற வகையில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக செயல்பட்டு வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகமோ தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக இங்கு யாரும் செயல்படக்கூடாது. விடுதலைப் புலிகள் மீதுள்ள தடையை நீட்டிக்கலாம் விடுதலைப்புலிகள் சகோதரக் கொலையில் ஈடுபட்டவர்கள். ஆனால், பேச்சு வார்த்தை மூலம் தமிழீழம் கிடைத்தால் மகிழ்ச்சியடைவோம் என்ற சூழ்ச்சியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இன்னொருபுறம் ராஜீவ் காந்தி காலத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட 'இந்திய அமைதிப்படை' ஈழத்தமிழர்களையும் புலிகளையும் கொன்று குவித்தது. இறுதியில் 1500 படைவீரர்களை இழந்து, ரூ.3500 கோடி வீண் செலவு செய்து தோல்வி முகத்தோடு திரும்பி வந்தது மறக்க முடியாத ஒன்று.

இன்று இந்திய அரசு காஷ்மீர் பிரச்சினையில் இராணுவ வகையிலும் அரசியல் வழியிலும் சிக்கிக் கொண்டுள்ளது. அஸ்ஸாம், மிசோரம், நாகாலாந்து போராட்டங்கள் நீடித்துக் கொண்டிருப்பதால் படையினர் பலர் அவற்றின் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் அறிவிப்பு ஊன்றி கவனிக்கத் தக்கது.

"இந்தியா தனது படையையோ, படைக்கலன்களையோ இலங்கைக்கு அனுப்பாது. ஆயினும் ஸ்ரீலங்கா அரசு கோரினால் மனிதாபிமான உதவி வழங்கப்படும். ஒன்றுபட்ட இலங்கை என்ற நிபந்தனைக்குட்பட்டு,தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். தமிழீழத்தை இந்தியா ஏற்காது. விடுதலைப் புலிகள் மீதுள்ள தடை நீடிக்கும் என்பதே வாஜபாய் அரசின் நிலைப்பாடு.

அதே நேரத்தில் 'இலங்கைத் தீவில் நடப்பது இந்தியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்து விடுமா என்று ஊன்றி கவனித்து வருகிறோம்' எனவும் இப்பிரச்சினையில் முற்றிலும் ஒரு தலையிடாக் கொள்கையை இந்திய அரசு கடைபிடிக்கவில்லை எனவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் கூறுவது கவனிக்கத்தக்கது.

இப்போதைக்கு இந்தியப் படையை அனுப்புவதில்லை என்று வாஜபாய் பேசுவது ஆறுதலளித்தாலும், இந்திய அரசின் அணுகுமுறையில் தமிழர்கள் ஏமாந்து விடக்கூடாது.

'மனிதாபிமான உதவி' என்ன என்று இந்திய அரசு தெளிவுபடுத்த மறுக்கிறது, 'ஒன்றுபட்ட இலங்கை' என்ற அதன் நிபந்தனையையும் "தமிழீழத்தை ஒரு போதும் அங்கீகரிக்க மாட்டோம்" என்று அது கூறி வருவதையும் உலகிலேயே கொடுமையான பயங்கரவாத அமைப்புகளில் விடுதலைப்புலிகளும் ஒன்று என்று அறிவித்திருப்பதையும் சேர்த்துப் புரிந்து கொள்ள வேண்டும். அரசின் இந்த நிலைப்பாட்டிற்கு பெரும்பாலான கட்சிகளும் ஆதரவு தெரிவித்திருப்பது தற்செயலான ஒன்றன்று.

எந்தக் கட்சி, எந்தக் கூட்டணி தில்லி ஆட்சியில் இருந்தாலும் இந்திய வல்லாதிக்க அரசிற்கு சில புவிசார் அரசியல் தேவைகள் உண்டு. இன்றைய நிலையில் அதில் அடிப்படை மாறுதல் ஏதும் வருவதற்கில்லை.

பொதுவாகவே இந்திய அரசு, அடிப்படையில் தமிழர்களுக்கு எதிரான அரசு என்பதை வரலாற்று நிகழ்ச்சிப் போக்குகளைப் பார்த்தாலே தெரியும். இந்தி மொழி ஆதிக்கம், ஆற்று நீர்ச்சிக்கல்கள் சேதுக் கால்வாய்ப் பிரச்சினை, கச்சத் தீவுப் பிரச்சினை தமிழக எல்லை குறித்த சிக்கல்கள் என்று எதை எடுத்தாலும் தில்லி அரசு தமிழர்களுக்கு எதிராகவே திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. இதில் எந்தக் கட்சி என்ற வேறுபாடெல்லாம் இல்லை.

தொடர்ச்சியாக சிங்களக் கடற்படை தமிழ்நாட்டு மீனவர்களைப் படுகொலை செய்து வருவதைப் பற்றி இந்திய அரசு கவலைப்படுவதில்லை. கடந்த ஏப்ரல் 29 அன்று கோடியக் கரை அருகே வந்து நாகப்பட்டினம் மீனவர்கள் மூவரை சிங்களக் கடற்படை சுட்டுக் கொன்றிருப்பது இதற்கொரு சான்று. அதன் பிறகு இப்போது இராமேஸ்வரம் மீனவர் ஒருவரும் சுட்டு படுகாயமடைந்து, இறுதியில் மருத்துவமனையில் இறந்து போனார்.

மண்டபம் முதல் நாகை வரையில் உள்ள 130 கி.மீ. தொலைவிற்கு இரண்டு கடற்படைக் கப்பல்கள் தினமும் இரண்டு முறை சுற்றி வந்து காவல்புரிய வேண்டும் என்றாலும், வாரம் ஒரு முறைதான் இவ்வாறு வருகின்றன. கடற்படைக் காவல் பணி பராமரிப்பு செலவுக்காக இந்திய அரசு போதிய நிதியளிப்பதில்லை என்று மீனவர்கள் புகார் கூறுகின்றனர்.

இந்திய அரசு தரும் என்ற நம்பிக்கையில் வேதாரண்யம் பேரூராட்சி இந்த பராமரிப்புச் செலவுக்காக ரூ.30 இலட்சம் வரை செலவு செய்துவிட்டு, கையைப் பிசைந்து கொண்டுள்ளது.

காவல்பணி என்ற பெயரில் இந்தியக் கடற்படை தமிழக மீனவர்களையே தாக்கி வருகிறது; கெடுபிடி செய்கிறது.

கண்ணுக்குத் தெரிய சிங்களப் படை தமிழக மீனவர்களை தமிழக எல்லைக்குள் வந்து சுட்டுக் கொல்வதைப் பற்றி இந்திய அரசு கண்டு கொள்ளாமலிருப்பது இயலாமையினால் அல்ல. தாங்கள் செய்ய முடியாததை சிங்களப் படை செய்கிறதே என்று மகிழ்வதால்தான் இவ்வாறு நடக்கிறது.

இல்லையெனில் குஜராத் மீனவர்கள் பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் தவறுதலாகச் செல்கிற போது பாகிஸ்தான் கடற்படை சுட்டால் அனுமதிக்காத அரசு, சிங்களப் படையிடம் மட்டும் பாராமுகமாக இருக்க வேண்டிய அவசியம் என்ன? ஒருமுறை கூட சிங்களக் கடற்படையை நோக்கி இந்தியத் துப்பாக்கி திரும்பியது கிடையாது என்பது மட்டுமின்றி, ஒருமுறை கூட சிங்கள அரசிடம் நட்ட ஈடு கோரியதில்லையே ஏன்?

ஏனெனில் தமிழர்கள் இந்தியாவிற்கு வேண்டாதவர்கள்.

சிங்கள அரசு எவ்வளவுதான் இந்திய அரசோடு உலக அரங்கில் ஒத்துப் போகாமல் இருந்தாலும், தமது தமிழர் விரோத - புவிசார் அரசியல் நலன் கருதி, இந்திய அரசு சிங்கள அரசுக்கு ஆதரவாகவே நடந்து வந்திருக்கிறது.

1971-ல் தென் இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி.)



படிப்பகம்

www.padippakam.com

அமைப்பினரைக் கொன்று குவித்து ஸ்ரீலங்கா அரசைப் பாதுகாத்ததும் 1974 இல் கச்சத்தீவை சிங்கள அரசுக்கு கொடுத்ததும் 1987ல் அமைதிப்படை என்ற பெயரால் ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்ததும் இதே நோக்கில்தான். இன்றுவரை சேதுக்கால்வாய்த் திட்டத்தைக்கிடப்பில் போட்டுள்ளதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

இந்திய விமானப்படைத் தளபதி டிப்னிஸ் ஐந்து நாட்கள் இலங்கையில் தங்கி ஆலோசனை நடத்தியிருப்பதைக் கவனிக்கத் தவறக் கூடாது. சீக்கியர்களைக் கொன்று ரத்தக் கறை படிந்த காவல்துறை அதிகாரி கே.பி.எஸ். கில் யாழ்ப்பாணத்தில் புலிகளின் தற்கொலைப்படை ஊடுருவலை முறியடிக்க ஆலோசனை கூறுவதற்காக அழைக்கப்பட்டுள்ளார், இது எதைக் காட்டுகிறது? இது எந்தவகை மனிதாபிமான உதவி? இந்திய உள்துறை அமைச்சர் அத்வானியிடம் பேசிய பிறகே கில்லை அழைத்துள்ளதாக கதிர்காமர் கூறியுள்ளார்.

சிங்கள இராணுவத் தலைமைத் தளபதி ரோகன் டிசில்வா தலுவத்தை இங்குவந்து சென்னை, பெங்களூர் ராணுவத் தலைமையகங்களுக்குச் சென்று இராணுவ அதிகாரிகளுடன் இந்திய உதவி பற்றி பேசியுள்ளார்.

1995 -ல் யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து ஐந்து இலட்சம் ஈழத் தமிழர்கள் சொல்லொணாத் துயரம் அடைந்தபோது, உணவின்றி, உரிய மருந்தின்றி மடிந்த போது இந்திய அரசின் மனிதாபிமானம் எங்கே போனது? தொகை தொகையாக தமிழர்கள் யாழ்ப்பானத்தில் சிங்களப் படையினரால் கொல்லப்பட்டு ஒரே குழியில் புதைக்கப்பட்ட செம்மணி படுகொலையை அறிந்து உலகமே அதிர்ந்தபோது, இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்று இந்திய அரசு முகம் திருப்பிக் கொண்டது எந்தவகை மனிதாபிமானம்? சிங்களக் காடையர்களால் ஈழத் தமிழ்ப் பெண்கள் வல்லுறவு கொள்ளப்பட்டபோது முணுமுணுப்பு கூட செய்யாதது எந்தவகை மனிதாபிமானம்?

இந்திய தேசியத்தின் மனிதாபிமானத்தில் தமிழர்களுக்கு இடமில்லை என்பதையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

என்றைக்கும், ஆதிக்கவாதிகளின் மொழியில் அடக்கு முறைக்குப் பெயர் பாதுகாப்பு நடவடிக்கை; தலையீட்டிற்குப் பெயர் மனிதாபிமான உதவி.

பாகிஸ்தானிலிருந்து 1972 ல் பங்களாதேஷ் பிரிவதற்கு படையனுப்பி உதவிய இந்தியா, இப்போது தமிழீழம் உருவாவதை ஏற்கவே முடியாது; ஒன்றுபட்ட இலங்கை என்பது முன் நிபந்தனை எனக் கூறுகூதன் நோக்கம் என்ன? இரண்டுமே இந்திய ஆதிக்க சக்திகளின் புவிசார் அரசியல் நலனுக்கு ஏற்ற இருவகை அணுகுமுறை ஆகும்.



பெண்புலி

தனது எதிரியான பாகிஸ்தானை பலவீனப்படுத்த வேண்டும் என்று விரும்பியதாலேயே இந்திய அரசு பங்களாதேஷ் விடுதலைக்கு உதவியது. தனக்கு கைக்கு அடக்கமாக தமிழீழம் இருக்காதோ என்ற ஐயமே இந்தியாவின் இலங்கைக் கொள்கைக்கு அடிப்படை. தமிழீழ விடுதலை என்பது உடனடியாக காஷ்மீர் போராட்டத்திற்கு உற்சாகம் ஊட்டுவதாக அமையும் என்றும் தில்லி அரசு அஞ்சுகிறது.

தம்து ஆதிக்க நோக்கத்தை மறைத்துக் கொள்வதற்காக, தமிழீழம் பிறந்தால் தமிழ்நாடும் பிரிந்து விடும் என்று பூச்சாண்டி காட்டுகிறது தில்லி அரசு. தமிழீழம் என்பதில் தமிழ்நாடும் அடங்கும் என்று அப்பட்டமான பொய்யை அவிழ்த்து விடுகிறார்கள். இந்த பொய்யை அறிவார்ந்த முறையில் செலாவணி செய்ய பிரேம் சங்கர் ஜா, ஃப்ரண்ட்லைன் ராம், இந்து மாலினி பார்த்தசாரதி போன்ற பத்திரிகையாளர்கள் முயன்று வருகிறார்கள்.

உண்மையில் தமிழீழம் பற்றி தமது கருத்தாக்கத்தில், பிரச்சாரத்தில், வரைபடத்தில், நடவடிக்கைகளில் எதிலுமே விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டை சேர்த்துக் கொண்டது இல்லை. தமிழ்நாட்டு அரசியலுக்குள் புலிகள் மூக்கு நுழைப்பதும் இல்லை.

இந்தியாவின் புவிசார் அரசியல் தேவைகளைப் புரிந்து கொண்டுள்ளோம் என்றும் பிறக்கப்போகும் தமிழீழம் இந்தியாவுக்கு நட்பு நாடாகவே இருக்கும் என்றும் விடுதலைப்புலிகள் அடிக்கடி கூறிவருகிறார்கள்.

தமிழ்நாட்டுத் தமிழ்த் தேசியர்கள் யாரும் தமிழீழத்தை தமிழ்நாட்டின் பகுதியாக சித்தரித்ததில்லை. ஏனெனில்



படிப்பகம்

www.padippakam.com

தமிழீழப் போரின் களமும், காலமும், சூழலும், தமிழ்த் தேசத் தன்னுரிமைப் போராட்டத்தின் களமும் காலமும், சூழலும் வெவ்வேறானவை. ஈழத் தமிழர்களும், தமிழ்நாட்டுத் தமிழர்களும் ஓர் இனத்தவர் என்றாலும் இரு தேசங்களைச் சேர்ந்தவர்கள். நீண்டகாலமாகவே இரு தேசங்களாகக் கடல் பிரித்து வைத்திருக்கிறது.

வங்காள தேசிய இன மக்கள் 1905 வரை, ஒரே மாநிலத்தில் வாழ்ந்தார்கள். 1905 வங்கப் பிரிவினையை எதிர்த்து வங்காளிகள் ரத்தம் சிந்திப் போராடினர். அதன் பிறகு இரு மாநிலங்கள் ஆக்கப்பட்டபோதும் இந்திய ஆட்சியின் கீழ் ஒன்றாக இருந்தனர். இவ்வாறு வரலாற்று வழியில் ஒன்று சேர்ந்திருந்த வங்காளிகளிடையே, வங்காள தேசம் தனி நாடானால் மேற்கு வங்கம் அதோடு இணைந்து ஒரே வங்கம் உருவாகும் என்ற அச்சம் தில்லிக்கு இல்லை. வரலாற்றில் தனித்தனி பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழகத் தமிழர்களும் ஈழத் தமிழர்களும் ஒரே தேசத்தை அமைத்துக் கொள்வார்கள் என்று புரளி கிளப்புவது ஏன்? இவர்கள் தமிழர்கள் என்பதாலா?

தமிழீழப் பிரச்சினையில் மட்டும் பிரிவினைப் பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

இந்தப் பூச்சாண்டி காட்டும் வேலையில் தில்லிக்காரர்களோடு தி.மு.க. தலைவர் கருணாநிதியும் சேர்ந்து கொள்கிறார். அடிப்படையான தமிழின உரிமைப் பிரச்சினைகளில் துரோகம் செய்வது அவருக்கு வாடிக்கை. காவிரிச் சிக்கல் அதற்கொரு எடுத்துக்காட்டு.

கதிர்காமரோடு பேசுவதற்கு முன்னால், பிரதமர் முரசொலி மாறனையோ, தம்மையோ கலந்து பேசவில்லை என்பதற்காக இரண்டு நாட்கள் கலைஞர் வீரவசனம் பேசினார். வாஜ்பாய் இவரை தில்லிக்கு அழைத்துப்பேசி 'மரியாதை' செய்தவுடனே "தேச நலன்கருதி இந்திய அரசு எதைச் செய்தாலும் ஆதரிப்பேன். அதன் கைகளைக் கட்டிப் போட மாட்டேன்" என்று குரலை மாற்றிப் பேசினார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சட்டமன்றத்தில் நஞ்சைக் கக்கினார். தான் டெலோ வைத்தான் ஆதரித்ததாகவும் புலிகளை ஒதுக்கி வைத்ததாகவும் கூறினார்.

சிதம்பரத்தில் 7.5.2000 அன்று நடைபெறவிருந்த ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாட்டைத் தடை செய்தார். ஆனையிறவு வெற்றியைப் பாராட்டி சுவரொட்டி ஒட்டிய பெரியார் தி.க. தோழர்களையும் ம.தி.மு.க. தொண்டர்களையும் மகஇக கிளர்ச்சிமையத் தோழர்களையும் அச்சக உரிமையாளர்களையும் பிரிவினைத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தார்.

ஜெயலலிதாவின் அ.தி.மு.க.வைப்பற்றி சொல்லவே வேண்டியதில்லை. ஜெயலலிதா என்றுமே தமிழினத்துக்கு எதிரானவர் தமிழீழ விடுதலை ஆதரவாளர்களை வேட்டையாடிய அரசு ஜெயலலிதா அரசு. தி.மு.க.வுக்கு மாற்றாக இன்றைக்கு அ.தி.மு.க.வே உள்ளது.

இந்த நிலையில், தில்லி அரசும், தமிழக அரசும் தமிழீழ விடுதலைக்கு எதிரானவையே என்பது தெளிவு. எனினும், தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஆனையிறவு வெற்றி ஏற்படுத்தியுள்ள எழுச்சிமிக்கத் தாக்கத்தால் இவர்கள் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறார்கள். அவ்வளவே.

இந்நிலையில் தமிழீழ ஆதரவாளர்களும், தமிழின உணர்வாளர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். எந்த சாக்குபோக்கையும் சொல்லி தமிழீழப் பிரச்சினையில் சிங்கள அரசுக்கு ஆதரவாக தில்லி அரசு செயல்படும் முயற்சிகளை மக்களைத் திரட்டி முறியடிக்க வேண்டும்.

தி.மு.க., அ.தி.மு.க ஆகியவற்றின் உண்மை முகங்களைத் தெரிந்து கொண்டு, பதவி ஆசையற்ற தமிழ்த் தேசிய சக்திகளின் பின்னால் அணி திரளவேண்டும். அதுதான் தமிழீழத்துக்கும் நல்லது. தமிழ்த்தேசத்திற்கும் நல்லது.

மனித நேய உதவி என்ற போர்வையில் மருந்தோ படைக்கருவியோ எதையும் இந்திய அரசு சிங்களர்களுக்குத் தரக் கூடாது. மருந்தைத்தான் இந்திய ராணுவ விமானம் ஏற்றிக்கொண்டு போவதாக வைத்துக் கொண்டாலும் அது ராணுவத் தலையீட்டின் தொடக்கமாக அமைந்துவிடும்.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை மீட்டு விட்டாலும் தமிழீழத்தை அங்கீகரிக்க மாட்டேன் என்று பிரதமர் வாஜ்பாய் சீறுவது சிங்களர்களுக்கு ஆதரவான - ஒட்டு மொத்தத் தமிழ் இனத்திற்கு எதிரான குரல்.

இந்திய அரசு தமிழ் ஈழ விடுதலைப் போரை அங்கீகரிகக வேண்டும். விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். இந்நடவடிக்கைகளை இந்திய அரசு எடுத்தால் தான ஆறு கோடித் தமிழர்களை சிறிதளவாவது மதிப்பதாக பொருள்

## மணமக்களுக்கு வாழ்த்துக்கள்

***தஞ்சை மாவட்டம் திருவையாறு ஒன்றியத்தை சேர்ந்த தோழர் செல்வமணி அவர்களின் புதல்வன் புண்ணியமூர்த்திக்கும் பிரபாதேவிக்கும் இல்வாழ்க்கை ஒப்பந்த விழா, 30.4.2000 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.***

***மணமக்கள் சார்பில் தமிழர் கண்ணோட்டம வளர்ச்சி நிதிக்கு ரூபாய் 200 வழங்கப்பட்டது.***



படிப்பகம்

www.padippakam.com



எஸ்.வி.ராஜதுரை

# அயர்லாந்து விடுதலைப் போராட்டம்-16

## தேசியமும் பெண்ணியமும்

ஐரிஷ் குடியரசுவாதத்துடன் பெண்கள் ஒத்துழைத்து வந்தபோதிலும் அந்த உறவு ஆணாதிக்கச் சிந்தனையால் வடிவமைக்கப்பட்டே வந்தது. ஐரிஷ் பண்பாட்டுத் தேசியமும் 'ஆண்மை' பண்புகளையே போற்றி வளர்த்தது. ஐரிஷ் குடியரசுவாத சகோதரத்துவ அமைப்பின் பத்திரிகையான 'ஐரிஷ் விடுதலை' **(Irish Freedom)**, 'ஆண்மை' என்ற கட்டுரையில் "நேர்மை, தூய்மை, தீரம், உறுதி, ஒரு ஆண் என்று நீங்களே உங்களை உணரும்படி வைக்கும் ஆற்றல்" ஆகியனவற்றைப் பெருமைப்படுத்தியது. கெயிலிக் விளையாட்டுக்கான சங்கமும், புதுப்பிக்கப்பட்ட ஐரிஷ் விளையாட்டுகளும் சகோதரத்துவம், **(Brotherhood)** ஆண்மை ஆகியவற்றை உருவாக்கும் முன்னோடிகளாகக் கருதப்பட்டன. ஐரிஷ் பெண் போராளிகளில் மிக முக்கியமானவராகக் கருதப்படும் மார்க்கீவிஸ் சீமாட்டியார் **(Counters Markivics)** 1909 இல் நிறுவிய புற இராணுவப்படையும் கூட சிறுவர்களின் சாரணர் படைதான். 1913 இல் தொழிலாளர்களின் தற்காப்புக்காக உருவாக்கிய ஐரிஷ் குடிமக்கள் படை தொடக்கம் முதலே பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டு வநதது. பாலின் சமத்துவத்தை வலியுறுத்தியது. ஆயினும் அப்படைக்கு ஆதரவு திரட்டியவர்களின் சொல்லாடல்களிலும் கூட ஆண்மை, ஆண்-பண்புகள் பற்றிய கருத்துக்கள் நிறைந்திருந்தன (170). ஜேம்ஸ் கொனொல்லியும் கூட ஓரிரு சமயங்களில் 'பெண்மையை'ப் போற்றும் சொற்களைக் கூறி வந்தார்.

1916 ஆம் ஆண்டு ஈஸ்டர் கிளர்ச்சியின்போது டப்ளின் நகரத் தலைமை அஞ்சலலுவலகத்தில் குடியரசுவாதிகளால் வெளியிடப்பட்ட பிரகடனம், ஆண்-பெண் சமத்துவம், பாலின நீதி ஆகியவற்றை உத்திரவாதம் செய்தது (171) ஆனால் அக் கிளர்சியின் தோல்விக்குப் பிறகு மறு சீரமைப்புக் குள்ளாக்கப் பட்ட ஸின்ஃபெய்ன் இயக்கம், ஐரிஷ் குடியரசு இராணுவம், ஆகியன பெண்களை ஆணாதிக்க இராணுவவாத நிலைபாட்டிலிருந்து அணுகி வந்தன. இதற்குச் சில எடுத்துக் காட்டுகளைக் கூறலாம்.

இநத நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஐரிஷ் பெணகளுக்கான தனியமைப்புகள் உருவாகத் தொடங்கின. 1900 ஆம் ஆண்டில் 'அயர்லாந்தின் புதல்விகள்' என்ற அமைப்பு மாட் கான் **(Maud Gonne)** என்பவரால் தொடஙகப்பட்டது. 1911 இல் அயர்லாந்துப் பெண்கள் வாககுரிமைக் கூட்டமைப்பும் பெண் தொழிலாளர் சங்கமும் நிறுவபபட்டன

அயர்லாந்து மக்களின் வாக்குரிமைக் கோரிக்கை இயக்கத்தின் ஒரு போர்க்குணமிக்க பகுதியாக 1908 இல் 'ஐரிஷ் பெண்கள் வாக்குரிமைக் கழகம்' தோற்றுவிக்கப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பது குறித்து அது, இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் (பொது அவையில்) கொண்டு வரப்படும் அனைத்து மசோதாக்களையும் ஆதரித்து வாக்களிக்கும்படி அந்த அவையில் இருந்த ஐரிஷ் உறுப்பினர்களை வற்புறுத்தி வந்தது. அதே சமயம் சுயாட்சிக்கான (ஹோம் ரூல்) சட்டத்தில் 'பெண்களுக்கு வாக்குரிமை' என்பது சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்துப் போராடியது. அதன் பொருட்டு அக்கழகத்தின் பெண்கள் சிறைக்கும் சென்றனர். அயர்லாந்தை, வட அயர்லாந்து, தென் அயர்லாந்து என்று பிரிவினை செய்வதற்கான ஒப்பந்தம் தொடர்பான பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும்போது 21 வயது நிறைவு பெற்ற பெண்களுக்கும் அப் பொது வாக்கெடுப்பில் பங்கேற்க உரிமை வேண்டும் என்ற கோரிக்கையை அக்கழகம் எழுப்பியது. ஆனால் அந்தக் கோரிக்கை, மேற்சொன்ன ஒப்பந்தத்தை சீர்குலைப்பதற்காக உருவாக்கப்பட்ட உத்தி என்று கூறி அதனை நிராகரித்தார் அன்றைய ஸின்ஃபெய்ன் தலைவராக இருந்த ஆர்தா கிரிபித்(172).

பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கெதிரான ஐரிஷ் மக்களின் போராட்டம் இராணுவவாத வடிவத்தை மேறகொண்டதும், அது கத்தோலிக்கத் திருச்சபையுடன் சமரசம் செய்து கொண்டது பெண்கள் மீதும் குடும்ப வாழ்வின் மீதும் கத்தோலிக்கத திருச்சபை செலுத்தி வந்த கட்டுப்பாட்டிற்குக் குடியரசுவாதம் ஒரு அச்சுறுத்தலாக விளங்கவில்லை. கத்தோலிக்கத் திருச்சபை சிலரை மதத்திலிருந்து விலக்கி வைத்தது. சோசலிசம் என்பது குடும்பம், தனிச்சொத்து ஆகியவற்றுக்குப் பகையானது என்று அதனைக் கண்டனம் செய்தது. ஆயுதங்கள் ஏந்துவதையும் பகைவனை ஒழிப்பதற்கு உறுதி எடுத்துக் கொள்வதையும் கிறித்துவ அறவியலுக்கு எதிரானவை என்று கூறி வந்தது. ஆனால், பிரிட்டிஷ் இராணுவத்திற்குக் கட்டாயமாக ஆள் சேர்க்கும் முயற்சி தொடங்கியதாலும் ஐரிஷ் போராளிகளின் தாக்குதலால் பிரிட்டிஷாரின் பிடிப்பு தளர்ந்து வந்ததாலும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. ஐரிஷ் போராளிகள் ஆயுதமேந்துவதற்கு ஒப்புதலளித்தது. புதிய அதிகாரத்தை உருவாக்குவதில் பாதிரிகள் உற்சாகமாகப் பங்கேற்றனர். ஈஸ்டர் கிளர்ச்சித் தலைவர்கள் பிரிட்டிஷ் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன் அவர்களிடம் பாவ ஒப்புதல் வாக்கு மூலங்களை **(Confession)** பெறுவதற்கு கத்தோலிக்கப் பாதிரிகள் முன் வந்தனர். பாவ ஒப்புதல் தந்தவர்களில் கொனொல்லியும் ஒருவர்!



படிப்பகம்

www.padippakam.com

திருச்சபையின் நிலைப்பாடுகளை 'ஐரிஷ் குடியரசுவாத சகோதரத்துவம்' (IRB) கண்டனம் செய்யவில்லை. அநியாயமான ஆட்சியைத் தூக்கியெறிவதற்கான ஆயுதங்களை ஏந்துவதும் உறுதிமொழி எடுத்துக் கொள்வதும் கத்தோலிக்கக் கோட்பாடுகளுக்கும் ஏற்புடையவை என்று அது விளக்கம் கூறியது. மேலும், ரோமன் கத்தோலிக்கச் சபை பலகீனமானவர்களுக்கு, தீங்கிழைக்கப்பட்டவர்களுக்கு, பாதுகாப்பற்றவர்களுக்கு பெரும் அனுதாபம் காட்டக்கூடியதாக உள்ளது என்று பரந்துபட்ட ஐரிஷ் மக்கள் கருதுவதாக அந்த அமைப்பு கூறியது.

பிரிட்டிஷாருக்கு எதிராக ஆயுதமேந்திய போராட்டம் நடத்தப்பட்ட காலத்தில் 'பெண்களின் கற்பு' குறித்த சொல்லாடல்கள் வலுப்பெற்றன. ஐரிஷ் தேசம் பெண்ணாக உருவகிக்கப்பட்டது. அதன் தூய தன்மை, பெண்களின் தன்மையை, 'கற்பை' (Chastity) சார்ந்துள்ளதாகச் சொல்லப்பட்டது. அதன் காரணமாக கடுமையான ஆணிய அறவியல் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. போரின்போது நிகழும் பாலியல் வன்முறைகளும் வன்புணர்ச்சிகளும் தேசியவாதச் சொல்லாடல்களில் மிகை முக்கியத்துவம் பெற்றன. தேசத்தின் தூய்மை கருதி, பெண்களின் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்து மேலோங்கியது. பெண்களின் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டுமானால் அவர்கள் குடும்பங்களுக்குள்ளேயே இருக்க வேண்டும், அவர்களது கௌரவத்தைக் காப்பாற்றும் ஆண்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற கத்தோலிக்க அறவியல் வலுப்பட்டது. 'கற்பு'ம் தாய்மையும், தாய்மார்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற சொல்லாடல்கள் வலுப்பெற்றன.

1917ஆம் ஆண்டு, ஐரிஷ் பெண் தொழிலாளர் சங்கம், ஐரிஷ் குடிமக்கள் படையின் பெண் உறுப்பினர்கள், இந்த அமைப்புகள் எதனையும் சாராத பெண்கள் ஆகியோரைக் கொண்ட பெண் பிரதிநிதிகள் கழகம் (League of Women Delegates) உருவாக்கப்பட்டது. அது, மறு ஒழுங்கமைப்புக்குட்பட்டு வந்த தேசியவாதச் சக்திகளிடையே பெண்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இருப்பதை உத்திரவாதம் செய்யப் பெரும் முயற்சிகள் மேற்கொண்டது. அத் தேசியவாதிகளுடன் இடையறாது பல வாரங்கள் தொடர்ந்து விவாதம் நடத்திய பிறகு, ஸின்ஃபெய்ன் நிர்வாகக் குழுவில் ஆறு பெண் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. முன்னாள் அரசியல் கைதிகளில் அறுவர் அந்த நிர்வாகக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படப் போகிறார்கள் என்பதை அறிந்த பிறகே, அத்தகைய பிரதிநிதித்துவம் தங்களுக்குத் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையைப் பெண்கள் எழுப்பினர். அயர்லாந்தை விடுதலை செய்வதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பெண்களின் ஒழுங்கமைக்கப்பட்ட ஒத்துழைப்பு இன்றியமையாதது என்றும், எதிர் வரும் காலத்தில் எழக்கூடிய சமூகப் பிரச்சினைகள் குறித்த விஷயங்களில் பெண்களின் பங்கேற்பு இருந்தாக வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். நான்கு 'பெண்மணிகள்' ஸின்ஃபெய்ன் நிர்வாகக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் ஆனால் அந்தப் பெண்கள் எல்லாருமே ஸின்ஃபெய்ன் கிளைகளிலொன்றின் உறுப்பினர்களாக இருக்கலாமேயன்றி, வேறு எந்த ஒரு அமைப்பையும் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்பவர்களாக இருக்கக் கூடாது என்று ஸின்ஃபெய்ன் கூறிவிட்டது. இத்தகைய நிபந்தனை ஏதும் குடியரசுப் படையில் (IRB) இருந்த ஆண் உறுப்பினர்களுக்கு விதிக்கப்படவில்லை. தனது அமைப்பிற்குள் ஒழுங்கமைக்கப்பட்ட பெண்கள் பிரிவொன்று உருவாகி, தனது தலைமைக்குச் சவாலாக விளங்குவதை, ஸின்ஃபெய்ன் ஆண் தலைமை விரும்பவில்லை (174).

1917 இல் நடந்த ஸின்ஃபெய்ன் மாநாடுதான் அயர்லாந்தில் இருபத்தாறு மாகாணங்களிலிருந்துபிரிட்டிஷாரை விரட்டியடிப்பதற்கான போராட்டத்தின் எதிர்கால மார்க்கத்தைத் தீர்மானிக்கக் கூடியதாக அமைந்தது. அந்த மாநாட்டின்போது பெண் பிரதிநிதிகள், எதிர்காலத்தில்எல்லாச் சூழல்களிலும் பெண்கள் சமவாய்ப்பையும் சமத்துவத்தையும் பெறுவதை உத்திரவாதம் செய்யும் தீர்மானமொன்றைக் கொண்டு வந்தனர். ஆனால் அந்த மாநாட்டிற்குப் பன்னிரெண்டு பெண் பிரதிநிதிகள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதால், முக்கியமான பிரச்சினைகளில் பெண்களின் பங்கேற்பு மிகவும் வரம்புக்குட்பட்டதாகவே இருந்தது. "இந்த அமைப்பில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே சமத்துவம் உள்ளது என்பது எல்லாச் சொற்பொழிவுகளிலும் பிரசுரங்களிலும் வலியுறுத்தப்பட வேண்டும்" என்ற வாசகம் அடங்கிய தீர்மானம் விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்ட போது, மேற்சொன்ன வாசகத்தில் இருந்த 'எல்லா' என்ற சொல் தவறாகஅச்சிடப்பட்டதாக வாதிட்டு அதனைநீக்கும்படி செய்தனர் ஆண் பிரதிநிதிகள். அது தவறாக அச்சிடப்பட்ட சொல் அல்ல. ஆயினும் ஆண் பிரதிநிதிகளின் வாதங்களை எதிர்த்து முறியடிக்கக்கூடிய அளவிற்கு பெண் பிரதிநிதிகளிடம் எண்ணிக்கைபலம் இருக்கவில்லை. 'எல்லா' என்ற சொல் நீக்கப்பட்டதால், பெண்களுக்குச் சமத்துவம் தரப்பட வேண்டும் என்பது ஒரு கட்டளையாகவேயன்றி விருப்பத் தேர்வாக இருக்கும்படி செய்யப்பட்டு விட்டது. மாநாட்டிற்குப் போதுமான அளவில் பெண் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் டப்ளின் நகரத்தை மட்டுமே மையமாகக் கொண்டு இயங்கிய 'பெண் பிரதிநிதிகள் கழகம்' நாடு தழுவிய அளவில் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இயக்கமாக வளரும் என்ற எதிர்பார்ப்பு தோல்வியடைந்தது.

பெண்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கிடைக்காததால், ஸின்ஃபெய்ன் நிர்வாகக் குழுவில் இருந்த 20 இடங்களில் 10 இடங்களைப் பெண்களுக்கு ஒதுக்குவதற்கு அந்த நிர்வாகக் குழுவிற்கு அதிகாரம் தரப்படவேண்டும் என்று பெண்கள் சார்பில், லாரன்ஸ் கின்னெல் என்ற ஆண் பிரதிநிதியால் முன் மொழியப்பட்ட தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. அந்த அமைப்பிற்குள் பாலின சமத்துவம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதால் இந்தத் தீர்மானம் தேவையற்றது என்று ஆண் பிரதிநிதிகள் கூறிவிட்டனர்.

1918 ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்றத்



படிப்பகம்

www.padippakam.com

தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டிய நேரம் வந்தபோது, பெண்களை வேட்பாளர்களாக நியமனம் செய்வதற்கு அந்தந்தத் தொகுதிகளில் இருந்த ஸின்ஃபெய்ன் ஆண் உறுப்பினர்கள் காட்டிய தயக்கத்தின் காரணமாக, பெண் வேட்பாளர்கள் எண்ணிக்கை ஆண் வேட்பாளர்களின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் பன் மடங்கு குறைவானதாக இருந்தது. இந்தச் சமனற்ற நிலையை அகற்றுவதற்கான செயல்முறை உத்திகள் எதனையும் தேசியவாதிகள் உருவாக்கவில்லை. ஈஸ்டர் எழுச்சியின் போது கொல்லப்பட்ட தலைவரொருவரின் மனைவியான கேத்லின் கிளார்க், தேர்தலின் போது சிறையிலிருந்தார். டப்ளின் நகரத் தொகுதியிலிருந்து போட்டியிடும் வாய்ப்புத் தனக்குத் தரப்படும் என்று நம்பியிருந்த அவர் நரித்தனமான முறையில் ஏமாற்றப்பட்டார். ஹன்னா ஷீஹிஸ்கெஃபிங்டன் என்ற பெண்ணிலைவாதிக்கு கட்சி ஒருபோதும் வெற்றியடைய வாய்ப்பில்லாத தொகுதியில் போட்டியிடுமாறு ஆலோசனை தரப்பட்டது. அதே போலவேதான் வினிப்ரெட் கார்லி என்ற பெண்மணிக்கும் வெற்றிபெறச் சாத்தியமேயில்லாத தொகுதியொன்று ஒதுக்கப்பட்டது. கடைசியில் ஐரிஷ் பெண்களின் ஒரே நம்பிக்கையாக இருக்கும்படி செய்யப்பட்ட வேட்பாளர் அச்சமயம் சிறைத் தண்டனையை அனுபவித்துக்கொண்டிருந்த மார்க்கீவிஸ் சீமாட்டியார்தான். தேர்தல் பிரச்சார வேலைகளில் நேரடியாக ஈடுபட முடியாதிருந்த அவருக்காக, தேசியவாதிகளுடன் அதுவரை எந்த ஒரு கட்டத்திலும் ஒன்றுபடாமலிருந்த ஆனால் போராட்ட குணமிக்க பெண்ணிலைவாதிகள் பலர் பிரச்சாரம் செய்தனர். அப்படிப் பிரச்சாரம் செய்கையில் ஸின்ஃபெய்ன் இயக்க ஆண்களின் வெறுப்புக்குள்ளாயினர்.

அத் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு ஸின்ஃபெய்ன் வேட்பாளர்களில் மார்க்கீவிஸ் சீமாட்டியார் ஒருவர் மட்டுமே பெண். பிரிட்டிஷ் அரசாங்கத் திட்டப்படி உருவாக்கப்பட இருந்த அயர்லாந்து நாடாளுமன்றத்தைப் புறக்கணித்து விட்டு, அனைத்து அயர்லாந்து சட்ட மன்றம் **(Dail Eirean)** குடியரசுவாதிகளால் உருவாக்கப்பட்டதல்லவா? (அதனை ஐக்கியவாதிகள் புறக்கணித்தனர்). அந்த சட்டமன்றம் ஒரு ஜனநாயக வேலைத் திட்டத்தை நிறைவேற்றியது. பாலின சமத்துவத்தையும் நீதியையும் அத்திட்டம் உத்திரவாதம் செய்தது.

ஆனால் அக் குறிக்கோள்கள் ஒருபோதும் நிறைவேற்றப்படவில்லை. ஐரிஷ் சுதந்திர அரசின் (தென் அயர்லாந்து) உருவாக்கத்திற்கு பெண்களின் அரசியல், இராணுவப் பங்களிப்பு கணிசமாக இருந்துள்ள போதிலும் , பொது வாழ்விலிருந்த பெண்களை படிப்படியாக விலக்கி வைப்பதற்கான முயற்சிகளையே அந்த அரசும் ஆளும் கட்சிகளும் மேற்கொண்டு வந்தன. நீதிமன்றங்களுக்கான நடுவர்களாக **(Juries)** பெண்களை நியமிப்பதில்லை என்று 1924 இல் அந்த அரசு முடிவு செய்தது. அதுதான் அந்த அரசின் முதல் முக்கியமான பெண் விரோத நடவடிக்கையாகும்.

1937இல் உருவாக்கப்பட்ட தென் அயர்லாந்து அரசமைப்புச் சட்டம், பெண்கள் இல்லத்தரசிகளாக இருந்து அவர்கள் வீடுகளில் ஆற்றும் கடமைகள்தான் பொது மக்களின நலனுக்கு அவர்கள் வழங்கும் பங்களிப்பு ஆகும் என்று சமுதாயம அங்கீகரிக்க வேண்டும் என்று கூறியது; குடிமக்கள் அனைவரும் சமமானவர்கள் என்றாலும் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உள்ள பாலின வேறுபாடு கருத்தில் கொள்ளப்படவேணடும் என்றது; விவாகரத்தைத் தடை செய்தது; ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைதான் மக்களின் நம்பிக்கையைக் காக்கும் நிறுவனம் என்று அங்கீகரித்தது.

குடியரசுவாதிகளின் ஒரு பிரிவினர் தென் அயர்லாந்து அரசை (அதாவது அயர்லாந்து இரண்டாகப் பிளவுபடுத்தப்படுவதை) ஏற்றுக் கொண்டனர். **IRA**வின் ஒரு பகுதி அரசு இராணுவத்தில் இரண்டறக் கலந்து விட்டது. தொடர்ந்து தன்னை **IRA** என்று அழைத்துக் கொணட இன்னொரு பகுதி, அந்த அரசை எதிர்த்து வந்தது. பிளவுண்ட நாட்டை ஒன்றுபடுத்துவதற்காகப் போராட முடிவு செய்தது. பெண்கள் மீதான அதன் அணுகுமுறை, தென் அயர்லாந்து அரசை உருவாக்கியவர்கள், அந்த அரசு அதிகாரத்தில் பங்கேற்றவர்கள் ஆகியோரின் அணுகுமுறையிலிருந்து சிறிதளவே வேறுபட்டதாக இருந்தது.

எடுத்துக்காட்டாக அயர்லாந்து பெணகள சஙகததிற்கும் குடியரசுவாதிகளுக்குமிடையே இருந்த உறவைக் குறிப்பிடலாம். அச்சங்கம் 1914 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்றுவரை நீடித்து வருகிறது. ஆனால் அதுவும்கூட முழுக்க முழுக்க ஆண்கள் மட்டுமே இருந்த ஐரிஷ் தொண்டா படையின துணை அமைப்பாகவே நிறுவப்பட்டது. சுயாதீனமாக இயஙக வேண்டும் என்ற எண்ணம் அவ்வமைப்புக்குள் 1921 ஆம ஆண்டில் எழுந்தது. ஆனால் அச் சங்கத்தின் மாநாட்டிலோ, அது சுயாதீனமாக இயங்கக் கூடாது என்றும் அதன் உறுப்பினாகள ஐரிஷ் புரட்சிகர குடியரசு இராணுவத்திற்கு விசுவாசமாக இருப்பதாக உறுதி மொழி எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற்குக் காரணம், அப்போது நிறுவப்பட்டிருந்த ஐரிஷ் சுதந்திர அரசின் பெண்கள் படை. அந்த அரசை எதிர்த்து வந்த ஐரிஷ் குடியரசு இராணுவத்தில் **(IRA)** இருந்தவர்களை உளவு பார்த்து மரண தண்டனை விதிக்கும் நீதிமன்றங்களில் அவர்களை ஒப்படைக்கும் பணியைச் செய்து வந்ததால் பெண்கள் நம்பத்தகாதவர்கள், துரோகமிழைக்கப்பட்டவர்கள் என்ற கருத்து உருவாக்கப்பட்டது தான். (178)

பெண்களுக்கு வாக்குரிமை தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை **IRA** எழுப்பி வந்தது உண்மைதான். ஆனால் அக் கோரிக்கையும் கூட **IRA** வின் இராணுவ நலன்களின் பொருட்டே எழுப்பப்பட்டது. புதிய அரசுக்குப் பொது மக்களின் ஒப்புதல் இல்லை என்றும் பெரும்பாலான இளம் ஆண்களையும அனைத்து இளம் பெண்களையும் உள்ளடக்காத வாக்காளா பட்டியல்களைக் கொண்டே 1918ஆம் ஆண்டு தேர்தல நடத்தப்பட்டது என்றும் அது பிரச்சாரம் செய்தது. ஐரிஷ் சுதந்திர அரசுக்கு எதிரான தனது போரை நியாயப்படுத்தும் போக்கில் தான் 'பெண்களுக்கு வாக்குரிமை' என்ற கோரிக்கை **IRA** வால்



படிப்பகம்

www.padippakam.com

எழுப்பப்பட்டதேயன்றி, அந்த உரிமை தன்னளவிலேயே மதிப்புடையது என்பதற்காக அல்ல. (179)

ஐரிஷ் விடுதலைப் போராட்டத்தில் மாட் கான் (Maud Gonne), சார்லட் தெஸ்பார்ட் (Charlotte Despard) கான்ஸ்டன்ஸ் மார்க்கீவிஸ் சீமாட்டியார் போன்ற பெண் போராளிகளின் பங்களிப்புகள் எந்தவொரு ஆண் போராளியின் பங்களிப்புக்கும் குறைந்ததல்ல. அவர்கள் மூவருமே ஈமன் டி வாலராவின் பிற்போக்குக் கொள்கைகளை எதிர்த்தவர்களாவர். அயர்லாந்தில் பிரிட்டிஷ் வைசிராயாகப் பணியாற்றிய ஒருவரது சகோதரியான சார்லட் தெஸ்பார்ட் தனது உடமைகள் அனைத்தையும் குடியரசுவாதிகளுக்கு வழங்கினார். பெண்களுக்கான கல்லூரியொன்றை டப்ளினில் நிறுவினார். பின்னர் பெல்ஃபாஸ்ட் நகரத்திற்குச் சென்று அரசியல் கைதிகளின் மறுவாழ்வுக்கான பணிகளைச் செய்து வந்தார். தனது 90ஆம் ஆண்டில் கிறிஸ்துவத் தன்மை கொண்ட ஒரு கம்யூனிசக் கொள்கையை உருவாக்கினார். கான்ஸ்டன்ஸ் மார்க்கீவிஸ் சீமாட்டியாரின் வாழ்வும் முடிவும் ஐரிஷ் குடியரசுவாதத்திற்கும் ஐரிஷ் பெண்களுக்குமிடையே இருந்த உறவின் தன்மைக்கான உருவகமாக விளங்குகிறது.

மாபெரும் ஐரிஷ் புரட்சியாளர்களிலொருவராகக் கருதப்படும் கான்ஸ்டன்ஸ் மார்க்கீவிஸ் பெரும் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரிஷ் தேசிய இயக்கத்தில் சேர்ந்த அவர் ஸின்ஃபெய்ன் அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினரானார். அயர்லாந்து வரலாற்றில் முதன் முதலாக வெளியிடப்பட்ட பெண்களுக்கான செய்தியேட்டில் கட்டுரைகள் எழுதினார். ஐரிஷ் இளைஞர்களின் சாரணப்படையொன்றை உருவாக்கி அதற்குப் பயிற்சியளித்தார். சோசலிசத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த அவர், 1913 ஆம் ஆண்டு டப்ளின் நகரில் தொழிற் சங்கப் போராட்டம் நடந்த போது, அந்நகரத்து ஏழை மக்களுக்காக கஞ்சித் தொட்டிகள் (Soup Kitchens) பலவற்றை நிறுவி அவர்கள் பட்டினியால் சாகாமல் தடுத்து நிறுத்தினார். போலிஷ் இனத்தைச் சேர்ந்த பிரபு ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். ஆனால் அந்தப் பிரபுவுக்குத் திகைப்பும் அதிர்ச்சியும் ஏற்படும் வகையில், மாளிகை போன்ற அவரது வீட்டை, புரட்சியாளர்களின் புகலிடமாக, அவர்களது கம்யூனாக மாற்றினார்.

ஜேம்ஸ் கொனொல்லி நிறுவிய ஐரிஷ் குடிமக்கள் இராணுவத்தில் தளபதியாக (Major) பணியாற்றிய அவர், பெண் படை வீரர்களுக்கான தனிச் சீருடைகளை வடிவமைத்துத் தந்தார். ஈஸ்டர் கிளர்ச்சியில் முன்னணிப் பாத்திரம் வகித்த அவர் பிரிட்டிஷ் படைகளால் கைது செய்யப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டார். அத் தண்டனையை அவர் மிக மகிழ்ச்சியோடு வரவேற்ற போதிலும், அவர் பெண் என்பதால் அத் தண்டனை சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அதுதான் அவரது முதல் சிறைவாசம். 1918 இல் நிறுவப்பட்ட (பிரிட்டிஷாரால் சட்ட விரோதமானதாகக் கருதப்பட்ட) முதல் ஸின்ஃபெய்ன் அரசாங்கத்தில் தொழிலாளர் நல அமைச்சராக்கப்பட்டார். சாகசச் செயல்கள் பலவற்றை நிகழ்த்திக் காட்டியவர் அவர். எடுத்துக்காட்டாக ஸின்ஃபெய்ன் அரசாங்கம் தொடர்பான முக்கியமான ஆவணங்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளின் கைகளுக்குக் கிடைத்து விடும் ஆபத்தொன்று உருவானபோது, அவர்களுக்கு ஊரைச் சுற்றிக் காட்டுவதாகக் கூறி அவர்களோடு ஒரு மோட்டார் வாகனத்தில் ஏறி, நகரைச் சுற்றிக் காட்டிக் கொண்டே, அரும் பொருட்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் அவற்றை இரகசியமாக வைத்துவிட்டு வந்து விட்டார். அந்தக் கடை, ஐரிஷ் போராளிகளை ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருந்த காடையர் படையின் (Black and Tans) தலைமை அலுவலகத்திற்கு நேர் எதிரில் இருந்தது. ஸின்ஃபெய்ன் அரசாங்கத்தின் தொழிலாளர் அமைச்சராகப் பணியாற்றுகையில், தொழிலாளர் சார்பாக நின்று பல தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைத்தார்.

இலண்டனில் உள்ள சிறையொன்றில அடைக்கப் பட்டிருந்த போதுதான் பிரிட்டனின் முதல் பெண் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் உறுதிமிக்க ஐரிஷ் குடியரசுவாதியான அவர், நாடாளுமன்றப் பதவி வகிக்க மறுத்து விட்டார். மீண்டுமொருமுறை சிறையிலடைக்கப்பட்ட அவர், இராணுவ நீதிமன்றத்தின் முன் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டார்.

ஐரிஷ் சுதந்திர அரசு நிறுவப்பட்டதைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் வெடித்த சமயத்தில் அவர் தலைமறைவானார். கடைசி முறையாக அவர் சிறையிலடைக்கப் பட்டது ஐரிஷ் சுதந்திரக் குடியரசில் தான்!

இத்தனைக்குமிடையில் அவர் டப்ளின் நகர ஏழை மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வந்தார். நாடகக் குழு வொன்றையும் நடத்தி வந்தார். சிறைப்பட்டுக் கைதியாக இருக்கையில் 1927 இல் பொதுமருத்துவமனையொன்றில் மரணமடைந்தார். ஐரிஷ் சுதந்திர அரசின் ஆட்சியாளர்கள், பொது மக்களின் பார்வைக்காக அவரது உடல் வைக்கப்படுவதைக் கூட அனுமதிக்கவில்லை. அவரது மேல் தட்டு வர்க்க நண்பர்களால் புறக்கணிக்கப்பட்டு, போலீசாரால் ஒரிருமுறை அடித்துத் துன்புறுத்தப்பட்டு, செல்வமனைத்தையும் துறந்து, குடியரசு இலட்சியத்திற்காகத் தனது வசதியான குடும்பப் பின்னணியைக் கைவிட்டு, பல உழைக்கும் மக்கள் பட்டினியால் மாள்வதைத் தடுத்து நிறுத்திய அவர் தனது கல்லறைக்குத் தன்னுடன் அழைத்துச் சென்றது அந்தப் பராரிகளின் வற்றாத அன்பைத்தான்.

இவ்வாறு பன்னூறு ஆண்டுக்கால ஐரிஷ் தேசிய விடுதலைப் போராட்டத்தின், குடியரசுவாதத்தின் பகுதி வெற்றியென்று கருதப்பட்ட (தென்) அயர்லாந்து அரசு, கொனொல்லி, மார்க்கீவிஸ் போன்றோரின் கனவுகளைச் சிதறடித்து விட்டது. தேசியம் வென்றது; சோசலிசமும் பெண்ணியமும் தோல்வியடைந்தன.

வட அயர்லாந்தின் விடுதலைக்காகப் போராடத் தொடங்கியவர்களும் கூட ஒரு சோசலிசத் தலைமையை ஏற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டவர்களல்லர். சுயேச்சையானதும் வலுவானதுமான சோசலிச இயக்கம், கட்சி என்பது ஏதும் இருக்கவில்லை. எனினும் தேசிய விடுதலைக்கான அவர்களது போராட்டம் மிகக் கடினமான பாதையை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இன்று வரை நீடிக்கும் அப்போராட்டத்தில் ஐரிஷ் போராளிகளும் மக்களும் அளப்பரிய தியாகங்களைப் புரிந்துள்ளனர். அது தனி வரலாறு.

குறிப்புகள்


170 SARA BENTON Women Disarmed, The Militarization of Politics in Ireland (1913-23), Feminists Review - Number 50, Summer 1995, 52, Featherstone Street, London EC 1Y 8RT, p.p. 152-54.

171. MARGARET WARD Finding a Place: Women and the Irish Peace Process, Race & Class- London No. 37, 1 (1995), p.45.

172. SARA BENTAN Op-cited, p.167

173. IBID pp 161-165, 168-170

174. MARGARET WRARD Op-cited, p.45

175. -do- -do-

176. -do- -do-

177. SARA BENTON Op-cited, pp166-167

178 -do- -do- p.168

179. TERRY EAGLETON The Truth About the Irish, pp.121-123


## சிங்கள ராணுவத்துக்கு உதவி செய்யாதே! த.நா.தி.க.

இலங்கையில் சிங்கள இன வெறி அ...க்கு எதிராக விடுதலைப் புலிகள் போராடி வெற்றியடைய இருக்கும் தருணத்தில் மனிதாபிமான அடிப்படையில் இலங்கை அரசுக்கு உதவி செய்யத் தயார் என்று கூறிய இந்திய அரசைக் கண்டித்து தமிழ்நாடு திராவிடர் கழகம் சார்பில் மே 6 அன்று கோவை திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகில் தோழர் இராமகிருஷ்ணன்(பொதுச் செயலாளர் த.நா.தி.க.) தலைமையில் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட 200 பேரைக் காவல் துறை கைது செய்தது.

## தோழர் பவணந்தியின் முதலாமாண்டு நினைவு நாள்

த.தே.பொ.க.வின் வட மாவட்டச் செயற்குழு உறுப்பினரும் வழக்கறிஞருமான தோழர் த.பவணந்தி



தமிழர் உரிமை இயக்கங்களிலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலை இயக்கங்களிலும் திண்டிவனம் கல்வி மேம்பாட்டு இயக்கங்களிலும் பங்கு கொண்டு அப்பகுதி மக்களின் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றவர்.

கடந்த 24.4.1999 அன்று மாரடைப்பால் அவர் திடீர் மரணமடைந்தார்.

அவரது முதலாமாண்டு நினைவுநாள் கூட்டம் திண்டிவனம் வேதவள்ளி திருமண மண்டபத்தில் 24.4.2000 அன்று நடந்தது. கூட்டத்திற்கு திண்டிவனம் த.தே.பொ.க. கிளைசெயலாளர் தோழர் கந்தசாமி தலைமை தாங்கினார். தோழர் நசீர் வரவேற்புரை நிகழத்தினார். தோழர்கள் பெ.மணியரசன், பேரா. பா. கல்யாணி, ம.பாபு மூத்த வழக்கறிஞர் பிரசன்ன வெங்கடாசலபதி, தி.க. மாவட்டச் செயலாளர் தாஸ், சம்பந்தம் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

குடும்ப உதவி நிதி இரண்டாம் தவணைத் தொகையாக ரூ.34,000 வழங்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



# "ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்..." தாமரை

- விமர்சகன்

கவிஞர் தாமரையின் ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும் கவிதைத் தொகுப்பு சமூகத்தின் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்குட்பட்ட ஒருவரின் அனுபவப் பகிர்வுகளாய் உள்ளது. குறிப்பாக, பெண்ணுக்கான சிக்கல்கள் அதிகம் இடம் பிடித்துள்ளன.




இருந்தாலும், உள்ளடக்கம் மட்டுமே படைப்பைத் தீர்மானிப்பதில்லை. இலக்கியத்தைத் தீர்மானிக்கும் காரணிகளில் வடிவமும் முக்கியமானது. அந்த வகையில், புதுக்கவிதையின் சாரமாக உள்ள கவித்துவம் குறையாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

இதற்கான தனது சமாதானத்தை முன்னுரையில் கவிஞர் கூறியுள்ளார். 'படித்தவுடன் கவிதை புரிய வேண்டும் ...... இது கவிதையின் இலக்கணத்திற்குச் சற்றே முரணானதாகக் கூட இருக்கலாம்' என்பது அவர் வாதம்.

படிப்பவர்க்குப் புரிய வேண்டும் என்பது மட்டுமே நோக்கம் என்றால், அதற்குக் கவிதை என்ற வடிவம் தான் பொருத்தம் என்றில்லை. உரைநடையாகக் கூட எழுதி விடலாம்.

புனைவுத் தன்மையோடு செய்தி அறிவிப்பது உரைநடை தவிர்த்த பிற இலக்கிய வடிவங்களின் சாரம். கவிதைக்கு இந்தப் புனைவுத் தன்மை மிகவும் அவசியம். எனவே, கவித்துவம் குறைவாக இருப்பதற்குக் கவிஞர் கூறும் சமாதானம் போதுமானதல்ல.

'என் மணவிழாவில் தொலைந்து போனேன்
ஆனால்,
யாரும் என்னைத் தேடவேயில்லை'

- என்று முடியும் 'தொலைந்து போனேன்' கவிதை கவனிக்கத்தக்கது. ஆயினும், இந்தக் கவிதை சொல்லப்பட்ட விதம் அலுப்பூட்டுகிறது. சின்னவயதில் திருவிழாவில் தொலைந்துபோனபோது கண்டுபிடிக்கப்பட்டேன்; திருமணத்தில் தொலைந்த பிறகு யாரும் தேடவில்லை என்ற நல்ல முரண் உத்தியுடைய உள்ளடக்கம், சிறுகதைபோல் நகரும்போது கவித்துவம் தொலைந்து போய் கவிதையைத் தேட வேண்டியுள்ளது.

பல கவிதைகள் தேவைக்கதிகமாக நீள்கின்றன.

'முதல் நரை' கவிதையும் இந்த வகையினதே. ஒரு கருப் பொருளுக்கான விளக்கத்தைச் சுருக்கமாகச் சொல்வது கவிதையின் குணம். ஆனால் 'முதல் நரை' உள்ளிட்ட பலவற்றில் சுருக்கம் அன்றி விரிவே உள்ளது.

எளிமையாக எழுதும் போது கவித்துவம் குறையத்தான் செய்யும் என்ற விதி இல்லை. கவிஞர் தாமரையின் இத்தொகுப்பில் வராத பல்வேறுகவிதைகள் படிக்கும் போது புரிதலையும் கவிதை படிக்கும் கிளர்ச்சியையும் ஊட்டுகின்றன என்பது குறிப்பிடப்பட வேண்டிய செய்தி. குறிப்பாக 'குமுதம்' இதழில் வெளியான 'என் பெயர் அவன்' 'பின்னர் ஒரு காலத்தில்' போன்ற கவிதைகளைச் சொல்லலாம்.

இத்தொகுப்பில் 'விவேகத்தின் வெளிச்சங்கள்' என்ற கவிதை, குறியீடுகளால் ஆக்கப்பட்டுள்ளது. புரியவே கூடாது என்ற உறுதிப்பாட்டோடு எழுதப்பட்டதாகத் தெரிகிறது. மிக எளிமை என்று வடிவத்தின் சாரத்தை நீர்த்துப் போகச் செய்வது, கவிதைக்கான உத்தியுடன் எழுதுதல் என வாசகர்களிடமிருந்து கவிதையைத் தனிப்பிரித்து இறுக்கமாக்குவது என்ற குழப்பம் தொகுப்பில் உள்ளது.

'அந்தப்பதினொரு நாட்கள்' என்ற திலீபன் பற்றிய கவிதை, 'தேநீர் விருந்து', 'தளம்' ஆகிய கவிதைகள் வடிவம், உள்ளடக்கம் இரண்டிலும் சிறப்பானவை.

'ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்' கவிதைக்கும் தலைப்பிற்கும் பொருத்தம் மிகக் குறைவு. தலைப்பு பெண் சிசுக் கொலையை நினைவுபடுத்துகிறது. ஆனால் கவிதைப் பொருள் அதுவல்ல. கவிஞர் தாமரையின் கவித்திறனில் நமக்குச் சந்தேகமில்லை. எனினும் இத்தொகுப்பு அவரை முழுமையாக வெளிப்படுத்தவில்லை.

| | | |
|---|---|---|
| வெளியீட்டகம் | : | காந்தளகம்,<br>834, அண்ணாசாலை,<br>சென்னை- 600 002. |
| விலை | : | ரூ 25.00 |



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் வழிக் கல்விக் கெதிரான நீதி மன்றத் தீர்ப்பு எரிக்கும் போராட்டம்

ஐந்தாம் வகுப்பு வரை தாய் மொழி அல்லது தமிழ் மொழி மட்டுமே, பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்றும் தாய்மொழி அல்லது தமிழையும் ஒரு மொழிப்பாடமாகக் கட்டாயம் கற்க வேண்டும் என்றும் தமிழக அரசு கடந்த நவம்பர் 19-1999 அன்று ஆணை பிறப்பித்தது.

இவ்வாணை செல்லாது என ஆங்கில வழிக்கல்வி முதலாளிகள் தொடுத்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் வெங்கடாசலமூர்த்தி, தினகர், செகதீசன் ஆகியோர் கொண்ட குழு தமிழ் வழிக் கல்விக்கெதிராகவும், ஆங்கில வழிக் கல்வி முதலாளிகளுக்கு ஆதரவாகவும் ஏப்ரல் 20 அன்று தீர்ப்பளித்தனர். தமிழக அரசு ஆணை ரத்து செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் தமிழை இரண்டாம் நிலைக்கு உள்ளாக்கி, பிற்படுத்தப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிரான இத்தீர்ப்பைக் கண்டிக்கும் வகையில் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சி, தமிழ் தமிழர் இயக்கம் சார்பில் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பை எரிக்கும், போராட்டம் ஏப்ரல் 29 அன்று தமிழகமெங்கும் நடைபெற்றது.

## சென்னை

வள்ளுவர் கோட்டம் முன்பு நடைபெற்ற எரிப்புப் போராட்டத்தில் த.தே.பொ.க. பொதுச் செயலாளர் பெ.மணியரசன், தமிழ் தமிழர் இயக்கத் தலைவர் சுப.வீரபாண்டியன், கி.தா.பச்சையப்பன் (தமிழ் உரிமை கூட்டமைப்பு) புலவர் இறைகுருவனார் (தென்மொழி அவையம்) மற்றும் 3 பெண்கள் உட்பட 80 பேர் கைது செய்யப்பட்டு மாலை அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## தஞ்சாவூர்



தஞ்சையில் எரிப்புப் போராட்டம்

தோழர் க. பழநிமாணிக்கம் (மாவட்டச் செயலாளர், த.தே.பொ.க.) தலைமையில் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் எதிரில் நீதிமன்ற நகல் எரிப்புப் போராட்டம் காவல் துறையின் கெடுபிடிகளை மீறி எரிக்கப்பட்டது. தோழர்கள் க. பழநிமாணிக்கம், பழ. இராசேந்திரன் (நகரச் செயலாளர்,த.தே.பொ.க.) ரெ. கருணாநிதி(மா.செ.குழு, த.தே.பொ.க.) சா.பேகன்(மா.செ.குழு, த.தே.பொ.க.) சி. அன்பழகன் (மா.செ.குழு, த.தே.பொ.க.) கோ. மோகன், கலைச்செல்வம் (கொரடாச்சேரி) உட்பட பலர் கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## திருத்துறைப்பூண்டி

பழைய பேருந்து நிலையும் எதிரில் தோழர் பி.ஜோசப் தலைமையில் நகல் எரிப்புப் போராட்டம் ஊர்வலமாக வந்த போது தோழர் இரா.கோவிந்தசாமி உட்பட 30 பேர் கைது செய்யப்பட்டார்கள். மாலையில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## சத்தியமங்கலம்

சத்தி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தோழர் ச. அர மணிபாரதி (பொதுக்குழு, த.தே.பொ.க.) தலைமையில் நகல் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. மொழிப்போர் மறவர் இரா. காளியண்ணன், நல்.தமிழ்நாடான் (தமிழகத் துணை தலைவர், த.இ.மு.), ஈரோடை சண்முகம், அ.கோவிந்தராசு (தமிழ் தமிழ் இயக்கம்), இரா.முத்து(தி.க.) நாகேசு (புதிய தமிழகம்) அ.வேங்கையன் (பு.இ.மு.) வி. சுந்தரராசு(தமிழர் பண்பாட்டுக் கழகம்) திராவிட வீரன்(பகுத்தறிவாளர் மா மன்றம்) உட்பட பலர் கைது செய்யப்பட்டு சத்தி காவல் நிலையத்தில் சிறை வைக்கப்பட்டனர். அங்கு வழக்கறிஞர் பா. மோகன்(இந்திய பொதுவுடைமைக்கட்சி) இராம. இளங்கோவன்(தி.க.) இரா. சக்திவேல்(தமிழ் இலக்கிய பேரவை) மோகன் குமார்(பழங்குடி மக்கள் சங்கம்) ஆகியோர் வாழத்துரை வழங்கினர்.

## மதுரை

பெரியார் பேருந்து நிலையம் அருகில் நகல் எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு.கருப்பையா (தமிழ் தமிழர் இயக்கம்) சி. காமராசு (த.தே.பொ.க.) உட்பட பலர் கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## காஞ்சிபுரம்

தமிழ் உரிமைக் கூட்டமைப்பு சார்பில் தமிழ்வழிக் கல்விக்கு எதிராக உயர்நீதிமன்றம்



படிப்பகம்

www.padippakam.com




காஞ்சியில் எரிப்புப் போராட்டம்

வழங்கிய மூன்று நீதிபதிகள் அளித்த தீர்ப்பு எரிப்பு போராட்டம் காஞ்சியில் ச. யோகநாதன் (த.தே.பொ.க. மாவட்டச் செயலர்) தலைமையில் நடைபெற்றது.

இரட்டை மண்டபத்திலிருந்து வட்டாட்சியர் அலுவலகம் நோக்கிப் பேரணியாக சென்றபோது பேருந்து நிலையம் அருகில் காவல் துறையால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

தமிழ்வழிக் கல்விக்கு எதிரான தீர்ப்பு நகல் எரித்த மா.செ. தமிழ்மணி (உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்) சி. நடராசன், (மாவட்டச் செயலாளர் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி). இரா. பாரதிவிசயன், (தலைவர், தமிழக் கலை இலக்கியப் பேரவை,) லோக. சங்கர், (தமிழ்நாடு இளைஞர் பேரவை,) இரா.ந.தேவராசன் (தலைவர் தமிழர் இயக்கம்,) மருத்துவர் மா. வரதராசன் (நூறு தமிழ் உணர்வாளர் பட்டினிப் போராட்ட வீரர்) இரா. வெங்கடேசன், (தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சி,) சு. சுதாகர், (தமிழக மாணவர் முன்னணி) உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டனர்.

## நகல் எரிப்புப் போர் விளக்கத் தெருமுனைக் கூட்டங்கள்

தமிழ் வழிக் கல்விக்கெதிரான, மெட்ரிக்குலேசன் வியாபாரிகளுக்கு ஆதரவான சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பு நகல் எரிப்புப் போராட்டத்தை விளக்கி 27.4.2000 அன்று காஞ்சி நகரில் பேருந்து நிலையம், ஜவுளிக்கடை சத்திரம், ரெங்கசாமி குளம், செட்டித்தெரு, சின்னக்காஞ்சிபுரம், போன்ற இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

தோழர் ச. யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டங்களில் தோழர்கள் இராசேந்திரசோழன் (தலைமைச் செயற்குழு த.தே.பொ.க,) கவிஞர் தமிழேந்தி (புரட்சி கவிஞர் கலை இலக்கிய மன்றம்) வாலாசா வல்லவன் (மா.பெ.பொ.க.) கடலூர் கம்பர் (நற்றமிழ் வளர்ச்சிக் கழகம்) இனியன் (த.இ.மு.) ஆகியோர் விளக்க உரையாற்றினார்கள்.

## தமிழக இளைஞர்களின் எதிர்காலம் சிறப்புக் கருத்தரங்கம்

மானுட சமூகத்திற்கு எதிராக உலக மயம், தனியார் மயம் எனும் கொடும் அரக்கன் தலைவிரித்தாடும் இன்றைய சூழலில் தமிழக இளைஞர் முன்னணி சார்பில் காஞ்சிபுரத்தில் தமிழக இளைஞர்களின் எதிர்காலம் அரசியல், பண்பாடு, விவசாயம் மற்றும் தொழில் வேலை வாய்ப்பில் எவ்வாறு உள்ளது என்பதை விளக்கி சிறப்புக் கருத்தரங்கம் 15.04.2000 சனிக்கிழமை அன்று காஞ்சியில் நடைபெற்றது.

தோழர் இரா. வெங்கடேசன் (காஞ்சி வட்ட அமைப்பாளர், த.இ.மு.) தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அரசியல் துறை குறித்து தோழர் அ. பத்மநாபன் (பொதுக்குழு, த.தே.பொ.க.) பண்பாட்டுத் துறை குறித்து தோழர் வாலாசா வல்லவன் (மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி) விவசாயம் குறித்து தோழர் ச.யோகநாதன் (தமிழகத் தலைவர், த.இ.மு.) தொழில் வேலைவாய்ப்புக் குறித்து திரு. இரா. பாலசுப்பிரமணியன் (தமிழ் கலை இலக்கிய பேரவை, விழுப்புரம்) ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இக் கருத்தரங்கை வாழ்த்தி திரு கடலூர் கம்பர் (நற்றமிழ் வளர்ச்சிக் கழகம்) தோழர் கு. ஏகாம்பரம் (மாவட்டப் பொருளாளர் மா.பெ.பொ.க.) தோழர் கே.எஸ். கோவிந்தசாமி (நகரச் செயலாளர், த.தே.பொ.க.) இரா. பாரதி விசயன் (தலைவர், தமிழ்க் கலை இலக்கியப் பேரவை) உரையாற்றினர்.

முன்னதாக தோழர் தி. பகலவன் வரவேற்புரையாற்றினார். இறுதியில் அரி.கிருட்டிணன் நன்றி கூறினார்.

## தமிழ்ச் சிந்தனையாளர் பேரவை சார்பில் முப்பெரும் விழா

ஏப்ரல் 30 அன்று சென்னை அசோக் நகரில் பாவேந்தர் பாரதிதாசன், அண்ணல் அம்பேத்கார், மே நாள் என முப்பெரும் விழா எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

தோழர் ம.செந்தமிழன் தலைமையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறித்து திரு. கங்காதரன், அண்ணல் அம்பேத்கர், திரு தஞ்சை இராமச்சந்திரன் மேநாள் குறித்து திரு அ. பத்மநாபன் (பொதுக்குழு, த.தே.பொ.க.) ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தோழர் தி.இராமச்சந்திரன் வரவேற்புரையாற்ற தோழர் மாயவன் நன்றி கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# நிகரன் விடைக்கு அ.மார்க்ஸ் மறுப்பு!

தங்களின் மார்ச்-ஏப்ரல் 2000 இதழில் நிகரன் விடைகள் என்னும் பகுதியில் என்னைக் குறித்துத் திரித்து எழுதப்பட்ட செய்தி ஒன்று தொடர்பாக கீழ்க்கண்ட கருத்துக் களை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

தமிழில் தீட்டு, மாதவிலக்கு போன்ற சொற்கள் உள்ளதனால் அது ஒரு ஒடுக்குமுறைக் கருவி என நான் சொன்னதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். நான் சொன்னதன் ஒரு பகுதி இது. இதர மொழிகளில் Menses, Menstruation எனப் பயன்படுத்தப்படும் சொற்கள் மாதந்தோறும் வரக்கூடிய ஒரு நிகழ்வு என்கிற பொருளைக் கொண்டுள்ள போது தமிழில் அது தீட்டு, மாதவிலக்கு எனப் பெண்களை இழிவு படுத்தும், பெண்கள் மீது வன்முறையைப் பிரயோகிக்கும் சொற்களாக வழக்கத்தில் உள்ளதை நான் சுட்டிக் காட்டினேன். இதற்குரிய பதிலைச் சொல்லியிருக்க வேண்டிய நீங்கள் எனது கூற்றில் பாதியை மட்டும் வெட்டி எடுத்துக் கொண்டு தீண்டாமை என்ற சொல் இருப்பதாலேயே ஒரு மொழி மோசமாகி விடுமா என்றெல்லாம் எங்கள் புத்திசாலித் தனத்தைக் காட்டியுள்ளீர்கள். Mensus என்பதற்கு நிகரான சொல் தமிழில் உள்ளது என்பதைக் குற்றமாகச் சொல்லவில்லை. என்ன பொருளிலான சொல் பாவிக்கப்படுகிறது என்பதுதான் கேள்வி. எங்களை நுனிப்புல் மேய்பவர்கள் என்று சொல்லியுள்ளீர்கள். யார் நுனிப்புல் மேய்வது, யார் நேர்மையில்லாமல் வாதிடுவது என்பதை உங்கள் வாசகர்கள் முடிவு செய்து கொள்ளட்டும்.

மொழி என்பது வர்க்கப் போராட்டம் நடை பெறும் களமாக உள்ளது, அது ஒரு அப்பாவித்தனமான ஊடகம் இல்லை என நவீன சிந்தனையாளர்கள் சொல்கின்றனர். இது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக நிற்கிறவர்கள் மொழியின் இந்தத் தன்மையை எப்போதும் சுட்டிக் காட்டி வந்துள்ளனர். பின் நவீனத்துவச் சிந்தனையாளர்கள் மட்டும் இதனைச் செய்யவில்லை. சென்ற நூற்றாண்டிலேயே ஜோதிபா பூலே அவர்கள் மொழியின் ஆணாதிக்கத் தன்மையைச் சுட்டிக் காட்டி பால் சாரா மொழி ஒன்றை உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டார். இன்றைய பெண்ணியர்கள் இதனைச் செய்கின்றனர்.

தமிழகத்தில் எங்களுக்கு முன்னால் நுனிப்புல் மேய்ந்த இன்னொருவரை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர் பெயர் ஈ. வே. ராமசாமிப் பெரியார். அவர் கேட்டார்:

"மக்கள், தேவர், நாகர் உயர்தினை என்றால் என்ன? நாகர்கள் யார்? தேவர்கள் யார்? இலக்கணத்திலேயே மதத்தைப் போதிக்கும் சூழ்ச்சிதானே இது?"

என மொழியிலும் இலக்கணத்திலும் படிந்து போயுள்ள ஆதிக்கத் தன்மைகளை அவர் தோலுரித்தார். பெரியாரின் வழியில் நாம் இன்று மேலும் பல கேள்விகளை எழுப்ப இயலும். தமிழர்களில் ஒரு சாரரின் மொழியை 'இழிசனர் மொழி' என இழிவு செய்தது என்ன நியாயம்? 'செந்தமிழ் x கொடுந்தமிழ்' எனத் தமிழைப் பிரித்து ஒரு சாரரின் மொழியை உயர் தமிழாய் தரப்படுத்தி இன்னொரு சாரர் பேசியதை கொடுந்தமிழ் என ஓரங்கட்டியது சரியா? யார் பேசியது செந்தமிழ்? யார் பேசியது கொடுந்தமிழ்? தமிழ்ப் பா வகைகளையும், தமிழ் எழுத்துக்களையும் நான்கு வருணங்களாகப் பிரித்து பிராமண எழுத்துக்கள் எனவும் சூத்திர எழுத்துக்கள் எனவும் வகை பிரித்த கொடுமையை நாம் இன்று ஏற்றுக் கொள்கிறோமா? ஏற்றுக் கொள்ள வில்லை எனில் எப்போதாவது நாம் இதனைச் சுய விமர்சனம் செய்திருக்கிறோமா? வெறும் வட சொற்களை நீக்குவதோடு தமிழைத் 'தூய்மை'ப் படுத்துதல் முடிந்து விடுகிறதா? 'கன்னிகாதானம்' என்பதை கன்னிக் கொடை எனவும் 'பதிவிரதை' என்பதை கணவனைத் தொழுபவள் எனவும் தூய்மையாக்கினால் போதுமா? Street dog என்பதற்குப் பறை நாய் என்ற சொல்லை புதுமைப்பித்தன் போன்றவர்கள் கூடக் கையாண்டுள்ளது மொழி மூலமான வன்முறை இல்லையா?

தமிழின் பெயரால் பார்ப்பனியத்தையும் வருணாசிரமத்தையும் ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு இவை எல்லாம் வன்முறையாகத் தெரியாது. தமிழின் பெயரால் தலித்தியத்தை மறுக்கிற நீங்கள், தமிழ் வணிகர்கள் மாநாடு என்கிற பெயரில் இசுலாமியத் தமிழ் வணிகர்களை ஒதுக்குகிற நீங்கள் கட்டமைக்கும் தமிழ்ப் பேரடையாளம் இந்த வன்முறைகளைக் கண்டு கொள்ளாதது வியப்பில்லை.

இந்த வன்முறைகளைச் சுட்டிக் காட்டுவதற்காக "இவர்கள்தமிழ் விரோதிகள்" என்பதாகச் சுட்டிக் காட்டுகிறீர்கள் அல்லவா இதுதான் பாசிசத்தின் முதற்படி. நாங்கள் தமிழின் விரோதிகள் அல்ல; ஆனால் பாசிசத்தின் எதிரிகள்.

- அ. மார்க்ஸ்

## நிகரன் விடைகள்

அ.மார்க்சின் மறுப்பு குறித்து விவாதிப்பதற்கு முன் அவர் குறிப்பிடும் நிகரன் விடையைப் பார்க்கலாம்.

ஓ பின் நவீனத்துவம் என்பதை சுருக்கமாக விளக்க முடியுமா?

-க. செல்வராசு, மயிலாடுதுறை.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு வரியில் சொல்வதெனில், நுனிப்புல் மேய்வது என்று கூறலாம். பின் நவீனத்துவவாதிகள் பட்டியலிடும் ஒடுக்குமுறைக் கருவிகளில் மொழியும் ஒன்று. தமிழ் மொழியில் தீட்டு, மாதவிலக்கு போன்ற சொற்கள் இருக்கின்றனவாம். இவைகள் பெண்ணை ஒடுக்கும் கருத்துடையவை எனவே தமிழும் ஒடுக்குமுறைக் கருவிதான் என்கிறார்கள். (சன் டி.வி.யில். அ.மார்க்ஸ் நேர்காணல், வணக்கம் தமிழகம் 6.4.2000)

ஒரு மொழியில் ஒடுக்குமுறைச் சொற்கள், விடுதலைச் சொற்கள், உயர்வு தாழ்வு குறித்த சொற்கள், சமநிலை குறித்த சொற்கள், அடிமைத்தனம் பற்றிய சொற்கள், புரட்சி பற்றிய சொற்கள் என எல்லாம் தாம் இருக்கும். சமூக வளர்ச்சிக்கேற்ப மொழியும் வளரும்.

ஒடுக்கு முறைக்கான மொழி என்றும் விடுதலைக்கான மொழி என்றும் ஒரு மொழியை ஒட்டு மொத்தமாகப் பார்ப்பதே அவர்கள் கூறிக்கொள்ளும் கூறு கூறாக பிரித்துப் பார்க்கும் அணுகு முறைக்கும் இது முரணான பார்வையாகும்.

..."யாவரும் கேளிர்" "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற சொற்றொடர்கள் உள்ள தமிழில்தான் தீண்டாமை என்ற சொல்லும் இருக்கிறது.

தமிழுக்கும் எதிரானது தான் பின் நவீனத்துவம்.

## நிகரன் விளக்கம்

இது பற்றி பேரா. அ. மார்க்ஸ் கூறும் விளக்கத்தைப் பாருங்கள்.

"தமிழில் 'தீட்டு' 'மாதவிலக்கு' போன்ற சொற்கள் உள்ளதால் அது ஒரு ஒடுக்குமுறைக் கருவி என நான் சொன்னதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். நான் சொன்னதன் ஒரு பகுதி இது" என்று மார்க்ஸ் ஒத்துக் கொள்கிறார்.

அவரது வரையறுப்பின் ஒரு பகுதி வெளியிடப்பட்டுள்ளது; மறு பகுதி மறைக்கப்பட்டுள்ளது என்கிறார். மறைக்கப்பட்ட மறு பகுதி என்ன? சன் தொலைக்காட்சி நேர்காணலில் அவர் கூறியதன் மறு பகுதி எதுவும் மறைக்கப்படவில்லை.

அவரது இந்த மறுப்பு மடலில், தமிழ் ஒடுக்குமுறைக் கருவி என்று மேற்படி நேர்காணலில் அவர் சொன்னதை அவரே ஒப்புக் கொள்கிறார்.

அவரது, இந்த வரையறுப்பில்தான் நாம் தலையிடுகிறோம். ஒரு மொழியில் பிற்போக்குக் கருத்துகள் முற்போக்குக் கருத்துகள், ஒடுக்குமுறைக் கருத்துகள், விடுதலைக் கருத்துகள் எல்லாம் இருக்கும்; சமூக வளர்ச்சிக்கேற்பதான் மொழி இருக்கும். சமூக முரண்பாடுகள் மொழியில் வெளிப்படுவது இயல்பே.

எந்த ஒரு மொழியையும் ஒட்டு மொத்தமாக பிற்போக்கு மொழி என்றோ முற்போக்கு மொழி என்றோ ஒடுக்குமுறை மொழி என்றோ புரட்சிமொழி என்றோ முத்திரை குத்தக் கூடாது என்பதே நமது வாதம். இதற்கென்ன மார்க்ஸ் விடை கூறியுள்ளார்? ஆங்கில மொழி ஆண்- பெண் சமத்துவ மொழி என்று கூறுகிறாரா? பெண்ணடிமைத்தனம் இல்லாத மொழி ஆங்கிலம் என்று அவர் வாதிடுகிறாரா?

அதுதான் அவர் கருத்து என்றால் அதை நேரடியாகச் சொல்லலாமே! தமிழில் மாதவிலக்கு, தீட்டு என்ற சொற்கள் இருக்கின்றன. எனவே அது ஒடுக்குமுறைக்கருவி. ஆங்கிலத்தில் 'மென்சஸ்' என்றுதான் இருக்கிறது என்பதோடு நிறுத்திக் கொள்கிறார். இது என்ன புரிதலைத் தருகிறது? ஆங்கிலத்தில் பெண்ணடிமைத்தன சொற்கள் இல்லை என்ற உட்பொருளைத் தான் இது சொல்லாமல் சொல்கிறது.

மனித சமுதாயத்தை - ஆண் மூலம் பார்த்து அதன் வழியில் உருவாக்கிக் கொண்ட சொற்கள் ஆங்கிலத்தில் நிறைய இருக்கின்றன. மனித குலத்தை **Mankind** என்கிறது ஆங்கிலம் இதில் **Womankind** எங்கே?

மனிதாயம், மனிதநேயம் என்பதற்குரிய **Human, Humanism** ஆகியவை ஆண் சார்ந்த சொற்கள் தாம்.

**Human** என்பதற்கு **Chambers 20th Century Dictionary** பின்வரும் பொருள் கூறுகிறது:

**Human adj. belonging to or Pertaining to or of the nature of man or mankind. having the qualitics of a man or the limitations of man.**

இதேபோல் **Chairman, Sportsman, Pressmen** போன்ற ஆண் சார்ந்த சொற்கள் இருக்கின்றன. இப்பணிகளில் பெண்களும் இருக்கிறார்கள். இதை மாற்றுவதற்கு **Chair Person** போன்று பொதுச் சொற்கள் உருவாக்கப்படுகின்றன.

ஆணாதிக்கக் கருத்தாக்கம், சாதி ஆதிக்கக் கருத்தாக்கம் போன்ற ஒழிக்கப்பட வேண்டிய கருத்தாக்கங்களைப் பிரதிபலிக்காத பொதுச் சொற்களைத் தமிழிலும் நாம் உருவாக்க வேண்டும்.

பறையா **(Pariah)** என்ற சொல்லை இழிவான பொருளில் ஆங்கிலம் ஏற்றுக் கொண்டுள்ளது பற்றி இவர் என்ன சொல்கிறார்?

செந்தமிழ் கொடுந்தமிழ் என்று இவர் பேசுகிறார். இப்பொழுது இருப்பது தமிழ்தான்! பழைய உரைகாரர் வகுத்த செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற பாகுபாட்டையோ தொல்காப்பியம் கூறும் வருணக் கருத்தையோ தமிழ்த் தேசியம் ஏற்கவில்லை. இப்பொழுது நடைமுறையில் இல்லாத பழைய கருத்துகளை வைத்துக்கொண்டு தமிழையும் தமிழ்த் தேசியத்தையும் இவர் தாக்குவது இவரது உள்நோக்கத்தைத்தான் அம்பலப்படுத்தும்.



படிப்பகம்

www.padippakam.com

கொடுந்தமிழ் என்ற மொழிப் பிரிவினையைத் தொல்காப்பியர் கூறவில்லை. தொல்காப்பிய நூற்பா இதோ:

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்
தம் குறிப் பினவே திசைச் சொற் கிளவி

இந்நூற்பா திசைச் சொல் குறித்து விளக்கவந்ததே அன்றி சொல்லின் உயர்வு தாழ்வு குறித்துப் பேச வரவில்லை.

திசைச் சொல் **(dialect)** என்பது வட்டார வழக்கு. இச்திசைச் சொல் அந்தந்த வட்டாரத்தில் ஒரு குறிப்பிட்ட பொருளை விளக்குமே அல்லாது இயற்சொல் (பொதுமொழி **standard language**) போல் பன்னிருவகை நிலப்பகுதிக்கும் பொதுவானது அல்ல என்பதே இதன் பொருள்.

இங்கு மேல் சாதி மக்கள் பேசுவது செந்தமிழ் என்றும் கீழ் சாதி மக்கள் பேசுவது கொடுந்தமிழ் என்றும் தொல்காப்பியம் கூறுவதாகக் கருத இடமே இல்லை.

"செந்தமிழ் X கொடுந்தமிழ் எனத் தமிழைப் பிரித்து ஒரு சாரரின் மொழியை உயர் தமிழாய்த் தரப்படுத்தி இன்னொரு சாரர் பேசியதைக் கொடுந்தமிழ் என ஓரங்கட்டியது சரியா? யார் பேசியது செந்தமிழ்? யார் பேசியது கொடுந்தமிழ்?" என்று கேட்கிறார் மார்க்ஸ்.

மொழி இயல் குறித்த செய்திகளை மார்க்ஸ். அவர் விருப்பத்திற்கேற்ப வீசுகிறார்.

பொது மொழி X வட்டார மொழி (கிளை மொழி) என்ற பாகுபாடு எல்லா வளர்ச்சியடைந்த மொழிகளுக்கும் உண்டு. வட்டார மொழியைத்தான் தொல்காப்பியம் திசைச் சொல் என்கிறது. பொது மொழியைத் தான் அது இயற்சொல் என்கிறது.

பின்னர் வந்த உரைகாரர் திசைச் சொல்லை கொடுந்தமிழ் என்று குறிப்பிட்டார். கொடுந்தமிழ் என்பதன் பொருள் கொடுமையான தமிழ் என்பதல்ல. நேராக இல்லாத, வளைந்த சொல் என்பதே அதன் பொருள்.

ஒரு சாரர் மொழியை உயர்த்தி ஒரு சாரர் மொழியை ஓரங்கட்டி என்று மார்க்ஸ் குறிப்பிடுவதில் "ஒரு சாரர்" என்ற சொற்றொடர் வருகிறது. இந்த "ஒரு சாரர்" தொல்காப்பியத்தில் வருகிறதா? இல்லை. பெருநிலப்பகுதி முழுதிலும் புரிந்து கொள்ளப்படும் மொழி - பேசப்படும் மொழி என்றும் வட்டாரத்தில் மட்டும் பேசப்படும் -புரிந்து கொள்ளப்படும் மொழி என்றும் விளக்குகிறார்கள். "ஒரு சாரர்" என்பதை "உயர்சாதி", "கீழ்சாதி" என்ற பொருள்படும்படி மார்க்ஸ் பேசி வருகிறார்; எழுதிவருகிறார்.

சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகள் தங்கள் பண்பாட்டை - மொழி நடையை உயர்வாகச் சொல்லிக் கொள்வது காலம் காலமாய் உள்ள ஆதிக்கக்குணம். இந்த ஆதிக்கப் போக்குத் தமிழ் மொழியிலும் உண்டு. இதனை எதிர்க்கவேண்டும். ஆனால் இதற்காக ஒட்டுமொத்த தமிழ் மொழியே ஒரு சாரர்க்கு எதிரான ஒடுக்குமுறைக் கருவி என்பது சரியல்ல.

ஒடுக்கப்பட்ட வகுப்பில் பிறந்த இளைஞர்களைத் தமிழ் மொழிக்கு எதிராகத் திருப்பி விட மார்க்ஸ், தாமே 'கட்டுடைத்துக் கொண்ட' கதை இது.

செந்தமிழ் என்பது தமிழ் கூறும் நல்லுலகப் பெரும்பரப்பில் வாழும் 'எல்லா சாரர்'க்கும் உரியதாகவே குறிக்கப்படுகிறது. அப்பெரு நிலப்பரப்பைச் சுற்றியுள்ள வட்டாரங்களில் வாழும் 'எல்லாசாரர்'க்கும் உரியதாகவே கொடுந்தமிழ் குறிக்கப்படுகிறது.

ஆனந்த விகடன் வெளியிட்ட தமிழ் அகராதி பின் வருமாறு கூறுகிறது.

> **சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகள் தங்கள் பண்பாட்டை - மொழி நடையை உயர்வாகச் சொல்லிக் கொள்வது காலம் காலமாய் உள்ள ஆதிக்கக்குணம். இந்த ஆதிக்கப் போக்குத் தமிழ் மொழியிலும் உண்டு. இதனை எதிர்க்கலாம். ஆனால் இதற்காக ஒட்டுமொத்த தமிழ் மொழியே ஒரு சாரர்க்கு ஒடுக்குமுறைக் கருவி என்பது சரியல்ல.**

கொடுந்தமிழ் : செந்தமிழல்லாதது, செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்திருக்கும் நிலங்களில் வழங்கும் தமிழ்.

டாக்டர் செ.வை. சண்முகம் கூறுகிறார்.

செந்தமிழ் / கொடுந்தமிழ் அல்லது இயற்சொல் / திசைச் சொல் பாகுபாடு மொழி உணர்வை அடிப்படையாகக் கொண்டதாக வேண்டும் (சண்முகம் 1980ஆ); ஏனெனில் தாய்மொழிச் சொற்களுக்குள்ளே இந்த வேறுபாடு செய்யப்படுகிறது. ஒரு மொழி இலக்கிய மொழியாகப் பயன்படும் போது பெரும்பாலும் நிலை மொழியிலே (இயற்சொல்) எழுதப்படும். தன்னை அறியாமலே சில கிளை மொழிச் சொற்கள்/ திசைச் சொற்கள் புகுந்துவிடும் அல்லது சில காரணங்களுக்காக இலக்கிய ஆசிரியன் புகுத்துவதும் உண்டு. ஆகவே நிலைமொழி/ கிளைமொழி என்ற பாகுபாடு மொழியின் அந்தக் கால சமூகப் பொருளாதாரப் பண்பாட்டுச் சூழலினால் அமையும். இதை மொழிபற்றிய உணர்வு என்று கூறுவதே பொருந்தும்.

-சொல்லிலக்கணக்கோட்பாடு
-டாக்டர் செ.வை. சண்முகம்
பக் 112-113.

தொல்காப்பியரோ திசைச் சொல்லும் அதாவது கொடுந்தமிழும் செய்யுளுக்குரிய சொல் என்றே குறிப்பிடுகிறார்.

"இயற்சொல் திரிசொல் திசைச் சொல் வடசொல்லென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே"
(எச்சவியல்)



படிப்பகம்

www.padippakam.com

செந்தமிழ் எனப்படும் இயற்சொல், திரிசொல், கொடுந்தமிழ் என்று உரைகாரர்களால் கூறப்பட்ட திசைச் சொல், வடசொல் நான்கும் செய்யுள் இயற்றுவதற்குரிய சொற்கள் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

இங்கு பாகுபாடு இல்லை.

இப்பொழுது கவிதை, புதினம், சிறுகதை அனைத்திலும் வட்டார மொழியின் பங்கு மேலோங்கியுள்ளது. வட்டார மொழியில் ஒடுக்கப்பட்ட மக்களின் பேச்சு மொழியும் அடங்கும். வட்டார மொழியில் எழுதப்படும் கதை இலக்கியமே சிறந்ததாகக் கருதப்படுகிறது. அதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. தொல்காப்பியர் காலத்திலும் ஓரங்கட்டப்படாத-நம் காலத்திலும் ஓரங்கட்டப்படாத, வட்டார வழக்குச் சொற்களுக்குப் புத்துருவாக்கம் கொடுக்கும் பொறுப்பு பின் நவீனத்துவ வாதிகளின் தோளில் சுமத்தப்பட்டிருப்பது போல அவர்கள் வலி தாங்காமல் புலம்ப வேண்டியதில்லை.

இவர்கள் இது குறித்துப் பேசுவதற்கு முன்னாலேயே சிறுகதை மற்றும் புதினங்களில் வட்டார வழக்கு சிறப்பாக இடம் பெறத் தொடங்கிவிட்டது.

உரைகாரர்கள் வாழ்ந்த காலத்தில் நிலவிய சமூக முரண்பாடுகள், அவர்களது விளக்கவுரையிலும் இடம் பெற்றுள்ளன. அக்கருத்துகள் அக்காலச் சமூக அமைப்பைப் புரிந்துகொள்ள உதவுகின்றன அவ்வளவே! அவ்வுரைகாரர்களின் கருத்துகள் தமிழ்மொழியின் சட்டமாக எப்போதும் இருந்ததில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக, காலவளர்ச்சிக்கேற்ப வரும் சொல் எதையும் விலக்க வேண்டியதில்லை என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

'கடிசொல் இல்லை காலத்துப் படினே'

இவ்வாறு இலக்கணங்களைக் கொண்டுள்ள தமிழை ஒட்டு மொத்தமாக ஒடுக்குமுறைக்கருவி என்று கூறுவது நுனிப்புல் மேய்வதன்றி வேறென்ன?

அ. மார்க்சுடன் முரண்பாடு எங்கு வருகிறது? ஒட்டு மொத்தத் தமிழ் மொழியே ஒடுக்குமுறைக் கருவி என்று அவர் கூறுவதில்தான் நமக்கு முரண்பாடு. இப்படிக் கூறுவதைப் பின் நவீனத்துவக் கோட்பாடு என்கிறார். இதைத்தான் நாம் எதிர்க்கிறோம்.

ஜோதிபா பூலே 'பால்சாரா மொழி' ஒன்றை உருவாக்க முயன்றதாக மார்க்ஸ் குறிப்பிடுகிறார். ஒரு மொழியில் பால்சாரா சொற்களை உருவாக்கலாமே தவிர, பால்சாராப் புது மொழி ஒன்றை உருவாக்கிட இயலாது.

தந்தை பெரியார் தமிழ் மொழியில் உள்ள வர்ணாசிரமச் சொற்கள், மூடநம்பிக்கைச் சொற்கள் போன்றவற்றைச் சாடியதை எடுத்துக்காட்டி, அவர் இப்போது அ. மார்க்ஸ் கூறுவதைத்தான் அப்போது கூறினார் என்று இவர் கூறிக் கொள்வது பொருந்தாக் காமம்.

தந்தை பெரியார் தமிழ் இனவிடுதலைக்காகவும் பெண் விடுதலைக்காவும் பார்ப்பன ஆதிக்க ஒழிப்பிற்காகவும் பகுத்தறிவிற்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். அவர் தமிழில் உள்ள உயர்வு தாழ்வுச் சொற்களைச் சாடினார்.

ஆதிக்கக் கருத்துகள் மூடநம்பிக்கைகள் தமிழில் நிரம்பியிருக்கின்றன என்று கருதிய பெரியார் தமிழ் இனம் முன்னேற வேண்டும் என்ற அக்கறையில் ஒரு தாயின் சீற்றம் போல் தமிழ் மொழியை எதிர்த்தும் கருத்துக்கள் கூறியுள்ளார். அவர் ஒரு போதும் தமிழ் மொழியை ஒழிக்கப் புறப்பட்டதில்லை.

இப்பின்னணியில்தான் பெரியாரை நாம் புரிந்து கொள்கிறோம். இருந்த போதிலும் மொழிக் கொள்கை குறித்த அவரது நிலைபாட்டில் நமக்கு வேறுபாடு உண்டு.

தமிழ்நாடு தமிழர்க்கே என்று, கடைசி வரை முழங்கிய பெரியாரை, 'தமிழ்த்தேசியம் பாசிசம்' என்று பார்க்கும் மார்க்ஸ் போன்ற பின் நவீனத்துவவாதிகள் துணைக்கழைத்துக் கொள்வது, தங்களது உண்மை முகத்தை மறைத்துக் கொள்ள ஒட்டிக் கொள்ளும் முகமூடி தவிர வேறல்ல.

தமிழின் பெயரால் வர்ணாசிரமத்தையும் பார்ப்பனியத்தையும் நாம் ஆதரிப்பதாக மார்க்ஸ் எழுதுகிறார். இதற்கெல்லாம் என்ன சான்று?. எம்மைப் பொறுத்த வரை, அ.மார்க்ஸ் பார்ப்பனியத்திற்கு மறைமுகச் சேவை செய்கிறார் என்பதை அறிந்துள்ளோம்.

தமிழ்மொழியின் உயர்வு, தமிழ்மொழியின இலக்கிய மேன்மை, ஆகியவற்றைப் பாராட்டியும் தமிழ்த் தேசியத்தை முன்வைத்தும் பேசுவோர் வெள்ளாளர் ஆதிக்கத்தை ஆதரிப்பவர்கள் என்று தொடர்ந்து எழுதியும் பேசியும் வருபவர் இவர். சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது "பெருஞ்சித்திரனார், மணியரசன், இன்குலாப் போன்றவர்கள் வெள்ளாளர்களுக்குக் கோவணம் கட்டி விடுபவர்கள்" என்று கூறினார். இப்பேச்சை எடுத்துப் போட்டு தென்மொழி வன்மையாக இவரைக் கண்டித்தது. அதற்கு ஒரு மழுப்பல் விளக்கமளித்தார் மார்க்ஸ்.

இவ்வாறு தமிழின் பக்கம் நிற்போரை, தமிழ்த்தேசியம் பேசுவோரை வெள்ளாளர் ஆதிக்கத்தை ஆதரிப்பவர்கள் என்று கொச்சைப்படுத்தி பார்ப்பனிய எதிர்ப்பின் கூர்முனையைத் திசைமாற்றி வெள்ளாளர்க்கு எதிராக அதைத் திருப்பிவிடுவது தான் அ. மார்க்சின் உத்தி. இவர் பார்ப்பனியத்தை எதிர்ப்பவர் போல் காட்டிக்கொண்டு, எம்மைப் பார்ப்பனிய ஆதரவாளர் என்று சித்தரிக்க ஆசைப்படுவது அவரது மனவக்கிரம் தவிர வேறல்ல.

வர்ணாசிரமத்தையும் பார்ப்பனியத்தையும் எதிர்த்துப் போராடியதற்காக, பொதுக்கூட்டங்களில் பேசியதற்காக எம



படிப்பகம்

www.padippakam.com

இயக்கத் தோழர்கள் மீது அரசு போட்ட வழக்குகள் பற்றி இவருக்குத் தெரியுமா?

அடுத்து, தலித்துகளுக்கும் இஸ்லாமியர்களுக்கும் நாம் எதிரிகள் என்று காட்ட ஆசைப்படுகிறார்.

இவர் மறுப்புரைக்க வந்த பொருளுக்கும் இக்கருத்துக்களுக்கும் என்ன தொடர்பு? ஓர் ஆய்வாளர் தாம் எடுத்துக் கொண்ட பொருளுடன் எல்லை கட்டிக் கொண்டு, எவ்வளவு விரிவாக ஆனாலும் அப்பொருளைச் சுற்றி விமர்சனம் செய்வது தானே நேர்மையாக இருக்கும்.

தலித்துகள், இஸ்லாமியத் தமிழர்கள் ஆகியோர்க்கு எதிராக எம்மை நிறுத்த வேண்டும் என்ற இவரது "மாபெரும் வியூகம்" இவரது ஆய்வாளர் தகுதியைத் தகர்த்து, இவரது குறுகிய மனப்போக்கைக் காட்டிக் கொடுத்து விடுகிறது.

தலித் மக்கள் விடுதலைக்காகவும் அவர்களுக்கு எதிரான சாதி ஆதிக்கச் சக்திகளின் அடக்கு முறைகளை எதிர்த்தும் நாம் நடத்தும் போராட்டங்கள், இயக்கங்கள் அந்தந்தப் பகுதி மக்களுக்குத் தெரியும். தமிழர் கண்ணோட்டம் வாசகர்களும் அறிவார்கள். "தலித்தியம்" என்றொரு புதிய தத்துவம் **(Philosophy)** உருவாகி இருப்பதாகச் சொல்லப்படுவதில் நாம் மாறுபடுகிறோம். தலித் மக்களுக்காகப் பெரும் திரள் மக்கள் இயக்கம் நடத்துவோர் யாரும் இப்போது தலித்தியம் என்ற தனித் தத்துவம் இருப்பதாகச் சொல்லவில்லை. இங்கு அது விவாதப் பொருளல்ல.

தலித் விடுதலைப் போராட்டத்தில் அ. மார்க்சின் பங்களிப்பு என்ன, போராடும் தலித் அமைப்புகள் இவர்பற்றி என்ன வரையறுப்பு வைத்திருக்கின்றன என்பதெல்லாம் நமக்குத் தெரியும். அதுவும் இங்குவிவாதப் பொருள் அல்ல. சன் தொலைக்காட்சி நேர்காணலில் நிறப்பிரிகையின் சாதனை குறித்துப் பேசியவர் அவ்விதழின் முதுகெலும்பாக விளங்கிய - ஒடுக்கப்பட்ட வகுப்பில் பிறந்து, அம்மக்கள் விடுதலைக்காக செயலாற்றும் ரவிகுமார் பெயரை ஏன் சொல்லவில்லை?

த.தே.பொ.க நடத்திய தமிழர் தொழில் வணிகப் பாதுகாப்பு மாநாட்டில் இசுலாமியத் தமிழ் வணிகர் யாரும் இடம் பெறவில்லை என்கிறார். வணிகர் என்ற முறையில் இஸ்லாமியத் தமிழர் ஒருவரும் பங்கு பெறவில்லை தான். காரணம், அப்போது எமக்கு இஸ்லாமியத் தமிழ் வணிகர்கள் தொடர்பு இல்லாமற்போனது தான். அத்துடன், துறைவாரியாக சில வணிகர்களைத் தேர்ந்தெடுத்தோமே தவிர மதவாரியாகத் தேர்ந்தெடுக்கவில்லை. அங்கு நடந்தது இந்துத் தமிழ் வணிகர் மாநாடும் அல்ல.

ஆனால் அம்மாநாட்டில் கருத்துரை, ஆற்றியவர்களுள் இஸ்லாமிய வகுப்பில் பிறந்த ஒரு தமிழரும் இருந்தார். நிகழ்ச்சி நிரலையோ, நிகழ்ச்சியையோ பார்த்தோர் இதை அறிவர். கருத்துரை ஆற்ற அவரை நாம் மத அடிப்படையில் அழைக்கவில்லை. அவரது கருத்தாற்றலே அவரை அழைத்ததற்குக் காரணம்.

பாபர் மசூதி இடிப்பு எதிர்ப்பு, ஆர்.எஸ். எஸ் எதிர்ப்பு, சிறுபான்மை இசுலாமியர் பாதுகாப்பு என்பவற்றில் த.தே.பொ.க என்றும் உறுதியாகவே உள்ளது. தனிநபர் லாபம் கருதி இசுலாமியர் ஆதரவு என்ற நிலைப்பாட்டை நாம் ஒரு போதும் எடுத்ததில்லை. இசுலாமிய அடிப்படை வாதத்தை நாம் ஆதரிக்கவில்லை என்பதையும் பகிரங்கப்படுத்தியே வருகிறோம்.

இவரை நாம் தமிழ் விரோதி என்று சொல்லி விட்டோமாம். அதனால் நாம் பாசிச வாதிகளாம்! தமிழ் மொழியை ஒடுக்கு முறைக் கருவி என்று இழிவுபடுத்தி எதிர்க்கும் இவரை தமிழ் விரோதி என்று சொல்லாமல் தமிழ்ப் பற்றாளர் என்று சொல்லமுடியுமா?

சன் தொலைக்காட்சியில் இவர் கூறிய பதிலை நாம் மறைக்கவும் இல்லை திரிக்கவும் இல்லை என்பதற்கு அவர் விடுத்துள்ள மறுப்பு மடலே சான்று.

மொழியை அப்பாவி ஊடகம் என்று நாம் கருதவில்லை. "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்; தமிழ் எங்கள் இளமைக்குப் பால்" என்னும் போது இம்மொழி தமிழர்களைப் போர்க்களத்திற்குத் திரட்டும் ஆற்றலைப் பெற்றிருக்கிறது என்பது புரியும்.

தமிழர்களுக்குக்கிடையே ஆதிக்கம், அடக்குமுறை, ஒடுக்கப்படுதல், உரிமை மறுக்கப்படுதல் என்ற முரண்பாடுகள் இருக்கின்றன. இம்முரண்பாடுகளைத் தீர்க்கப்போராட்டம் நடந்து வருகிறது; முழு மாற்றம்பெற தமிழ்த் தேசியப் புரட்சி வரவேண்டும். சமூகக் கொந்தளிப்பு மொழிக்குள்ளும் இடம்பெறும். மொழி வாயிலாகத் தானே அக்கொந்தளிப்பு வெளிப்பட்டாக வேண்டும். இவ்வகையில் தான் ஆதிக்கக் கருத்துடைய சொற்களும் ஆதிக்க எதிர்ப்புக் கருத்துடைய சொற்களும் தமிழில் இடம் பெறுகின்றன.

கொடுந்தமிழ், சூத்திரச் சொற்கள், வர்ணாசிரமப் பாவகை என்று ஒரு குறிப்பிட்ட காலத்தில் சிலர் கட்டி வைத்துக் கொண்ட பெயர்கள் இப்பொழுது எங்கே இருக்கின்றன? அப்படி ஒரு கருத்து இருந்ததாக இப்போது எத்தனை பேர்க்குத் தெரியும்? இலக்கியம் படைக்க அவை குறுக்கே நிற்கவில்லையே!

இப்பொழுது சிக்கல் என்ன? செந்தமிழ் X கொடுந்தமிழ் ஒடுக்குமுறையா? இல்லை. ஒட்டுமொத்தத் தமிழே ஒடுக்கப்படுகிறது. இந்தியால், ஆங்கிலத்தால் தமிழ் ஒடுக்கப்படுகிறது. ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை கூடத் தமிழில் படிக்க ஆணை போடக்கூடாது என்று தமிழக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில் ஒடுக்குமுறையிலிருந்து தமிழை விடுதலை செய்யப் போர் ஒன்று தேவைப்படுகிறது. இவர் தமிழ் ஒடுக்குமுறைக் கருவியாக இருக்கிறது என்று கூக்குரலிடுகிறார். எங்கோ சாப்பிட்டது செரிமானம் ஆகாமல் வாந்தியாக வருகிறது

தமிழர்களை ஒன்றிணைக்கவும் தமிழர்களைப் போராடத் தூண்டவும் உள்ள ஒரு பெருஞ்சக்தி தமிழுக்கே இருக்கிறது. அத்தமிழை ஒடுக்குமுறைக் கருவி என்று கூறும் மார்க்சை, தமிழ் விரோதி என்று சொல்லக்கூடாது என்றால் தமிழ்த்துரோகி என்று கூறுவோம்.❖



படிப்பகம்

www.padippakam.com

## மே நாள் பொதுக் கூட்டங்கள்

### தஞ்சை நகரம்

114வது மே நாளை கொண்டாடும் வகையில் 1.5.2000 அன்று தஞ்சை கோரிக்குளத்தில் மே நாள் பொதுக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் ரகுபதி தலைமை தாங்கினார். தோழர் பெ.மணியரசன் (பொதுச்செயலாளர், த.தே.பொ.க.) மே நாள் கொடியேற்றி சிறப்புரையாற்றினார். மற்றும் தோழர்கள் த.கா. பரமசிவம் (பொதுக்குழு உறுப்பினர், த.தே.பொ.க.) பழ.இராசேந்திரன்(நகரச் செயலாளர், த.தே.பொ.க.) நா.வைகறை(பொதுச் செயலாளர், த.இ.மு.) இரா.சு.முனியாண்டி(நகரச் செயலாளர், த.இ.மு.) ஆகியோர் உரையாற்றினர்.

கடந்த மார்ச் 27 அன்று தஞ்சை நகராட்சி முற்றுகைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைச் சென்ற தோழர்களுக்கு தோழர் பெ. மணியரசன் துண்டு அணிவித்து சிறப்பு செய்தார். தோழர் கை. ரெங்கசாமி நன்றி கூறினார்.

### தஞ்சை ஒன்றியம்

மொன்னையம்பட்டியில் மே நாள் பொதுக்கூட்டம் 1.5.2000 அன்று தோழர் ஆறுமுகம் (கிளைச் செயலாளர், த.இ.மு) தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் க.பழநிமாணிக்கம் (மாவட்டச் செயலாளர்,த.தே.பொ.க.) தோழர் பி.முருகையன் (ஒன்றியச் செயலாளர், த.தே.பொ.க.) ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் இரத்தினம் (கிளைத் தலைவர், த.இ.மு.) நன்றி கூறினார்.

## தமிழ் வழி கல்விக்குத் தடை
## த.நா.தி.க.
## நீதிமன்ற நகல் எரிப்புப் போர்

ஏப்ரல் 29 அன்று தமிழ்நாடு திராவிடர் கழக சார்பில் கோவையில் தோழர் இராமகிருஷ்ணன் தலைமையில் தமிழ்வழிக்கல்விக்கெதிரான உயர் நீதிமன்ற நகல் எரிப்புப் போராட்டம் நடைப்பெற்றது. நீதிமன்ற நகலை எரிக்க முற்பட்ட 27 பேரை காவல் துறை கைது செய்து மாலையில் விடுதலை செய்தது.

## மேநாள் கொடியேற்று விழா

### சென்னை

சென்னை நங்கநல்லூரில் மேநாள் கொடியேற்று விழா தோழர் ப. ந. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஸ்ரீதர் கொடியினை ஏற்றிவைத்தார். தோழர் ம.செந்தமிழன் (பொதுச் செயலாளர் தமிழக மாணவர் முன்னணி) சிறப்புரையாற்றினார்.

## மணமக்களுக்கு வாழ்த்துக்கள்

தஞ்சை செங்கிப்பட்டியைச் சேர்ந்த பெ. அய்யமுத்து - இரா. வனிதா ஆகியோரின் இல்வாழ்க்கை ஒப்பந்த விழா 26.4.2000 அன்று தஞ்சை த.தே.பொ.க. அலுவலகத்தில் எளிய முறையில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு மணமக்கள் சார்பில் ரூ.200/- நன்கொடை வழங்கப்பட்டது.

மணமக்களுக்கு வாழ்த்துக்கள்.

## கடமை மறந்த காவல் துறை

-முத்துக்குமார்

29.04.2000 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ் வழிக்கல்விக்கெதிரான நீதிமன்ற தீர்ப்பின் நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களையும், 7.5.2000 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டு தடையை மீறி பேரணி செல்ல முயன்றவர்களையும் தமிழகக் காவல் துறை கைது செய்தது.

கைது செய்யப்பட்டவர்களுக்கு முறையாக வழங்க வேண்டிய, மதிய உணவினை காவல் துறை ஏற்பாடு செய்யவில்லை. 7.5.2000 அன்று 300க்கும் மேற்பட்ட குழந்தைகள் பெண்கள் உள்ளிட்டோரைக் கைது செய்துவிட்டு வெறும் 105 உணவுப் பொட்டலங்களை சிதம்பரம் காவல்துறை ஏற்பாடு செய்தது. சென்னை, சிதம்பரம் காவல் நிலையங்களில் கைது செய்யப்பட்டவர்களுக்கு முறையான குடிநீர் வசதி கூட ஏற்பாடு செய்துதரவில்லை. சிதம்பரத்திலாவது திருமணமண்டபத்தில் வைத்தார்கள். ஆனால், சென்னையில் வேப்பேரி காவல் நிலையத்தில் கொளுத்தும் வெயில் ஒருபுறம், குடிக்க நீரில்லாத கொடுமை மறுபுறம். இதைவிடக் கொடுமை சிறுநீர் கழிக்கக்கூட உரிய இடமில்லை. இதனால் பெண்கள் பட்ட கொடுமையோ சொல்லிமாளாது. அங்கும் உணவு சரியாக வழங்கவில்லை.

போராட்டத்திற்கு சென்றவர்களுக்கு உணவு ஒரு பொருட்டல்ல. போராடுவது நமது உரிமை. போராட்டத்தில் கைதானவர்களுக்கு உணவு, குடிநீர் வழங்க் வேண்டியது காவல்துறையின் கடமை. கடமையைச் செய்யாத காவல்துறைக்குக் கைது செய்ய என்ன அருகதை இருக்கிறது?



படிப்பகம்

www.padippakam.com

# நூல் புதிது

## ஒவ்வொரு புல்லையும்

- இன்குலாப்




பக்கம் : 299

விலை : ரூ.100/-

இதுவரை வந்துள்ள கவிஞர் இன்குலாப்பின் கவிதை தொகுப்புகளும், இதழ்களில் வந்த தனிக் கவிதைகளும் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே தொகுப்பாக இந்நூல் வந்துள்ளது.

## மார்க்சியம் அனா ஆவன்னா

- தியாகு

பக்கம் : 60

விலை : ரூ.20/-

மார்க்சியத்தின் மூன்று கூறுகளான 1. இயக்கவியல் 2 மார்க்சியப் பொருளாதாரம், 3 மார்க்சிய அரசியல் ஆகியவையும் காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் வாழ்க்கைக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

## மார்க்சியத்தின் புதிய பரிமானங்கள்

தொகுப்பு : ஞானி

பக்கம் : 208

விலை : ரூ.70/-

எஸ்.வி.இராசதுரை, ஞானி, குணா உள்ளிட்ட தமிழ்த் திறனாய்வாளர்கள் கட்டுரைகள் மற்றும் ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பு இந்நூல். இலக்கியம், சமூகவியல், அரசியல் எனப் பல துறைகளில் இன்று அறியத்தக்க செய்திகள் அடங்கிய தொகுப்பு.

## கல்லும் மண்ணும்

- க. ரத்னம்

பக்கம் : 112

விலை : ரூ.35/-

உழவர் வாழ்க்கையும் கிராமப்புற, சமூக முரண்களும் பின்னிப் பிணைந்த நாவல்.

படைப்பிலக்கியம்

## சில சிகரங்களும் வழித் தடங்களும்

தொகுப்பு: ஞானி

பக்கம் : 125

விலை : ரூ.40/-

நிகழ் இதழில் வந்த நவீனத்துவம், தலித்தியம், பெண்ணியம் முதலியவை குறித்த கட்டுரைத் தொகுப்பு

மேற்கண்டவை அனைத்தும் புதுமலர் படைப்பக வெளியீடுகள்.

கிடைக்குமிடம்:

புதுமலர் படைப்பகம்,
33, திருவள்ளுவர் நகர்,
கீழ இராமநாதபுரம், கோயமுத்தூர் - 641 045
தொ.பே.: 0422-314939

--------

## என் நாட்குறிப்பிலிருந்து

- சுப.வீரபாண்டியன்

நந்தன் இதழில் வெளி வந்த சுவையான வாசகர் கவனத்தை ஈர்த்த சுப. வீ.யின் அனுபவக் குறிப்புகள்.




பக்கம் : 107

விலை : ரூ.35/-

## அறிவுமதி

கவிஞர் அறிவுமதியின் கவிதைத் தொகுப்பு. தமிழ்க் கவிதை உலகில் புதிய உத்திகளை அரங்கேற்றும் கவிஞரின் கவிதைப் பூங்கா.

பக்கம் : 300

விலை : ரூ.100/-

இவை இரண்டும் தமிழோசைப் பதிப்பக வெளியீடுகள்.

கிடைக்குமிடம்:

தமிழோசைப் பதிப்பகம்
797 இ சிரிராம் மோகன் வணிக வளாகம்,
சத்தி சாலை, காந்திபுரம்,
கோயம்புத்தூர் - 641 012
தொ.பேசி. 491733.



படிப்பகம்

www.padippakam.com

# சிதம்பரம் மாநாட்டுத் தடையும் 'தமிழினத் தலைவர்' கருணாநிதியும்

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் திருவாரூர், திருச்செந்தூர், இராணிப்பேட்டை பகுதிகளை அடுத்து கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் மே 7 ஆம் நாள் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. தோழர் கி. வெங்கட்ராமன் (கடலூர் மாவட்டச் செயலாளர்) அவர்களைத் தலைவராகக் கொண்டு மாநாட்டு பணிகள் முடுக்கி விடப்பட்டன. மாநாடு குறித்து நகரெங்கும் விளம்பரம் செய்யப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் வண்ண சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.




மாநாடு ராசி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட பிறகு ஈழத்தில் புலிகள் ஆணையிறவு, முகாமைக் கைப்பற்றினர். சிதம்பரம் மாநாட்டை ஆணையிறவு வெற்றி மாநாடாக திரு நெடுமாறன் (தலைவர் தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு) அறிவித்தார்.

சிதம்பரம் நகரக் காவல்துறை மாநாட்டிற்கு முதல் நாள் ஒலிபெருக்கி வைத்து விளம்பரம் செய்ய அனுமதித்தது.

இந்நிலையில் 6.5.2000 அன்று மாலை சிதம்பரம் காவல்துறை உதவிக் கண்காணிப்பாளர் மாநாடு நடத்த அனுமதி இல்லையென்று அறிவித்தார்.

மாநாட்டுப் பணி தொடர்பாக சித்ம்பரத்தில் முகாமிட்டிருந்த திருவாளர்கள் பழ நெடுமாறன், பெ. மணியரசன், கவிஞர் அறிவுமதி, கி.வெங்கட்ராமன் ஆகியோர் கலந்து பேசி தடையை மீறி நடத்துவது என முடிவு செய்தனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தமிழீழ ஆதரவாளர்களைத் தடுத்து நிறுத்த சிதம்பரம் நகரைச் சுற்றி காவல்துறை தீவிர முகாமிட்டிருந்தது. சிதம்பரம் நகருக்குள் நுழைகின்ற அத்தனை வாகனங்களையும் காவல்துறை அதிரடியாய் சோதனை நடத்தியது. மே 7 திருமண நாள். மாநாட்டுக்கு வந்த வாகனமின்றி பொதுமக்கள் வாகனங்களையும் சோதனையிட்டது.

சிதம்பரம் நகரில் 144 தடை உத்தரவு பிறப்பித்து அடக்குமுறை கட்டவிழ்த்த காவல்துறையின் கெடுபிடிகளை மீறி ஆயிரக்கணக்கானோர் சிதம்பரம் நகரில் அணி அணியாகப் பேரணி நடத்தினர். அனைவரையும் கைது செய்த காவல்துறை சிதம்பரம் தாலுக்கா காவல் நிலையம், அண்ணாமலை நகர் காவல் நிலையம் என மாறிமாறி இழுத்தடித்தது. மே 7 காலையில் பேருந்து நிலையம் முன் சாலையில் மறியல் செய்த திருவாளர்கள் பழ. நெடுமாறன், பெ.மணியரசன், தியாகு, கி.வெங்கட்ராமன், இராசேந்திரசோழன் கி.த.பச்சையப்பன் அறிவுமதி, பூ.அர குப்புசாமி, இறைக் குருவனார் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரையும் காவல் துறை ஒரே இடத்தில் வைக்காமல் இழுத்தடித்த நிலையைக் கண்டித்து கைது செய்யப்பட்டவர்கள் கண்டன முழக்கமிட்டனர். மறுபடியும் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதன் பிறகு அனைவரையும் G.M. வாண்டையார் திருமண மண்டபத்தில் வைத்தனர்.

மாநாடு

வாண்டையார் திருமண மண்டபத்தில் கோ.வி. கணேசன், தெற்குமாங்குடி சௌந்திரராசன், ஈகவரசன் ஆகியோரின் எழுச்சி இசையோடு நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. தோழர் கி.வெங்கட்ராமன் தலைமையில் கரூர் வழக்கறிஞர் பூ. அர. குப்புசாமி மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

கு. சிவப்பிரகாசம் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் வை. பாலசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

த.மா.கா. அழகிரி, வாழப்பாடி இராமமூர்த்தி, துக்ளக் சோ இவர்களுக்குப் பயந்து இம்மாநாட்டை தடை செய்த கலைஞர் இனத் துரோகிப் பட்டத்தை மீண்டும் ஒரு முறை சூட்டிக் கொண்டார்.

பகல் உணவு, முறையாக எல்லோர்க்கும் வழங்கவில்லை. குடி தண்ணீர் வசதி கூடக் காவல் துறையினர் செய்து தரவில்லை. சிறைக்கு அனுப்புவதா விடுதலை செய்வதா என்ற குழப்பம் 8.00 மணி வரை நீடித்தது. பின்னர் விடுதலை செய்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



## த.தே.பொ.க. ஊர்தி நிதி
(முன்னிதழ்த் தொடர்ச்சி)

| | | ரூ. கா. |
|---|---|---|
| 17. | பூதலூர் ஒன்றியத் த.தே.பொ.க. (இரண்டாம் தவணை) | 23,250.00 |
| 18. | சிதம்பரம் த.தே.பொ.க. தோழர்கள் | 10,000.00 |
| 19. | தஞ்சை நகரத் த.தே.பொ.க. (இரண்டாம் தவணை) | 2,100.00 |
| 20. | திருவையாறு ஒன்றிய த.தே.பொ.க. (இரண்டாம் தவணை) | 700.00 |
| 21. | திருத்துறைப்பூண்டி ஒன்றிய த.தே.பொ.க. (இரண்டாம் தவணை) | 1,050.00 |
| 22. | தஞ்சை ஒன்றிய த.தே.பொ.க. (இரண்டாம் தவணை) | 1,200.00 |
| 23. | காஞ்சி த.தே.பொ.க. | 3,500.00 |
| 24. | தமிழர் உறவின் முறை, குடந்தை | 1,000.00 |
| 25. | வழக்கறிஞர் தஞ்சை அ. இராமமூர்த்தி | 1,000.00 |
| 26. | திரு சா. பன்னீர்செல்வம் பட்டுக்கோட்டை | 500.00 |
| 27. | திரு க.லெனின், பட்டுக்கோட்டை. | 100.00 |
| 28. | திரு கோபி. செந்தில்குமார் | 100.00 |
| | முன் வரவு | 31,800.00 |
| | | 76,300.00 |

தொடரும்)


### திருமண வாழ்த்து

பூதலூர் ஒன்றியம் ஆர்க்காடு கிளை த.தே.பொ.க. தோழர் ஆ.சண்முகம் அவர்கள் புதல்வன் செல்வன் இராமனுக்கும் திருமலைசமுத்திரம் எல்லைக்கால் தெரு தோழர் ச. மதியழகன் அவர்கள் மகள் செல்வி பரிமளாவிற்கும் 18.5.2000 அன்று பூதலூரில் சிறப்பாக திருமணம் நடைபெற்றது.

தமிழர் கண்ணோட்டத்திற்கு ரூ.100/- அளிப்பு வழங்கினார்கள். மணமக்களுக்கு வாழத்துக்கள்.


# நேர்மையற்ற தீர்ப்பு நெருப்புக்குத் தீனி

(தமிழ் வழிக் கல்விக்கெதிரான உயர்நீதி மன்றத் தீர்ப்பு குறித்த விரிவான திறனாய்வு)



## பெ. மணியரசன்

### தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி வெளியீடு

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழை மொழிப் பாடமாகவும் பயிற்று மொழியாகவும் கற்பிக்க வேண்டும் என்று தமிழக அரசு வெளியிட்ட ஆணை செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அக்குவேறு ஆணிவேறாக பிரித்துப்போட்டு திறனாய்வு செய்யும் சிறு நூல்.

மொழியைத் தேர்ந்தெடுப்பது பெற்றோர் விருப்பம் என்று ஐ.நா., மனித உரிமை சாசனம் கூறுவதாகத் தவறாகத் தீர்ப்புரையில் மேற்கோள் காட்டப்பட்டிருக்கின்ற சூழ்ச்சியைத் தோலுரித்துக் காட்டி திரிபுவாதத்தை அம்பலப்படுத்துகிறது இந்நூல்.

மதச் சிறுபான்மையினரை மொழிச் சிறுபான்மையினர்போல் கருதி தமிழ் வழிக் கல்வி ஆணை அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது என்று தீர்ப்பில் கூறும் வாதத்தை சான்றுகளோடு முறியடிக்கிறது இந்நூல்

பக்கம் : 21

நன்கொடை : ரூ.5/-

கிடைக்குமிடம்

தமிழர் கண்ணோட்டம்
53(அ) சமீன்தார் குடியிருப்பு,
புது ஆற்றுச் சாலை,
தஞ்சாவூர் - 613 001.


படிப்பகம்

www.padippakam.com



# கொடியேற்றிக் கொண்டாடியது தமிழினம்

- அமரன்

இலங்கையின்
இனவெறி....
கழுத்தறுத்து
கார் டயர்களை
முண்டத்தில் மாலையிட்டு
மூலா மூலைக்கு
தீ மூட்டியது...

நாய்களும்..... நரிகளும்
வெட்டிச் சிதைத்த
வெற்றுடல்களை
கடித்துக் குதறின...

சினைப்பை திறந்து
குத்தீட்கள்
குழந்தைகளைக்
குத்தி எடுத்தன...

பால் தந்த முலையறுத்து
பார்வைக்கு வைத்தது...

வீடுகளும்
விலங்கிட்ட
விடலைகளுடன்
வெடித்துச் சிதறின...

நாற்புறத்தில்
நாளும் நாறியது
நரமாமிசம்...

அறிக்கைகள் தந்து
அகிலமும்... ஐ.நாவும்
அமைதி கண்டன...

பொங்கி எழுந்த
பொடியன்கள்
புலிகளாயினர்...

எல்லை தாண்டிய
இந்தியப்படை
இன்னலுற்ற
தமிழர்களையே
கொன்றது...

ஆயுதங்கள்
ஆள்படையிழந்து
ஊனமுற்று
ஊர் திரும்பியது...

'யாழ்'
ஈழத்தமிழனின் இதயம்
சிங்களவனிடம்
சிறைபட்டது.

புலம்பெயர்ந்து
புரியாமொழியில்
பொருந்தாத் திணையில்
பொருள் கண்டு
ஐந்திணை
மீட்க
அஞ்ஞாமயின்

அடுக்களை
அணைத்தன
கைவளை
கால்
கொலுசை
கழற்றி
எறிந்து...
கரும்புலியாக
கடற்புலியாக...
களமாடினர்...

கடல் பரப்பும்
விண்வெளியும்
விடுதலை பெற்றன

ஓயாத புலிகளின்
முதல் அலையில்
முல்லைத் தீவு...
அடுத்த அலையில்
கிளிநொச்சி...

வன்னித்தடை கடந்த
அலை
ஆனையிறவையும்
அடித்துச் சென்றது



அடுத்து யாழ்...!

செய்வதறியாது செயலாற்ற
சிங்களவனுக்கு
சந்திரிகாவின் 'சன் டிவி'யும்
சனாதன 'ஹிந்து' வும்
கலந்துரையாடலில் கர சேவை...

இலங்கையின்
உயிரற்ற ஒருமைப்பாட்டை
உயிர்ப்பிக்க
இந்தியாவில்
மனிதாபிமான
மகாசண்டி ஹோமம்

பண்டைத்
தமிழரின்
'பாலகன்'
படை
வீரனாவதை...
புறமுதுகிடாப்
போர்க்
கலையைப்
புறநானூறு
போற்றும்...

தமிழன்...
தன் விடுதலையைத்
தானே தேட முயன்ற
தனித்த வீரமே
தர்க்கவியல் தடை....!

ஆயுதப் போரில்
அயலவர்
ஆதரவின்றி
ஆயுத வழங்கலின்றி
ஐ.நா. மன்ற
அவசரக் கூட்டமின்றி
அடையப்போகும்
அரசதிகாரத்தை
அங்கீகரிக்க
ஐ.நாவும்
தடுமாறுகிறது!

போர்க்களவெற்றி
போர் ஆயுதங்கள்
போர்ப் படைகளில்லை
போராளிகளிடமே...!

ஆனையிறவில்
ஆயுதங்களையும்
ஆட்படைகளையும்
விழுங்கித் தீர்த்து
விடுதலைப்புலிகளே...!

கட்டபொம்மனைக்
காவு கொண்டவனை விட
காட்டிக் கொடுத்த
எட்டப்பனே...
இழிபிறவி...

விடுதலைப் போர்கள்
விரோதிகளைவிட
துரோகிகளையே
துடைத்து விடுகிறது.

இனவிடுதலைக்குப்
போராடும்
இயக்கங்களின்
ஆயவுக்கு
தம்பியின்
தலைமையில்
தமிழிலேயே...!
புதிய போர்க்கலை
அகராதி...

பூகோள வரைபடத்தில்
புதுநாடொன்றைக்
கோடு கிழித்துக்
கொடியேற்றிக்
கொண்டாடியது
தமிழினம்...!